
ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஐப்பசி

அக்டோபர் 1979



விலை ரூ-1

ஸ்ரீராமகிருஷ்ண மடம்,
மயிலாப்பூர் :: சென்னை-600 004.

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

பரபரப்பும் ஆரவாரங்களும் நிறைந்த தற்காலச் சூழ்நிலையில், மக்களுக்கு மனச் சாந்தியைத் தரும் அருமருந்தாக இப்பத்திரிகை விளங்குகிறது.

தற்கால மக்களின் ஆன்மிக மறுமலர்ச்சிக்கு ஏற்ற வகையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குரலாக ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் ஒலிக்கிறது.

உங்கள் உள்ளம் உயர, நீங்கள் மேன்மையுற, அவசியம் படிக்கவேண்டிய பத்திரிகை இது.

சந்தா விவரம்

வருட சந்தா (சிறப்பு மலர் உட்பட)	ரூ. 10
ஆயுள் சந்தா	ரூ. 125
தனிப் பிரதி	ரூ. 1

ஆயுள் சந்தாவை மொத்தமாகவோ, பகுதி பகுதியாகவோ, மாதம் ரூ. 10 ஆகவோ செலுத்தலாம்.

ஆயுள் சந்தாதாரர்களாகத் தங்களைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் வருட சந்தாதாரர்கள், தாங்கள் செலுத்தியுள்ள வருட சந்தாவைக் கழித்து மீதம் உள்ள தொகையைச் செலுத்தி, ஆயுள் சந்தாதாரராகத் தங்களைப் பதிவு செய்துகொள்ளலாம்.

ஒரு வேண்டுகோள்

1. பேரன்பிற்குரிய வாசக அன்பர்கள் தங்களின் சந்தாவைச் செலுத்துவதுடன், மேலும் தமது நண்பர்கள் சிலரையும் சந்தாதாரர்களாகச் சேர்த்துத் தருவது ஒரு நல்ல தொண்டாகும். இதன் மூலம் நமக்கும் மற்றவர்களுக்கும் நாம் நன்மையைச் செய்துகொள்கிறோம்.

2. சந்தாதாரர்களை அதிகப்படுத்துவதில் எங்களால் இயன்ற முயற்சி செய்து வருகிறோம். அன்பர்கள் தங்களின் பங்காக இந்தத் தெய்விகக் கைங்கரியத்தில் கல்வி ஸ்தாபனங்கள், சத்சங்கங்கள் முதலியவைகளுக்குப் பத்திரிகை போய்க் கொண்டிருக்கும்படி செய்யலாம். இது ஒவ்வொரு மாதமும் தாங்கள் அளிக்கும் மேலான நன்கொடையாகவும், தங்களை ஞாபகப் படுத்தும் சிறந்த வெகுமதியாகவும் அமையும்.

3. பெரியோர்கள் இந்த வேண்டுகோளைத் தங்களுக்கு ஏதோ சம்பந்தமில்லாதது என்று புறக்கணித்துவிடாமல், மேலும் சந்தாதாரர்களைச் சேர்த்துத் தரும் விஷயத்தில் தங்களால் இயன்ற ஒரு சிறிதளவிற்காகிலும் முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறோம். குறைந்தது மூன்று சந்தாதாரர்களையாவது சேர்த்துத் தருவது மிகப் பெரிய உபகாரமாக இருக்கும். இதன் மூலம் இன்றைய சமுதாயத்தின் சூழ்நிலையில் நல்ல கருத்துகள் வளர அரும்பெரும் தொண்டு செய்தவர்களாகிறீர்கள்.

4. புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பி வைக்கும்போது, புதிய சந்தா என்று குறிப்பிட்டு எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பழைய சந்தாதாரர்கள், தமது கடிதப் போக்குவரத்துகள் எல்லாவற்றிலும் சந்தா எண்ணையும் முழு விலாசத்தையும் அவசியம் குறிப்பிட்டு எழுத வேண்டுகிறோம்.

விவரங்களுக்கு :

தொலைபேசி :
71231

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர் : சென்னை-600 004

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

தொகுதி—59 | அக்டோபர் 1979 | இதழ்—10

பொருளடக்கம்

டெபாசிட் முறை

ஆண்டுதோறும் ரூ. 10 சந்தா செலுத்திப் புதுப்பிப்பதற்குப் பதிலாக ரூபாய் 125 டெபாசிட் செய்துவிட்டால், தொடர்ந்து மாதந்தோறும் ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் பத்திரிகை வந்து கொண்டிருக்கும். பத்திரிகை வேண்டாம் என்று (குறைந்தது ஐந்து வருடங்களுக்குப் பிறகு) கருதும்போது டெபாசிட் செய்த முழுத் தொகையாகிய ரூபாய் நூற்று இருபத்தைந்தையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்,

டெபாசிட் சந்தாவை மொத்தமாகவோ, பகுதி பகுதியாகவோ, மாதம் ரூ. 10 ஆகவோ செலுத்தலாம்.

எழுத்தாளர்களுக்கு

நமது பத்திரிகைக்கு ஏற்புடைய கதை, கட்டுரை, தகவல்கள், (கவிதைகள் அனுப்ப வேண்டாம்) மகான்களின் வாழ்க்கை நிகழ்சிகள் முதலிய எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

மக்களுக்குப் பயன்படுவதாகவும், சுருக்கமாகவும் கருத்தாழம் கொண்டதாகவும் எழுத்தோவியம் அமைவது முற்றிலும் அவசியம். காகிதத்தின் ஒரு பக்கத்தில் மட்டும், வரிக்கு வரி நிறைய இடம் விட்டு, எளிய தமிழ் நடையில் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

பத்திரிகையில் வெளியிடப்படுவதாக இருந்தால், அனுப்பியவருக்கு ஒரு வார காலத்திற்குள்ளாக ஆசிரியர் சார்பாகப் பதில் கிடைத்துவிடும். அவ்விதம் பதில் பெருத அன்பர்கள், போதிய தபால் தலைகளை அனுப்பிவைத்துத் தமது படைப்புக்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

ஆசிரியர்

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

SRI RAMAKRISHNA ASHRAMA,
MORVI RELIEF WORK,
RAJKOT 360 001.

PHONES : 24407, 22085

September 1, 1979

As soon as the information of disaster at Morvi reached us, Shri Ramakrishna Ashrama rushed with immediate help to Morvi in 2½ hours. Since then the Ashrama is continuously serving the people in Morvi and the surrounding villages. Everyday two parties consisting of Swamis and volunteers go to affected areas with relief materials–one team at Morvi proper and another to villages. Ashrama has established one camp at Darbargadh in Morvi. Swamis and volunteers are stationed there to organise the local work. In Morvi, door to door information is collected in the different localities. Care is also being taken to provide assistance to those who are needy but feel shy to ask for help. In the first phase, prepared food in packets were distributed to a large number of victims for 11–12 days. Now dry ration along with utensils clothes and items of daily necessities numbering 20 to 30 are being given. 2,954 families have been served in Morvi city. Some areas have been covered twice. The third round shall start soon.

Uptil now, the Ashrama has assisted 20 villages, namely Lilapur, Navagam, Nani Barar, Moti Barar, Jasapar, Rasangpar, Songadh, Juna Derala. Nava Derala, Naranka, Malia, Mansar, Khevalia, Khakhrala, Mahendragadh, Navagadh, Gungal, Meghpar, Pipalia, Vanalia, etc. Relief operations are continuing.

In Morvi, more than 24 localities have been covered including worst affected areas like–Police Line, Gaghpara, Vajepar Rohidaspara, Lathi Plots, Mochi Sheri, Railway Colony, etc., Clothing, utensils, and other house-hold articles are most urgently required.

Rehabilitation Work:

The Ashrama has decided to take up the rehabilitation work in severely damaged villages and at Morvi. Your active co-operation and donations for this gigantic task are very earnestly solicited. Donations to "SHRI RAMAKRISHNA ASHRAMA, RAJKOT" are exempted from Income-tax.

We, therefore, appeal to every human heart to do their very best for their suffering brothers in this hour of terrible calamity.

Swami Vyomananda
President
Ramakrishna Ashrama, RAJKOT

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை

—திருமூலர்

தொகுதி 59 | சித்தார்த்தி ஞ ஐப்பசி மீ | இதழ் 10

பிரார்த்தனை

मनस्ते पादाब्जे निवसतु वचः स्तोत्रफणितौ, करौ चाभ्यर्चायां श्रुतिरपि कथाकर्णनविधौ ।
तव ध्याने बुद्धिर्नयनयुगलं मूर्तिविभवे परग्रन्थान् कैर्वा परमशिव जाने परमतः ॥

—शिवानन्दलहरी

மநஸ் தே பாதாப்ஜே நிவஸது வச: ஸ்தோத்ரபணிதௌ
கரௌ சாப்யர்ச்சாயாம் ச்ருதிரபி கதாகர்ணநவிதௌ |
தவ த்யாநே புத்திர் நயநயுகலம் மூர்த்திவிபவே
பரக்ரந்தாந் கைர் வா பரமசிவ ஜாநே பரமத: ||

—சிவானந்தலஹரீ

பரமசிவனே! என் மனம், உன் திருவடித் தாமரைகளில் வசிக்கட்டும். என் வாக்கு உன்னையே துதிக்கட்டும். என் இரு கைகளும் உன்னையே பூஜிக்கட்டும். என் இரு காதுகளும் உன் பெருமைகளையே கேட்கட்டும். என் புத்தி, உன் சொருபத்தையே தியானிக்கட்டும். என் இரு கண்களும் உன் தெய்விகத் திருமேனியழகிலேயே நிலை பெறட்டும். அதற்குப் பிறகு எவ்விதம் நான் மற்ற நூல்களை அறிவேன்?

பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொல் பனுவலும்யான்
எண்ணும்பொழுது எளிது எய்தநல்காய்; எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்! சகல கலாவல்லியே!

—குமரகுருபர சுவாமிகள்



ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருள் வாக்கு

ஞாயிறு, ஏப்ரல் 15, 1883

சுரேந்திரருடைய வீட்டுத் தாழ்வாரத்தில் ஸ்ரீராமகிருஷ்ணர் பக்தர்களுடன் அமர்ந்திருந்தார். அவருடைய வருகையால் அந்த இடம் கலையுடன் விளங்கியது. அப்போது நேரம் மாலை ஆறு மணி இருக்கும்.

தாழ்வாரத்திலிருந்து கிழக்குப் பக்கமாகச் சென்றால் பூஜையறையை அடையலாம். அங்கே பூஜையறையில் அழகிய தேவி விக்கிரகம் இடம் பெற்றிருந்தது. தேவியின் திருவடிகளில் செம்பருத்தி மலர்களும் வில்வதளங்களும் அர்ச்சிக்கப் பட்டிருந்தன. தேவியின் கழுத்தில் மலர்மாலை அணிவிக்கப்பட்டிருந்தது.

இன்றைய தினம் மாதா ஸ்ரீஅன்னபூர்ணேசுவரிக்கு* விசேஷபூஜை நடைபெற இருந்தது. சுரேந்திரர் தேவி வழிபாட்டிற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருந்தார். அந்தப் பூஜையில் கலந்துகொள்ளும்படி ஸ்ரீராமகிருஷ்ணரைச் சுரேந்திரர் அழைத்திருந்தார். குருதேவரும் பக்தர்களுடன் வருகை தந்திருந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர், சுரேந்திரரின் வீட்டுக்கு வந்தவுடனே பூஜையறைக்குச் சென்று, தேவியின் விக்கிரகத்தைத் தரிசித்தார். தேவியைப் பணிந்து வணங்கிய பிறகு, அவர் தேவியைப் பார்த்தபடியே கைவிரல்களைக் கொண்டு ஜபம் செய்தார். பக்தர்களும் தேவியைத் தரிசித்து வணங்கிவிட்டு, குருதேவரின் அருகில் நின்றுகொண்டிருந்தார்கள்.

ஸ்ரீராமகிருஷ்ணர் பக்தர்களுடன் தாழ்வாரத்திற்கு வந்தார். அங்கு ஜமக்காளம் விரிக்கப்பட்டிருந்தது. அதன் மீது ஒரு துணியை விரித்துச் சில தலையணைகளையும் வைத்திருந்தார்கள்

குருதேவரைச் சுற்றிலும் பக்தர்கள் விரிப்பின்மீது அமர்ந்தார்கள். ஒரு தலையணையை வசதியாக வைத்துக்கொண்டு சாய்ந்து உட்காரும்படி குருதேவரைச் சில அன்பர்கள் வேண்டினர். ஆனால் அவர் தலையணையருகில் அமராமல் தலையணையைத் தள்ளிவிட்டு அமர்ந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் (பக்தர்களிடம்) : தலையணை மீது சாய்ந்து உட்கார வேண்டுமா! இது என்ன தெரியுமா? இதுதான் அபிமானம். இந்த அபிமானத்தைத் துறப்பது மிகவும் கடினம். விவேகத்தின் மூலம் விசாரம் செய்து நம்மிடம் அபிமானம் சிறிது கூட இல்லை என்று நாம் நினைக்கலாம். ஆனால் அது மறுபடியும் எங்கிருந்தோ வந்து சேர்ந்து விடுகிறது! ஓர் ஆடு வெட்டப்பட்ட பிறகும்கூட அதன் கால்கள் சிறிது நேரம் துடித்துக்கொண்டே தான் இருக்கும். அல்லது கனவில் ஒரு பயங்கரக் காட்சியைப் பார்க்கிறாய்; அது காரணமாகப் பயந்து போய்த் தூக்கம் கலைந்து விழித்துக்கொள்கிறாய்; ஆனால் நன்றாக விழித்துக்கொண்ட பிறகும்கூட, கனவில் பயங்கரக் காட்சியைப் பார்த்ததனால் உன் மார்பு படபடவென்று அடித்துக்கொண்டே இருக்கிறது. நான் என்ற அபிமானமும் அது போன்றது தான். நீ அதை அடித்துத் துரத்தினாலும் மீண்டும் எங்கிருந்தோ அது வந்து சேர்ந்துவிடுகிறது. பிறகு நீ கோபத்துடன் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு, "என்ன! எனக்குச் சரியான மரியாதை காட்டி நடத்த வேண்டாமா?" என்று பிறரைக் குறை சொல்லுவாய்.

கேதார் : 'ஒருவன் புல்லைக் காட்டிலும் பணிவாக இருக்க வேண்டும்; மரத்தைப் போலப் பொறுமையாக இருக்க வேண்டும்' என்று சொல்லப்படுகிறது.

---

* இந்த இதழின் அட்டைப் படமாக ஸ்ரீஅன்னபூரணி வீற்றிருக்கிறாள்.

ஸ்ரீராமகிருஷ்ணர் : என்னைப் பொறுத்தவரையில், நான் என்னைப் பக்தர்களுடைய பாததூசியின் தூசி என்றே கருதுகிறேன்.

அப்போது வைத்தியநாத் உள்ளே நுழைந்தார். அவர் நன்கு கல்வி கற்றவர். மேலும் அவர் கல்கத்தா உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகவும் இருந்தார். வைத்தியநாத், குருதேவரைக் கைகூப்பி வணங்கிவிட்டு, ஒரு பக்கமாக அமர்ந்துகொண்டார்.

சுரேந்திரர் (ஸ்ரீராமகிருஷ்ணரிடம் வைத்தியநாத்தைச் சுட்டிக்காட்டி) : இவர் என் உறவினர்

ஸ்ரீராமகிருஷ்ணர் : அப்படியா, பார்ப்பதற்கு நல்ல இயல்பு கொண்டவராகத் தென்படுகிறார்.

சுரேந்திரர் : இவர் உங்களிடம் சில விஷயங்களைப்பற்றிப் பேச வேண்டுமாம். அதற்காகத்தான் வந்திருக்கிறார்

ஸ்ரீராமகிருஷ்ணர் (வைத்தியநாத்தைப் பார்த்து) : நீ எதையெல்லாம் பார்க்கிறாயோ அது எல்லாமே ஆண்டவனுடைய சக்திதான். ஆண்டவனுடைய சக்திதான் இப்படியெல்லாம் வெளிப்பட்டுக்கொண்டிருக்கிறது. கடவுளுடைய சக்தி இல்லாவிட்டால் ஒருவரும் எதையும் செய்ய முடியாது. ஆனால், கடவுளின் சக்தி எல்லா இடங்களிலும் ஒரேமாதிரி சரிசமமாக வெளிப்படுவதில்லை என்ற விஷயத்தையும் நீ நினைவில் வைக்க வேண்டும். "கடவுள் ஒருசிலருக்கு மட்டும் விசேஷமாகச் சக்தியைக் கொடுத்திருக்கிறாரா?" என்று வித்யாசாகரர் ஒரு சமயம் என்னைக் கேட்டார். அதற்குப் பதிலாக நான், "கடவுள் ஒரு சிலருக்குக் குறைவாகவும் மற்றும் சிலருக்கு அதிகமாகவும் சக்தியைக் கொடுக்காமலிருந்தால், பிறகு உங்களைப் பார்ப்பதற்கு நாங்கள் ஏன் இவ்வளவு தூரம் வரப்போகிறோம்? உங்களுக்கு என்ன இரண்டு கொம்புகளா முளைத்திருக்கின்றன?" என்று கூறினேன். கடவுள் எங்கும் நிறைந்தவர் என்ற நிலையில் எல்லா உயிர்களிலும் குடிகொண்டிருக்கிறார். ஆனால் அவருடைய சக்தி வெளிப்படுவதில் உயிர்களுக்கிடையில் வேறுபாடு இருக்கவே செய்கிறது.

வைத்தியநாத் : சுவாமி, எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. மனிதனுக்குச் சுதந்திரம் (சுயாதீன இச்சை) இருப்பதாகச் சொல்கிறார்கள். மனிதன் நினைத்தால் நல்ல காரியமும் செய்யலாம், கெட்ட காரியமும் செய்யலாம் என்று சொல்கிறார்கள். இது உண்மைதானா? உண்மையாகவே நமக்கு எதை வேண்டுமானாலும் செய்யக்கூடிய சுதந்திரம் இருக்கிறதா?

ஸ்ரீராமகிருஷ்ணர் : எல்லாம் கடவுளின் சித்தத்தையே (ஈசுவராதீனம்) பொறுத்திருக்கிறது. இந்த உலகம் கடவுளின் லீலையாகும். சிறியது பெரியது, பலமுள்ளவன் பலமில்லாதவன், நல்லது கெட்டது, நல்லவன் கெட்டவன் — என்று இவ்விதம் அவர் பலவற்றைச் சிருஷ்டித்திருக்கிறார். இது எல்லாமே அவருடைய மாயை, அவருடைய விளையாட்டுத்தான். ஒரு தோட்டத்தில் பலவித மரங்கள் இருக்கின்றன; அவை எல்லாம் மரங்கள்தாம்; ஆனால் அவை எல்லாமே ஒன்று போலவே சரிசமமாக இல்லாமலிருப்பதை நீங்கள் கவனித்திருப்பீர்கள்.

இறைவனை அடையாத வரையில், மனிதன் தனக்குச் சுதந்திரம் இருப்பதாக நினைத்துக்கொண்டிருக்கிறான். இந்த அஞ்ஞானத்தையும் மனிதனிடம் இறைவனே சிருஷ்டித்திருக்கிறார். அப்படி இல்லாவிட்டால் உலகில் பாவம் அதிகரித்துவிடும். மனிதனுக்குப் பாவத்தைப்பற்றிய பயமே இல்லாமல் போய்விடும், பாவத்திற்கு உரிய தண்டனையும் இருக்காது.

ஆனால், கடவுளை அடைந்தவனுடைய மனநிலை என்ன தெரியுமா? 'நான் யந்திரம், நீ யந்திரத்தை இயக்குபவன்; நான் வீடு, நீ வீட்டில் குடியிருப்பவன்; நான் தேர், நீ தேரோட்டி. நீ எப்படி இயக்குகிறாயோ அப்படியே நான் இயங்குகிறேன். நீ எப்படிப் பேச வைக்கிறாயோ அப்படியே நான் பேசுகிறேன்' என்று அவன் நினைக்கிறான்.

ஸ்ரீராமகிருஷ்ணர் (வைத்தியநாத்திடம்): விவாதிப்பது நல்லதல்ல. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

வைத்தியநாத் : ஆம், சுவாமி. விவாதிப்பதில் கொண்டுள்ள விருப்பம் ஞானம் உதித்ததும் மறைந்துபோகிறது.

ஸ்ரீராமகிருஷ்ணர் சிரித்துக்கொண்டே, "தேங்க்யூ (Thank you)" என்று ஆங்கிலத்தில் இனிமையாகக் கூறினார். அது கேட்டுக் கூடியிருந்த பக்தர்களும் சிரித்தனர்.

ஸ்ரீராமகிருஷ்ணர் (வைத்தியநாத்திடம்) : நீங்கள் ஆன்மிக வாழ்க்கையில் முன்னேறுவீர்கள். கடவுளைப் பற்றி யாராவது ஒருவர் சொன்னால், மக்கள் அவர் சொல்வதை நம்புவதில்லை. 'நான்

இறைவனைத் தரிசித்திருக்கிறேன்' என்று மகான் ஒருவர் சொன்னால், அப்போதும்கூடச் சாதாரண மக்கள் அந்த மகான் சொல்வதை ஏற்றுக்கொள் வதில்லை. 'இவர் உண்மையில் பகவானைத் தரிசித்த வராக இருந்தால் எனக்கு அந்தப் பகவானை இவர் காட்டட்டுமே!' என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் நாடி பிடித்துப் பார்ப்பதை ஒரே நாளில் ஒருவன் கற்றுக்கொள்ள முடியுமா? வைத்தியரோடு சேர்ந்து பல நாள் சுற்றி அலைய வேண்டும். பிறகு தான் கப நாடி எது, வாயு நாடி எது, பித்த நாடி எது என்று தெரிந்துகொள்ள முடியும். நாடி பார்ப்ப தையே யார் தொழிலாக வைத்திருக்கிறார்களோ, அப்படிப்பட்டவர்களோடு சேர்ந்து பழக வேண்டும்' (எல்லோரும் சிரித்தனர்.)

இந்த நூல் எந்த எண்ணைச் சேர்ந்தது என்று எல்லோராலுமே கண்டுபிடித்துச் சொல்ல முடியுமா? நூல் வியாபாரம் செய்ய வேண்டுமானால், அந்த வியாபாரம் செய்பவர்களோடு சில நாள் தங்கி யிருந்து பழக வேண்டும். பிறகுதான் எது நாற்ப தாவது நம்பர் நூல், எது நாற்பத்தொன்றாவது நம்பர் நூல் என்று சட்டென்று பிரித்துச் சொல்ல முடியும்.

* * *

இரவு சுமார் ஒன்பதரை மணி இருக்கும். ஸ்ரீ அன்னபூரணியின் தெய்விகச் சாந்நித்யம் அங்கு நிறைந்திருந்தது. தேவியின் முன்பு ஸ்ரீராமகிருஷ் ணர் பக்தர்களோடு நின்றுகொண்டிருந்தார்.

சுரேந்திரர், ராக்கால், கேதார், ம-, ராம், மன மோகன் ஆகியவரோடு மற்றும் பல பக்தர்களும் அங்கிருந்தனர் அவர்கள் அனைவரும் குருதேவ ருடன் சேர்ந்து பிரசாதம் உட்கொண்டனர். எல் லோருக்கும் திருப்தி ஏற்படும் வகையில் சுரேந்திரர் விருந்து வைத்திருந்தார்.

குருதேவர் இப்போது தட்சிணேசுவரம் திரும்ப இருந்தார். பக்தர்களும் தங்கள் வீடுகளுக்குத் திரும்பத் தயாரானார்கள். எல்லோரும் பூஜையறை யில் எழுந்தருளியிருந்த தேவியின் திருவுருவத்தின் முன்பு வந்து கூடினார்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் (சுரேந்திரருக்குத் தேவியின் திருவுருவத்தைச் சுட்டிக்காட்டி): ஆகா! இந்த இடம் எவ்வளவு அழகாக இருக்கிறது! ஜகன்மாதா வின் பிரகாசம் இந்த இடம் முழுவதையும் பிரகா சித்துக் கொண்டிருப்பது போன்று இருக்கிறது! தேவி யின் இத்தகைய தரிசனம் உள்ளத்தில் தெய்விகப் பரவசத்தை நிரப்புகிறது. உலக ஆசைகளும் துன் பங்களும் மறைந்தேவிடுகின்றன.

அப்படியானால் அருவக் கடவுளின் தரிசனம் ஒருவனுக்குக் கிடைக்கவே இயலாத ஒன்று என்ன? அப்படியல்ல. பரம்பொருளை அந்த விதத்திலும் தரி சிக்க முடியும். ஆனால், லௌகிக எண்ணங்களின் சாயல் ஒருசிறிது இருந்தால்கூடப் பரம்பொருளை அருவ நிலையில் தரிசிக்க முடியாதுதான். பண்டைக் கால ரிஷிகள் எல்லாவற்றையும் துறந்துவிட்டு, அகண்ட சச்சிதானந்தமாகிய பிரம்மத்தைத் தியா னித்து வந்தனர்.

இந்தக் காலத்துப் பிரம்மஞானிகள்* 'அசையாத பொருளே, சித்கனப் பொருளே!' என்று கடவுளைக் குறித்துப் பாடுகிறார்கள். ஆனால் இது எனக்கு மிக வும் வறண்டதாகவே படுகிறது. இப்படிப் பாடும் அவர்களே கடவுள் ஆனந்தத்தைச் சுவைப்ப தில்லை என்று தோன்றுகிறது. வெல்லப்பானகத் தைப் பருகியே திருப்தியடைந்துவிட்டவன் கற் கண்டுப் பானகத்தைத் தேடவும் மாட்டான்.

நீங்கள் ஜகன்மாதாவின் இந்தத் திருவுருவத் தைத் தரிசித்து எவ்வளவு மகிழ்ச்சியடைகிறீர்கள், பாருங்கள். ஆனால் 'நிராகாரம், அருவம்' என்று எப்போதும் சொல்லிக்கொண்டிருப்பவர்கள் எதை யுமே பெறுவதில்லை. அவர்கள் தெய்விகத்தை உள் ளேயும் உணர்வதில்லை, வெளியேயும் உணர்வ தில்லை.

* * *

குருதேவர் மீண்டும் ஜகன்மாதாவின் திருவுருவத் தின் முன்பு பணிந்து வணங்கினார். பிறகு படிக் கட்டுகளின் வழியாக அவர் கீழே இறங்கி வரும் போது ராக்காலிடம் மெல்லிய குரலில், ''ராக்கால், என் செருப்பு எங்கே இருக்கிறது? இருக்கிறதா, இல்லை அது தொலைந்து போய்விட்டதா?'' என்று கேட்டார்.

குருதேவர் வண்டியில் ஏறிக்கொண்டார். சுரேந்திர ரும் மற்றப் பக்தர்களும் அவருக்கு வணக்கம் செய் தனர். நிலவின் ஒளியை அந்த நேரத்திலும் சாலை யில் காண முடிந்தது. குருதேவர் ஏறியிருந்த வண்டி தட்சிணேசுவரத்தை நோக்கிப் புறப்பட்டது. *

* ஸ்ரீராமகிருஷ்ணர் இங்குப் பிரம்ம சமாஜத்தவர்களைப் 'பிரம்மஞானிகள்' என்று குறிப்பிடுகிறார்.



அன்னபூரணி

அன்னபூரணி என்றவுடனே நமக்கு முதலில் நினைவுக்கு வருவது இரண்டு. ஒன்று, காசி க்ஷேத்திரம்; மற்றொன்று, ஸ்ரீ சங்கரபகவத்பாதர் இயற்றிய அன்னபூர்ணு ஸ்தோத்திரம்.

புராண வரலாறு

ஸ்காந்த மகா புராணத்தில் ஒரு பகுதியாக வரும் அருணுசல மாகாத்மியத்திலும், மார்க்கண்டேய புராணத்தின் அனுபந்தமாக அமைந்த காமாட்சி விலாஸத்திலும் அன்னபூரணியின் வரலாறு பற்றிய கதை இடம் பெற்றுள்ளது. அதை ரமண பகவான் ஜகதீச்வர சாஸ்திரிக்கு 30-1-48 அன்று கூறியதாக ஸ்ரீ ரமண மகரிஷியின் அருள்வாக்கில் காண்கிறது. ஸ்ரீ ரமண பகவான் கூறிய அந்த வரலாறு தமிழாக்கம் செய்யப்பட்டுக் கீழே தரப்படுகிறது:—

ஒரு காலத்தில் சிவபெருமான் கைலாஸ சிகரத்தில் சுகமாக அமர்ந்திருந்தார். அப்போது பார்வதி தேவி பின்புறமாக வந்து விளையாட்டாக அவர் கண்களைப் பொத்திஞள். ஈசனின் வல-இடக் கண்களாகச் சூரியனும் சந்திரனும் விளங்குகிருர்கள். ஆதலால் இப்போது சூரிய சந்திரர்கள் ஒளி இழந்தனர். உலகம் முழுவதும் அந்தகாரத்தில் ஆழ்ந்தது. மக்கள் பீதியுற்றனர். பக்தர்கள் தங்களை இந்த ஆபத்திலிருந்து மீட்கும்படி சிவபிரானைப் பிரார்த்தித்தனர். நிலைமையை உணர்ந்த பரமேச்வரன் தமது அக்கினிமயமான நெற்றிக் கண்களைத் திறந்து ஒளி உண்டாக்கி ஜனங்களைக் காத்தார். பார்வதிதேவி பயந்து, தன் கைகளை அவர் கண்களிலிருந்து எடுத்தாள்.

பரமேச்வரன் ஒன்றும் சொல்லாவிடினும், தேவி நடுநடுங்கிவிட்டாள். ஈச்வரன் சாந்தமாகக் கூறிஞர்: ‘‘தேவி! உனக்கு இது ஒரு கேளிக்கையாக இருந்தது; ஆனல் இந்த உன் விளையாட்டினுல் உலகம் முழுவதும் ஒளியிழந்தது. ஜனங்கள் எவ்வளவு கஷ்டமடைந்தனர் பார்த்தாயா? உன் விளையாட்டு உனக்கு ஒரு குறுகிய நொடியே நீடித்திருந்த போதிலும் உலகிற்கு இது மிகவும் நீண்டகாலம் என்று அறியாயா? ஏன் இந்தக் குழந்தைத்தனம்?’’

ஈச்வரனின் இந்தச் சிறிதே சினம் கலந்த வசனங்களைக் கேட்ட தேவி தன் பிழையை உணர்ந்தாள்; வெட்கிஞள்; தன் தவற்றுக்குப் பிராயச்சித்தமாகத் தவம் இயற்ற அனுமதி வேண்டிஞள்.

பரமேச்வரன் சொன்ஞர்: ‘‘நீ லோகமாதா — உன்னை எந்தப் பாவமும் பீடிக்காது. தவத்துக்கு அவசியமில்லை.’’

ஆஞலும், இதனுல் திருப்தியுருத தேவி, தன் செய்கை உலகிற்கு ஒரு பாடமாக இருக்க வேண்டுமென்பதற்காகவே தவம் இயற்ற விரும்பிஞள்.

நாதனின் அனுமதி பெற்று, தென்திசைநோக்கிப் புறப்பட்டாள்.

அச்சமயம் காசிநகரத்தில் மழையின்மை காரணமாகப் பஞ்சம் தலைவிரித்தாடியது. மக்கள் படும் துன்பத்திற்கிரங்கிய தேவி, தன் தெய்விகச் சங்கல்பத்தினுல் ஒரு பெரும் மாளிகையை எழுப்பிஞள்; ‘அன்னபூரணி’ என்ற பெயர் தரித்து, ஒருபோதும் காலியாகாத அக்ஷய பாத்திரத்திலிருந்து மக்களுக்கு அந்தச் சத்திரத்திலிருந்து உணவு வழங்கிஞள். ராஜ்யம் முழுவதும் அவள் புகழ் பரவியது.

இதற்கிடையில், தன் களஞ்சியம் காலியாகி விட்டதை உணர்ந்த அரசன் செய்வதொன்றும் தெரியாமல் திகைத்திருந்தான். அன்னபூரணியின் அதிசயச் செயலைக் கேள்வியுற்று வியந்த அவன், அவளைச் சோதிக்க விரும்பி, சிறிதளவு தானியங்களை அவளிடமிருந்து கடனுகக் கேட்டனுப்பிஞன். கடன் கொடுக்க இயலாதென்றும், வேண்டுமானுல் சாப்பிடுவதற்கு அவன் வரலாமென்றும் மறுமொழி

கிடைத்தது. அவள் திறமையைச் சோதிக்க, மாறு வேடமணிந்து அரசனும் அவன் மந்திரிகளும் சத்தி ரத்தை அடைந்து, உண்ண ஆரம்பித்தனர். உணவு எடுக்க எடுக்கக் குறையாததைக் கண்டு, அரசன் இந்த அற்புதம் தெய்வ சக்தியாலேயே நிகழ்த்த இயலும் என்று தெளிந்தான். சாப்பிட்ட பிறகு அன்னபூரணியின் செம்மலர்ப் பாதங்களில் பணிந்து வேண்டினன்: "திவ்விய மாதாவே! என் அரண்மனைக்கு எழுந்தருளி, எங்களுக்கு முக்தி அளிக்க வேண்டும்."

அவன் பக்தியினால் சந்தோஷமடைந்த தேவி தன் நிஜ சொருபத்தைத் தரித்துக் கூறினள்: "குழந்தாய்! உன் பக்தியில் ஆனந்தமடைகிறேன். நான் இவ்வளவு காலம் இங்கே தங்கியதாலேயே, பஞ்சத்தின் கொடுமையிலிருந்து உன் தேசம் காப்பாற்றப்படும். வருணன் தன் கருணையைப் பொழிவான். நான் இங்கு இன்னும் அதிக காலம் இருப்பதற்கில்லை. தவம் இயற்றத் தென்திசை நோக்கி நான் கிளம்ப வேண்டும். மகிழ்ச்சியுடன், குடி மக்களை நன்ருகப் பரிபாலனம் செய்."

"இருந்தாலும், நாங்கள் வணங்குவதற்கு உன் தெய்விகச் சாந்நித்தியம் இங்கு இருக்க வேண்டும்" என்று வேண்டினன் அரசன்.

திவ்விய மாதா இதற்கு இணங்கினள். அங்கே தன் ஒப்பற்ற சாந்நித்தியத்தை ஏற்படுத்தினள். பிறகு தென்திசை நோக்கிப் புறப்பட்டாள்.

இதுவே காசி அன்னபூரணி தேவியின் தோற்றத் துக்கும் புகழுக்கும் ஆதி காரணம்.

மேலும் சில வரலாறுகள் :

ஜகன்மாதாவே தன் திருமகளாகப் பிறக்க வேண்டும் என்று காத்தியாயன மகரிஷி தவம் இயற்றினர். சிவபெருமானின் அருள் கட்டளைக் கிணங்கவும், காத்தியாயனரின் நீண்டகால விருப் பத்தை நிறைவேற்றவும், அம்பிகை எனப்படும் லலிதாம்பாள் பதரிகாச்ரமத்தில் காத்தியாயனரின் முன் ஸ்வயம்புக் குழந்தையாகத் தோன்றினள். அந்தக் குழந்தையைக் காத்தியாயன மகரிஷி அம் பிகை என்று அறிந்தே போற்றி வளர்த்தார். காத்தி யாயன மகரிஷி வளர்த்ததனல் தேவிக்குக் காத்தியாயனி என்ற பெயர் உண்டாயிற்று.

காசி க்ஷேத்திரத்தில் பஞ்சம் தோன்றியது. அப் போது பதரிகாச்ரமத்திலிருந்து காத்தியாயனரிடம் விடைபெற்றுக்கொண்டு தேவி காசியில் பஞ்சமும் வறுமையும் நீங்க அன்னபூரணியாக எழுந் தருளினள்.

காத்தியாயனி காசி க்ஷேத்திரத்தில் அன்ன பூரணியாகப் பன்னிரண்டு ஆண்டுகள் வீற்றிருந்து அங்கு நிலவிய கடும் பஞ்சத்தைப் போக்கினள். காசியை விட்டுப் புறப்படும் முன் அவள் காசி ராஜனுக்கு முக்தி தந்தாள். அதாவது அன்னபூரணி இகம்—பரம் இரண்டுக்கும் உதவுபவள் ஆவாள். பிறகு அவள் அங்கிருந்து காஞ்சீபுரம் வந்து காஞ்சி காமாட்சி எனப்பட்டாள். எனவே லலிதாம்பாளை யும் காமகோட்டத்துக் காமாட்சியையும் ஒன் ருகவே சொல்லுவது மரபு. அன்னபூரணியை லலிதாம்பாளின் உபாங்கம் என்றும் சொல்வதுண்டு.

படைப்புக் கடவுளாகிய பிரம்மதேவனின் கர்வத் தைப் போக்கச் சிவபெருமான் அவனுடைய ஒரு தலையைப் பிடுங்கிவிட்டார். அந்த நிகழ்ச்சி, அனைவரின் தலையெழுத்தையும் நிர்ணயிக்கும் பிரம்மனின் தலையெழுத்தையே நிர்ணயிப்பவராகச் சிவனூர்தாம் விளங்குகிறார் என்ற நுட்பமான உண்மையை உலக மக்களுக்கு உணர்த்துவதாக அமைந்தது. பிடுங்கிய தலையைச் சிவனுர் தமது பிக்ஷா பாத்திரமாக வைத்துக்கொண்டார். அந்தப் பிக்ஷா பாத்திரத்தில் முதல் பிக்ஷையைச் சுமங்கலி யாக உள்ள நல்ல ஒரு மாதரசியிடம் பெற வேண்டும். (மணிமேகலை தனக்குக் கிடைத்த அக்ஷய பாத்திரத்தில் கற்புக்கரசியாகிய ஆதிரை யிடம் முதல் பிக்ஷை ஏற்றுள் என்று மணிமேகலை காப்பியம் கூறுகிறது.) சிவனுருக்கு முதல் பிக்ஷையை இடக்கூடிய தகுதி யாருக்கு இருக்க முடியும்? சிவனுர் அன்னபூரணியிடம் சென்று பிரம்ம கபாலமாகிய தமது பிக்ஷா பாத்திரத்தில் முதல் பிக்ஷையை ஏற்ருர்.

மகா வாசிஷ்டம் என்னும் நூல் இருநூறு சுலோகங்களில் சிவபெருமானின் ஆனந்த தாண்ட வத்தை மிகவும் அற்புதமானது என்றும் பயங்கர மானது என்றும் வர்ணிக்கிறது. சிவனுர் புரிந்த அந்த நடனத்தை மாதா ஸ்ரீஅன்னபூரணி ஒருத்தி மட்டுமே சாட்சியாக இருந்து கண்டாள். பிறர் காணுத அற்புதமும் பயங்கரமும் நிறைந்த சிவனுரின் தாண்டவக் காட்சியைத் தான் ஒருத்தியாகவே இருந்து சிறிதும் பயப்படாமல் அன்னபூரணி கண்டு ரசித்தாள். அது காரணமாகவே லலிதா ஸஹஸ்ர நாமத்தில் தேவி, 'மஹேச்வர-மஹாகல்ப-மஹா தாடண்வ-ஸாக்ஷிணி' என்று போற்றப்பெறுகிருள்.

வனவாசத்தில் இருந்த பாண்டவர்கள், "எங்களுக்கு உணவுப் பஞ்சம் வராமல் எப்போதும் உணவு கிடைக்க வேண்டும். அதற்கு நாங்கள் என்ன செய்யலாம்?" என்று கிருஷ்ண பரமாத்மா

விடம் கேட்டனர். அவர்களுக்குக் கண்ணபிரான் பின்வரும் பதிலைக் கூறினர்: ''திரேதாயுகத்தில் ஸ்ரீராமர், சீதையோடும் லட்சுமணனோடும் கானகத்தில் இருந்தார். அப்போது ஸ்ரீராமர் அகஸ்திய முனிவரிடம், 'சுவாமி! எங்களுக்குக் குறைவில்லாமல் அன்னம் கிடைப்பதற்கு என்ன வழி?' என்று கேட்டார். அகஸ்தியர், 'மகாக்ஷேத்திரமாகிய வாராணஸியில் கோவில்கொண்டுள்ள மாதா அன்னபூரணியைத் தியானித்தால் உணவுப் பஞ்சம் என்பதற்கே இடமின்றிக் குறைவில்லாமல் அன்னம் கிடைக்கும்' என்ருர். அகஸ்தியரின் அறிவுரைக்கிணங்க ஸ்ரீராமர், சீதை, லட்சுமணன் ஆகியோர் அன்னபூரணியைப் பிரார்த்தித்துப் பலன் அடைந்திருக்கிருர்கள்.''

அன்னபூரணியின் திருவுருவம்

அன்னபூரணியின் திருமேனி பொன்னிறம் கொண்டது. ஆகவே தன் உடல்நிறம் காரணமாக எப்போதும், இதயக்குகையில் ஒளிரும் ஆத்மாவைப் போல அவள் ஜகஜ்ஜோதியாகப் பிரகாசித்தபடியே இருக்கிருள். பொன் ஆபரணங்களையும் மலர்மாலைகளையும் அணிந்து அமர்ந்திருக்கும் அவள் கருணைக்கும் அன்புக்கும் அருளுக்கும் உறைவிடமாகத் திகழ்கிருள். அவள் தன் வலக்கையில் பொன் அகப்பையையும், இடக் கரத்தில் மணிகள் இழைத்த தங்கக் கிண்ணத்தில் பால் சோறும் வைத்திருக்கிருள்.

பிரபஞ்சத்திலுள்ள அத்தனை உயிர்களுக்கும் உணவு படைக்கும் தயாபரியாக அன்னபூரணி விளங்குகிருள். அந்தப் பெருமாட்டியிடம் எல்லா ஜீவராசிகளின் பொருட்டு, அனைத்து உயிர்களின் பிரதிநிதியாக இருந்து சிவனர் பிக்ஷை ஏற்கிருர். உண்மையில் எல்லா உயிர்களுக்கும் அன்னம் பாலிப்பவள் அன்னபூரணிதான். அவளுடைய அந்த அருட்செயலே சிவனுருக்கு உணவிடுவதாக உருவகமாகக் கூறப்படுகிறது.

'ஹே தேவி! இரண்டற்று ஒன்ருக இருக்கும் சைதன்யத்தை நீ விளையாட்டிற்காக ஜீவன் என்றும் சிவன் என்றும் பெயருள்ள இரு கூருகப் பிரித்து, சிவத்திற்கு ஜீவத்தன்மையைக் கொடுக்கிருய். மறுபடியும் இந்த ஜீவனைச் சிவமாகவே செய்துவிடுகிருய்' என்று சிவாம்சமாக அவதரித்த ஸ்ரீஆதிசங்கரர் தமது தேவிபுஜங்கத்தில் குறிப்பிடுகிருர். சிவன் ஜீவனுகத் தோன்றிக்கொண்டிருக்கிறது. எனவே ஜீவனுக்கு உணவு படைப்பது உண்மையில் சிவனுக்கு உணவு படைப்பதே ஆகும். சிவனுருக்கு உணவிடுவதன் மூலம் அகிலத்திற்கும் அவள் உணவு படைத்துவிடுகிருள்.

மரத்தின் வேரில் பாய்ச்சப்படும் நீர் மரம் முழுவதையும் அடைகிறது. மரம் முழுவதற்கும் வேர் பிரதிநிதியாக இருந்து தண்ணீரைக் கிரகிக்கிறது. பிரபஞ்சத்தில் சகல ஜீவராசிகளாகவும் விளங்குபவர் சிவபெருமான். சிவபிரானுக்கு உணவு இடுவதன் மூலம் சகல ஜீவராசிகளுக்குமே தேவி உணவு இட்டுவிடுகிருள்.

விசாலாட்சியும் அன்னபூரணியும்

'கஞ்சி காமாட்சி, மதுரை மீனுட்சி, காசி விசாலாட்சி' என்று மூன்றையும் சேர்த்தே சொல்வது தமிழ் மரபு. காஞ்சியில் காமாட்சிக்கும் மதுரையில் மீனுட்சிக்கும் எவ்வளவு முக்கியத்துவம் உண்டு என்பது தமிழ் நாட்டவர்களாகிய நமக்கு மிகவும் நன்ருகத் தெரியும். ஆனல் அதுபோலவே காசியில் விசாலாட்சிக்கு முக்கியத்துவம் உண்டா என்ருல், இல்லை. காசியில் முக்கியத்துவம் பெற்றுள்ள தேவி, மாதா அன்னபூரணியே ஆவாள்.

காசியில் விசாலாட்சிக்கென்று ஒரு சிறிய தனிக் கோவில் இருக்கவே செய்கிறது. ஆனல் காசியில் வாழும் பலருக்கு அந்த ஊரில் விசாலாட்சிக்கு அப்படி ஒரு கோவில் இருக்கிறது என்ற விவரம் தெரியாது. காசி விசுவநாதரையும் அன்னபூரணியையும் சாரிசாரியாக உலகின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் வந்து தரிசிக்கிருர்கள். காசிக்கு யாத்திரையாகச் செல்லும் தமிழர்கள் மட்டுமே 'காசி விசாலாட்சி' என்று கேள்விப்பட்டோமே என்ற எண்ணத்தில், அந்தக் கோவிலை விசாரித்துக்கொண்டு அங்கே போகிருர்கள். இதைப் பற்றிக் காசிவாசிகளாகிய தமிழர்களைக் கேட்டால், 'விசாலாட்சிதான் இங்கு அன்னபூரணி என்று வேறு பெயரில் இருக்கிருள்' என்று சொல்வார்கள். அப்படி நினைப்பதில் தவறும் இல்லைதான். பக்தர்களைப் பொறுத்த வரையில் பெயரில் உள்ள வேறுபாடு பொருளற்றதே ஆகும்.

தமிழ்நாட்டில் சிவகாசியிலுள்ள விச்வநாதர் சிவன்கோவிலில் விசாலாட்சிக்குச் சந்நிதி இருக்கிறது. ஆனல் அந்த ஊரில் அன்னபூரணிக்குத் தனிக்கோவிலோ சந்நிதியோ கிடையாது. இமயமலையிலுள்ள உத்தர காசியில் விசுவநாதருக்கும் அன்னபூரணிக்கும் தனித்தனிக் கோவில்கள் இருக்கின்றன. அங்கு விசாலாட்சிக்குத் தனிக்கோவிலோ சந்நிதியோ கிடையாது.

குற்ருலத்திற்கு அருகிலுள்ள தென்காசியில் விச்வநாதருக்குக் கோவில் இருக்கிறது. ஆனல்

அங்கு அன்னபூரணிக்கோ விசாலாட்சிக்கோ தனிக் கோவிலோ சந்நிதியோ இல்லை.

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த நன்னிலம் தாலுக்காவில் ஸ்ரீவாஞ்சியம் என்ற சிவக்ஷேத்திரம் இருக்கிறது. இந்தப் புண்ணிய க்ஷேத்திரத்தை, குப்தகாசி என்றும் சிறப்பித்துச் சொல்லுகிறார்கள். இங்கே காசியைப் போல விச்வநாதருக்குக் கோவில் உண்டு; ஆனால் அன்னபூரணிக்கோ விசாலாட்சிக்கோ தனியாகக் கோவிலோ சந்நிதியோ இருப்பதாகத் தெரியவில்லை.

மதுரையிலுள்ள மீனாட்சி கோவிலில், காசி விச்வநாதருக்கும் விசாலாட்சிக்குமாகச் சேர்ந்து தனியாகப் பெரிய ஒரு சந்நிதி இருக்கிறது. அங்கு அன்னபூரணிக்குச் சந்நிதி இல்லை.

காஞ்சிபுரத்திலுள்ள காமகோட்டத்தில் காயத்திரி மண்டபத்திற்கு வெளியில் அன்னபூரணிக்குச் சந்நிதி இருக்கிறது. சுரட்டப்பள்ளியிலுள்ள ஸ்ரீ பள்ளிகொண்டேச்வரர் ஆலயத்தில் அன்னபூரணி இடம் பெற்றிருக்கிறாள்.

கேரள மாநிலத்திலுள்ள செருக்குன்றம் என்ற ஊர் அன்னபூரணிக்கென்றே அமைந்த க்ஷேத்திர மாக விளங்குகிறது. அங்கே கோயில் கொண்டுள்ள அன்னபூரணியே அந்த ஊரின் எஜமானியும் ஆவாள்.

'காசியில் இறந்தால் முக்தி' என்று சொல்லப் படுகிறது. காசியில் உயிர் துறக்கும் ஜீவனுடைய பந்தபாசங்களை விசாலாட்சி தகர்த்துவிட, சிவ பெருமான் முக்தி வழங்குகிறார் என்ற கருத்தில் ஒரு தமிழ்ப்பாடல் உண்டு. காசியில் வாழ்பவர்களும், வடநாட்டவர்களும், காசியில் உயிர்துறக்கும் ஜீவ னுடைய பந்தபாசங்களை மாதா அன்னபூரணி தகர்த்துவிட, சிவபெருமான் முக்தி வழங்குகிறார் என்று கருதுகின்றனர்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் காசி க்ஷேத்திரத் திற்கு விஜயம் செய்தபோது, அங்கு உயிர் துறக் கும் ஜீவனுடைய பந்தபாசங்களை ஜகன்மாதா தகர்த்துவிட, சிவபெருமான் முக்தி வழங்குவதாக ஒரு ஞானக்காட்சியைக் கண்டார். அவர் அந்தக் காட்சியைப்பற்றி 'ஜகன்மாதா' என்று பொது வாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

சக்தி பீடங்கள்

தக்ஷனின் யாகத்திற்குப் பிறகு ஸதிதேவியின் திருமேனி 51 துண்டுகளாக விழுந்தது. அப்படி விழுந்த இடங்களை 51 சக்தி பீடங்கள் என்று சாக்தநூல்கள் கூறும்போது, அவற்றில் ஒன்றாகக் காசி விசாலாட்சியைக் குறிப்பிடுகின்றன.

வேறு சில சாக்த நூல்கள் சக்திபீடங்கள் 64 என்று கூறும்போது, காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, அயோத்தி அன்னபூரணி, அவிமுக்தம் (காசி) விசாலாட்சி என்று கூறுகின்றன. அவை, அயோத்தியுடன் அன்னபூரணியைச் சேர்த்துக் கூறுவது வியப்புக்கு உரியதாகவே இருக்கிறது. ஏனெனில், அங்கே சமீபகாலத்தில் கட்டப்பட்ட அம்மாவாம் கோவிலிலுள்ள பல சந்நிதிகளில் ஒன்றாக அன்னபூரணிக்கு ஒரு சந்நிதி இருக்கிறது என்பதைத் தவிர, வேறு கோவிலோ சந்நிதியோ அன்னபூரணிக்கு அயோத்தியில் இருப்பதாகத் தெரியவில்லை.

காசியில் அன்னபூரணி கோவில்

விசுவநாதர் ஆலயத்திற்கு அடுத்ததாகக் காசி யில் முக்கியத்துவம் வாய்ந்த கோவில் மாதா ஸ்ரீ அன்னபூரணியின் கோவில்தான். இந்த இரண்டு கோவில்களும் காசி க்ஷேத்திரத்தில் இரண்டு கண் களாகவே மதிக்கப்பெறுகின்றன. காசிப் பட்ட ணத்தின் தன்னிகரற்ற தலைவியாக விளங்கும் அன்னபூரணி, தன் பதியாகிய விசுவநாதருக்கு அருகிலேயே கோவில்கொண்டிருக்கிறாள்.

விசுவநாதர் ஆலயமும் அன்னபூரணி ஆலயமும் அடுத்தடுத்து மிகவும் அருகிலேயே அமைந்திருக் கின்றன. அவற்றிற்கு இடையில் சில கடைகள் இருக்கின்றன. இரண்டு கோவில்களுக்கும் இடை யிலுள்ள தூரம் 400 அடிகள்கூட இல்லை.

காசியிலுள்ள விசாலாட்சி ஆலயத்தின் நிர்வாகம் முழுவதையும் தமிழ்நாட்டைச் சேர்ந்த நாட்டுக் கோட்டை நகரத்தார் நிர்வகித்து வருகிறார்கள். அவர்கள், ஸ்ரீவிசுவநாதர் ஆலயத்தில் நடைபெறும் பூஜைகளில் முக்கியப் பங்கு வகிப்பதோடு, ஸ்ரீ அன்னபூரணி ஆலயத்தில் நடைபெறும் பூஜைக்கும் நாள்தோறும் பூஜாதிரவியங்கள் அளித்து வருகின் றனர்.

இப்போதுள்ள அன்னபூரணி ஆலயம் 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மராட்டிய மன்னர்களால் கட்டப்பட்டதாகும். அந்த ஆலயத்தின் நுழை வாயிலில் சுவரில் 'ஸ்ரீஅன்னபூரணேச்வரி கோவில்' என்ற வாசகம் முறையே ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளில் மட்டும் எழுதப்பட்டிருப் பதைக் காணலாம்.

சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய நுழைவாயிலைக் கடந்து சென்றால் ஆலயத்தின் உட்புற மண்டபம்

(மத்திய மண்டபம்) வருகிறது. அந்த மண்டபத்தில் நுழைவாயிலிலும் தமிழில் எழுதப்பட்ட ஒரு போர்டு தொங்குகிறது. ஆனல் அந்த போர்டில் எழுதப்பட்டுள்ள வாக்கிய அமைப்பு சரியாக இல்லாததால், அதன் கருத்தை நம்மால் புரிந்துகொள்ள இயலவில்லை. யாரோ, ஏதோ உபயமாக எப்போதோ கொடுத்திருக்கிருர் என்று மட்டுமே அந்த போர்டிலுள்ள சில சொற்களைக் கொண்டு நாம் ஊகிக்க முடிகிறது.

கருவறைக்கு முன்னல் அமைந்திருக்கும் மத்திய மண்டபத்தைக் கோவிலின் வெளியே இருந்தும் காண முடியும். கருவறையைச் சுற்றியுள்ள பிராகாரத்தின் நான்கு பக்கங்களிலும் திண்ணை என்று சொல்லத் தக்க தாழ்வாரம் உள்ளது. பக்தர்கள் இங்கு அமர்ந்து ஜபம், தியானம், பாராயணங்களில் ஈடுபட மிகவும் வசதியான இடமாக இது விளங்குகிறது.

மத்திய மண்டபத்தைச் சுற்றி அமைந்திருக்கும் பிராகாரத்தை வலம் வரும் பக்தர்கள் கர்ப்பக்கிருகத்திற்கு எதிரிலுள்ள அதே மத்திய மண்டபத்தை அடைவார்கள். அந்த மண்டபத்திலிருந்தே பக்தர்கள், காசிபுரத்தின் ஒப்பற்ற எஜமானியாக இருந்து அருளாட்சி செலுத்தும் அன்னபூரணியைத் தரிசிக்கிருர்கள்.

வடநாட்டுக் கோவில்களில் பொதுவாகக் கருவறைக்குள் பக்தர்கள் செல்லலாம். அந்த விதிக்கு மாருக அன்னபூரணி ஆலயத்தில் கர்ப்பக்கிருகத்தில் பக்தர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. கருவறையிலுள்ள தேவியின் கவசம் அணிவிக்கப்பெற்ற முகம் மட்டுமே மக்கள் தரிசிக்கக்கூடியதாக இருக்கிறது. அன்னபூரணியின் சிலா வடிவத்தை முழுமையாகக் காண இயலாத வகையில் முகத்திற்குக் கீழே ஆடையாபரணங்களும் மலர்மாலைகளும் காண்கின்றன. என்ருலும் காசிபுராதீச்வரி அங்கு நம் போலவே உயிர்கொண்டு அமர்ந்திருப்பது போன்ற உணர்வு நம் உள்ளத்தில் வழிந்தோடுவதால், தேவியின் முகம் மட்டுமே தென்படுவதை ஒரு குறையாகவே நாம் உணர்வதில்லை. மாருக 'சேர வாரும் ஜகத்தீரே!' என்று அனைவரையுமே அங்கு அழைக்க வேண்டும் என்ற உணர்வுதான் நம் உள்ளத்தில் நிறைகிறது.

கருவறையில் எழுந்தருளியுள்ள அன்னபூரணிக்கும் மத்திய மண்டபத்தில் தரிசிக்க நிற்கும் பக்தர்களுக்கும் உள்ள இடைவெளி மிகமிகக் குறைவு. அதாவது அதிகப்பட்சம் 15 அடி தூரம்தான் இடைவெளி இருக்கும். ஆகவே கருவறைக்குள் நுழைய அனுமதிக்கப்படாதது ஒரு குறையாக இருப்பதில்லை. வெளியிலுள்ள மத்திய மண்டபத்திலிருந்தே மாதா அன்னபூரணியைக் கண்ணுரத் தரிசிக்கலாம்.

மனிதனுக்கு மிகவும் அவசியமான தேவை உணவு, உடை, உறைவிடம் என்பார்கள். இம்மூன்றினுள்ளும் உணவை முதலாவதாகச் சொல்லியிருக்கிருர்கள். கலியுகத்தில் மனிதனின் உடல் அன்னத்தையே சார்ந்திருப்பதாக ஒரு சம்ஸ்கிருத சுலோகம் கூறுகிறது. 'பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்' என்பது பழமொழி. 'பசித்த வயிற்றுக்கு மதமில்லை' என்று ஸ்ரீராமகிருஷ்ணரும் சுவாமி விவேகானந்தரும் கூறியிருக்கிருர்கள். ஸ்ரீராமகிருஷ்ணரின் குருவாகிய தோதாபுரியின் குருபாய் சாமுலிபுரி என்பவர் காசியில் வாழ்ந்தார். அவருக்கு யாரோ ஒரு பணக்காரர் நாள்தோறும் உணவு அனுப்பிக்கொண்டிருந்தார். அந்தப் பணக்காரர் ஒரு சமயம் சாமுலிபுரியை நேரில் சந்தித்து, "உங்களுக்கு நான்தான் உணவு அனுப்பிக்கொண்டிருக்கிறேன்" என்ருராம். உடனே சாமுலிபுரி கடுகடுத்த குரலில், "மாதா அன்னபூரணிதான் எனக்கு உணவு அனுப்பிக்கொண்டிருக்கிருள்" என்று கூறினுராம். சாமுலிபுரியைப் போல, 'மாதா அன்னபூரணிதான் நமக்கு உணவிடுகிருள்' என்ற உண்மையைப் புரிந்துகொண்டவர்களும் நம்மில் சிலராவது இருக்கத்தான் செய்கிருர்கள்.

'மனிதன் உணவினுல் மட்டுமே வாழ்வதில்லை' என்று கிறிஸ்தவம் கூறுவதற்கேற்ப, வயிற்றுக்கு உணவு கேட்பதோடு மாதா அன்னபூரணியிடம் ஞானத்தையும் வைராக்கியத்தையும் நாம் பிரார்த்திக்க வேண்டும் என்பதற்காகவே ஸ்ரீசங்கரர் அன்னபூர்ணு ஸ்தோத்திரம் இயற்றியுள்ளார்.

அன்னபூரணி எழுந்தருளியிருக்கும் கருவறைக்கு முன்னல் உள்ள மத்திய மண்டபத்தில் எப்போதும் பக்தர்கள் தேவியைத் தரிசிக்க வருவதும் போவதுமாக இருப்பதைப் பார்க்கலாம். அங்கே சிலர் அன்னபூர்ணு ஸ்தோத்திரம் முழுவதையும் சொல்லிக்கொண்டே பிரத்தியட்ச மகேச்வரியாகிய தேவியைத் தரிசிக்கிருர்கள். வேறு சிலர், 'ஸர்வ மங்கலமாங்கல்யே......ஸர்வஸ்யார்த்திஹரே தேவி நாராயணி நமோஸ்து தே' என்ற தேவி மாகாத்மிய சுலோகங்கள் மூன்றையும் சொல்கிருர்கள். கிட்டத்

தட்ட அங்கு வருபவர்கள் எல்லோருமே சொல்லக் கூடிய அன்னபூர்ணு ஸ்தோத்திரம் வருமாறு.—

*அன்னபூர்ணே ஸதா பூர்ணே
சங்கரப்ராணவல்லபே |
ஜ்ஞா*நவைராக்யஸித்யர்த்தம்
பிக்ஷாம் தேஹி ச பார்வதி ||

இந்தச் சுலோகம் ஒரு நாளைக்குக் குறைந்த பட்சம் ஆயிரம் தடவைகளாவது அந்த மண்டபத்தில் ஒலிப்பதைக் கேட்கலாம். இந்தச் சுலோகம் பழக்கமில்லாத புதிய யாத்திரிகர்கள், பண்டா இந்தச் சுலோகத்தைச் சொல்லத் திருப்பிச் சொல்ருர்கள்.

மத்திய மண்டபம் பெரியதாகவும் வசதியாகவும் இருப்பதால் பக்தர்கள் தேவியை நோக்கி அங்கேயே அமர்ந்து ஜபம், தியானம், பாராயணங்களில் ஈடுபடுகிருர்கள். மத்திய மண்டபத்திற்குத் தெற்கிலுள்ள கூரை வேய்ந்த தாழ்வாரத்தில் சில சமயங்களில் மாலைநேரத்தில் துளசி ராமாயணப் பிரவசனம் நடைபெறுகிறது. பிரவசனம் செய்பவரோடு பொதுமக்களும் சேர்ந்து பிரவசனத்தின் முடிவில், 'ஹர ஹர மகாதேவ சம்போ, காசி விச்வநாத கங்கே' என்று நாமாவளி பாடுகிருர்கள்.

கருவறையின் வாயிலில் சன்னியாசி ஒருவர் அமர்ந்து, நீண்ட ஒரு கரண்டியில் தேவியைத் தரிசிக்க வரும் பக்தர்களுக்குப் பால்கலந்த தீர்த்தப் பிரசாதம் வழங்குவதைக் காணலாம். (சில சமயங்களில் அந்தச் சன்னியாசிக்குப் பதிலாகக் காசிப் பிராம்மணர் ஒருவர் அமர்ந்திருக்கிருர்.) அவரருகில் வைக்கப்பட்டிருக்கும் செந்தூரம் குழைத்த பாத்திரத்திலிருந்து பக்தர்கள் செந்தூரத்தை எடுத்து நெற்றியில் அணிந்து கொள்கிருர்கள். அந்தப் பாத்திரத்திற்கு அருகில் வேருெரு பாத்திரத்தில் அரிசியை வைத்திருக்கிருர்கள். அதிலிருந்து சிறிது அரிசியைப் பக்தர்கள் பிரசாதமாக எடுத்து வாயில் போட்டுக்கொள்கிருர்கள்.

அன்னபூரணியே காசி க்ஷேத்திரத்தில் பூரண சாந்நித்தியத்துடன் கோவில்கொண்டிருப்பதால், அந்த ஊரில் எவரும் பட்டினியால் வருந்தும் நிலை ஏற்படுவதில்லை என்று சொல்லப்படுகிறது. வயிருர உணவுபடைக்கும் அன்னபூரணியை அன்னபூர்ணு ஸ்தோத்திரதால் நாள்தோறும் வாயார வாழ்த்துபவர்களுக்கு ஒருநாளும் உணவுப் பஞ்சம் வராது என்பது பலருடைய அனுபவ உண்மையாகும்.

* இந்தச் சுலோகத்தைச் சாப்பிடும்போது ஜபிப்பது என்ற ஒரு நல்ல பழக்கமும் சிலரிடையே இருந்து வருகிறது.

காசிக்கே சென்று அன்னபூரணியைத் தரிசிக்காவிட்டாலும், இருக்கிற இடத்திலிருந்தாவது அந்தச் சுலோகங்களைச் சொல்லி அன்னபூரணியை வழிபடலாம்.

தீபாவளி

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் காசிக்கு விஜயம் செய்தபோது, தங்கமயமாக விளங்கும் அன்னபூரணியை ஒரு ஞானக்காட்சியில் கண்டார். அவர் ஞானக்காட்சியில் கண்ட திருவுருவத்தில் எல்லாவித மக்களுமே தன்னைத் தரிசிக்கத் தீபாவளியின் போது அன்னபூரணி, தங்க அன்னபூரணியாகக் காசி க்ஷேத்திரத்தில் தரிசனம் தருகிருள்.

எப்போதும் ரிசர்வ் பேங்கில் வைக்கப்பட்டிருக்கும் தங்க அன்னபூரணியின் விக்கிரகம், வருடத்தில் ஒரு முறை தீபாவளியின்போது மட்டும் வெளியே எடுக்கப்பட்டு, விசேஷ பூஜைகளை நடத்திக் காசியில் பக்தர்களின் தரிசனத்திற்குக் கோவிலில் வைக்கப்படுகிறது. தீபாவளி முடிந்ததும் மீண்டும் ரிசர்வ் பேங்கிற்கே தங்கத்தாலான அந்த விக்கிரகம் திரும்பிவிடுகிறது.

தீபாவளியின்போது தங்க அன்னபூரணியைக் காசியில் தரிசிப்பது விசேஷத்திலும் விசேஷமாகக் கருதப்படுகிறது. தீபாவளியை முன்னிட்டுக் காசி மாநகரமே மூன்று நாட்களுக்கு விழாக்கோலம் பூண்டு தெய்விகக் களையோடு திகழ்கிறது.

மூன்ருவது நாள், விதம் விதமான இனிப்புப் பண்டங்களை மலைபோல அன்னபூரணியின் ஆலயத்தில் குவிக்கிருர்கள். அன்னகூடம் என்று சொல்லப்படும் இந்த நிகழ்ச்சி என்றென்றுமே வரப்பிரஸாதியான அன்னபூரணி தீபாவளியின்போது கற்பகதருவாகவே மாறி, கேட்கும் வரங்களை எல்லாம் பொழிந்துவிடுகிருள் என்பதை ஸ்தூலமாகவே பாமரர்களும் புரிந்துகொள்ளும்படி அமைக்கப்பட்ட ஒன்ருகும்.

தீபாவளிச் சமயத்தில் மட்டுமே தங்க அன்னபூரணியைத் தரிசிக்க முடியும். தங்க அன்னபூரணியைத் தரிசிக்கும் வாய்ப்பு இல்லாத யாத்திரிகர்கள், தீபாவளியின்போது எடுக்கப்பட்ட தங்க அன்னபூரணியின் புகைப்படங்களைக் காசியிலுள்ள படக்கடைகளில் பெற்று ஆறுதல் பெறுகிருர்கள்.

பிறந்தது முதல் நமக்கு நாள்தோறும் உணவு படைக்கும் அன்னபூரணியைத் தீபாவளிச் சமயத்திலாவது, அன்னபூர்ணு ஸ்தோத்திரத்தால் ஆராதிக்கலாம்தானே!

*



விதுரநீதி

'நம்பி'

அடக்கம், சுத்தம், தெய்வ காரியங்கள், மங்கள காரியங்கள், பிராயச்சித்தங்கள், பலவிதமான விவகாரங்கள் இவற்றை எல்லாம் எவன் நாள் தோறும் செய்கிருனே அவன் மேன்மை அடைகிருன். தேவர்கள் அவனுக்கு மேன்மேலும் மேன்மையைச் செய்கிருர்கள்.

சம அந்தஸ்து உள்ளவர்களோடு திருமணம் செய்பவன், இழிவானவர்களுடன் திருமணத் தொடர்பு வைத்துக்கொள்ளாதவன், சமமானவர்களுடன் நட்பு, உணவு, உரையாடல் ஆகியவற்றை வைத்துக் கொண்டிருப்பவன், குணங்களால் மேம்பட்டவர்களைக் கௌரவிக்கிறவன் பண்டிதன் ஆவான்; நல்ல காரியங்களைச் செய்தவன் ஆவான்.

தன்னை அடுத்தவர்களுக்குப் பகுத்துக் கொடுத்து விட்டு மிதமாக உண்பவன், காரியங்களை நிறையச் செய்துவிட்டுச் சிறிது நேரமே தூங்குகிறவன், பகைவராயினும் இரப்போருக்குக் கொடுப்பவன், நல்ல மனமுடையவன்-இத்தகையவர்களைத் தீமைகள் விட்டு விலகிப் போகின்றன.

எவன் விரும்பிச் செய்யும் செயல்களையும், மாருகச் செய்யும் செயல்களையும் பிறர் சிறிதும் அறிவதில்லையோ, எவனுடைய ரகசியங்கள் வெளிப்படாமல் இருக்கின்றனவோ, நல்ல முறையில் செயல்கள் ஆற்றப்படுகின்றனவோ, அவனை விட்டு எந்த ஒரு காரியமும் நழுவிப்போவதில்லை.

பிற உயிர்களிடத்தில் அன்போடும் அமைதியோடும் நடப்பவன், உண்மையுள்ளவன், மென்மையான சுபாவமுடையவன்; தக்கவர்களை மதிப்பவன்; சுத்தமான எண்ணமுடையவன் இத்தகைய பண்புகளை உடையவன், ஒளிவிடும் பெரிய ரத்தினம் போல் உறவினர்களிடையே பிரகாசிக்கிருன்.

எவன் செய்யத்தகாத காரியத்தைச் செய்ய நாணப்படுகிருனே, அவன் உலகத்தாருக்கு ஆசானுக ஆகிருன். அளவற்ற ஒளியும் நல்ல மனமும் நிலையான சித்தமும் அவனுக்கு ஏற்படுகின்றன. சூரியன் போல் அவன் பேரொளியுடன் திகழ்கிருன்.

அறிவுரைகள்

புண்ணியத்தையோ பாவத்தையோ, விருப்பமானதையோ அல்லது வெறுப்பதற்குரியதையோ, அவமானத்தையோ விரும்பாதவன் பிறர் கேளாமல் எதையும் சொல்லக் கூடாது.

கபடத்தின் மூலமாகவும் கெட்ட உபாயங்கள் மூலமாகவும் கைகூடுகிற காரியங்களில் மனதைச் செலுத்தக் கூடாது.

பயனை அளிக்காத காரியங்களில் யுக்தியையும் உபாயத்தையும் செலுத்தி, விவேகி மனதைச் சிரமப்படுத்திக்கொள்ளக் கூடாது.

பயன் தரக்கூடிய காரியங்களைப் பயன் கிட்டும் வகையில் நிச்சயித்துச் செய்ய வேண்டும்; படபடப்பாகச் செய்யக் கூடாது.

செயல்களின் விளைவுகளையும், விபரீத விளைவுகளையும், தன் வளர்ச்சியையும் நன்ருக அறிந்து தீரன் செய்ய வேண்டும்; அல்லது செய்யாமல் விட்டுவிட வேண்டும்.

கோட்டை, வளர்ச்சி, தேய்வு, செல்வம், நகரம், சேனை இவற்றின் தன்மைகளை அறியாதவனிடத்தில் ராஜ்யம் நிலைப்பதில்லை.

சிலவற்றை நன்கு அறிந்து, அறம் பொருள் ஆகியவற்றில் எவன் முயற்சியுடன் இருக்கிருனே, அவன் ராஜ்யத்தை அடைகிருன்.

ராஜ்யம் கிடைத்துவிட்டதே என்று தகாதபடி நடக்கக் கூடாது.

அழகிய வடிவத்தை முதுமை கெடுத்துவிடுவது போல, அடங்காமை செல்வத்தைக் கெடுத்து விடும்.

ஆகாரத்தில் விருப்பமுள்ள மீன், சிறந்த உணவால் மறைக்கப்பட்டிருக்கும் இரும்புத் தூண்டிலைக் கவனிப்பதில்லை. ஆசைப்பட்டு ஆகாரத்தைத் தின்னப்போய் ஆபத்தில் மாட்டிக்கொள்கிறது.

உடல்நலத்தை விரும்புகிறவன், உண்ண முடிவனவும், உண்ணத் தக்கனவும், உண்டபின் ஜீரணிப்பனவுமான உணவுகளையே சாப்பிட வேண்டும். *



மெய்ஞ்ஞான ஒளி பிறக்கும் புனிதத் தீபாவளிப் புதுநாள்

'வால்மீகி'

அகில உலகிலும் உள்ள இந்துக்கள் உற்சாகத்துடன் கொண்டாடும் பண்டிகைகளிலே தீபாவளிப் பண்டிகை முக்கியமானது. ஐப்பசி மாதக் கிருஷ்ணபட்ச சதுர்த்தசியன்று நரகாசுரன் என்ற கொடிய அரக்கனை ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா வதம் செய்ததை நினைவூட்டும் பண்டிகையே இந்தத் தீபாவளிப் பண்டிகை.

திருமாலின் பல அவதாரங்களிலே வராக (அதாவது பன்றி) அவதாரமும் ஒன்று. வேதங்களை ஹிரண்யாக்ஷன் என்ற அசுரன் பாதாளத்தில் கொண்டுபோய் மறைத்தபோது பகவான் வராக ரூபியாகப் பூமியைக் குடைந்து பாதாளம் போய் ஹிரண்யாக்ஷனை வதைத்து வேதங்களை மீட்டு வந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் பகவானுடைய ஸ்பரிசத்தினால் பூமிக்குப் பிறந்தவன் நரகாசுரன் என்ற அசுரன். இவன் தேவேந்திரனின் தாயாகிய அதிதி தேவியின் நவரத்தின குண்டலங்களையும், வருணனின் குடையையும், மணிபர்வதம் என்ற தேவஸ்தானத்தையும் கைப்பற்றிக்கொண்டு கொடுங்கோலாட்சி நடத்தி வந்தானும்.

தேவேந்திரன் கேட்டுக்கொண்டதற்கிணங்க, கண்ணபிரான் சத்தியபாமையுடன் கருடன்மீது ஏறி, நரகாசுரனின் தலைநகரமான பிராக்ஜோதிஷபுரம் சென்றார். முதலில் நரகாசுரனின் தளபதியான முரன் என்ற அசுரன் போருக்கு வந்தான். அவனை வதம் செய்ததனால் கண்ணனுக்கு முராரி என்ற பெயர் ஏற்பட்டது. பிறகு நரகாசுரன் பெரும் படைகளோடு போருக்கு வந்தான். கடுமையான யுத்தத்திற்குப் பின்னால் கண்ணன் சக்கராயுதத்தை ஏவி, நரகாசுரனின் தலையைத் துண்டித்தார்.

தன் பிள்ளையைத் தன் கையினாலேயே கொன்ற புத்திரஹத்தி தோஷத்துக்கு ஆளாகக்கூடாது என்பதற்காகக் கண்ணன் மயங்கி விழுவதைப் போலத் தேரில் சாய்ந்துவிட்டதாகவும், அவருடைய வில்லைச் சத்தியபாமை எடுத்து நாணேற்றி நரகாசுரனைக் கொன்றதாகவும் ஒரு வரலாறு உண்டு.

அப்போது பூமாதேவி அங்கே தோன்றிக் கண்ணனைப் பல வகைகளிலும் தோத்திரம் செய்தாள். தீயவனான தன் பிள்ளை இறந்ததற்கு அவள் சிறிதும் வருந்தவில்லை. அந்தத் தீயவன் ஒழிந்த தினத்தை உலக மக்கள் ஒரு பண்டிகையாகக் கொண்டாட வேண்டுமென்று அவள் பகவானிடம் கேட்டுக் கொண்டதனாலேயே, நரகாசுரன் இறந்த ஐப்பசி மாதக் கிருஷ்ணபட்ச சதுர்த்தசி என்ற நரகசதுர்த்தசி அழைக்கப்படலாயிற்று. அன்று புனித நீராடி, மறுநாள் புத்தாடை அணிந்து கொண்டாடும் வழக்கம் இந்துக்களிடையில் ஏற்பட்டது.

பரிசுத்தமான ஆத்மா பூமியில் மனிதனாகப் பிறந்தவுடனே காமம், கோபம், லோபம் முதலான பல தீக்குணங்கள் அதைப் பற்றிக்கொண்டுவிடுகின்றன. இவைதாம் மனிதனை நரகத்திற்கு இட்டுச் செல்லும் தீய சக்திகள். கர்மஸ்தானமாகிய பூமியில் பிறந்தபின்பே ஆத்மாவை இந்தத் தீய குணங்கள் அலைக்கழிப்பதனால் இந்தத் தீக்குணங்களின் உருவான நரகாசுரன் பூதேவியின் பிள்ளையாகப் புராணங்களில் வர்ணிக்கப்பட்டிருக்கிறான். தீக்குணங்கள் சுட்டுப் பொசுக்கப்பட்ட பின்பு ஆத்மா பரிசுத்தமடைந்து பரமானந்த நிலையை எய்திவிடுவதனால் அது கொண்டாடத் தகுந்த விசேஷ நிகழ்ச்சி. அஞ்ஞான இருள் நீங்கி மெய்ஞ்ஞான ஒளி பிறக்கும் நாளே தீபாவளித் திருநாள். ஆகையால்தான் இன்றைக்கும் வடநாட்டவர்கள் தீபாவளித் திருநாளன்று இருளை விரட்டும் ஒளி விளக்குகளை வரிசைவரிசையாக வீடுதோறும் ஏற்றி வைத்துத் தீபாவளித் திருநாளைக் கொண்டாடுகிறார்கள். தமிழகத்தில் கொண்டாடும் திருக்கார்த்திகையைப் போல வடநாட்டில் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்பெறுகிறது.

கேதாரகௌரீ விரதம்

கேதாரகௌரீ விரதம்தான் தீபாவளிப் பண்டிகை என்கிறது சைவசித்தாந்தம். தேஜோமயமான சிவ

[319-ஆம் பக்கம் பார்க்க]

தேவி வழிபாடும் அதன் தத்துவமும்

பிரம்மசாரி முத்துக்குமார்



1. துர்க்கை

இறைவனைக் கருணை மிக்க தெய்வமாக வணங்கும் இந்து மதம் பயங்கர வடிவத்திலும் அவனை வணங்கும் முறைகளை வகுத்திருக்கிறது. இறைவன் இருமைகளுக்கு அப்பாற்பட்டவன். நன்மையைக் கண்டு மகிழ்வதும், பயங்கரத்தைக் கண்டு அஞ்சுவதும் மனித இயல்பு. இருமைகளைக் கடந்த இறைவனை அடைய விரும்பும் சாதகன் அவற்றைக் கடந்து ஸ்திதபிரக்ஞனின் நிலையை அடைய வேண்டும்.

தங்கச் சங்கிலியாக இருந்தாலும் இரும்புச் சங்கிலியாக இருந்தாலும் இரண்டுமே பிணைத்துப் பந்தப்படுத்தக் கூடியவையே ஆகும். அது போன்று, நல்ல செயல்களாக இருந்தாலும் தீய செயல்களாக இருந்தாலும், இரண்டுமே ஆத்ம சாதகனை உயர்நிலையை அடையவிடாமல் பிணைக்கக் கூடியவையே ஆகும். ஆகவே, தீமையை விலக்குவதோடு நன்மையையும் விலக்கி, அனைத்தையும் பிரம்மமாக உணர்வதே மனித வாழ்க்கையின் உன்னத இலட்சியமாகும். எனவேதான் இந்து மதத்தில் நன்மையும் தீமையும், அருளும் பயங்கரமும் இணையான இடத்தைப் பெற்றிருக்கின்றன.

குணமயி

துர்க்கை மகிஷாசுரமர்த்தினியாகக் காட்சி தருகிறாள். சிங்கத்தின்மீது நின்றுகொண்டு அவள் ஓர் அசுரனைப் பயங்கரமாகத் தாக்குகிறாள். கருமையான நிறத்தையுடைய அசுரன் ஆணவம், அறியாமை, மயக்கம், கோபம் ஆகிய தமோ குணத்தின் உருவமாக விளங்குகிறான். பச்சை நிறம் கொண்ட துர்க்காதேவி சிவப்பு நிறத்தில் சேலை அணிந்திருக்கிறாள். எட்டுக் கைகளிலும் பலவிதமான பயங்கர ஆயுதங்களை ஏந்தியிருக்கிறாள். உலகிலுள்ள எல்லா ஆற்றல்களும் ஒன்று திரண்டு வந்ததுபோன்று விளங்குகிறது தேவியின் திருவுருவம். குணமயி என்று அழைக்கப்படும் துர்க்காதேவி இங்கே தன் தொழிலுக்கு ஏற்ப ரஜோ குணத்தின் உருவமாகத் திகழ்கிறாள்.

துர்க்கையின் இரண்டு பக்கங்களிலும் சரஸ்வதி, லட்சுமி, விநாயகர், சுப்பிரமணியர் ஆகியோர் காட்சி தருகிறார்கள். மேலே சிவபெருமான் ஆழ்ந்த நிஷ்டையில் பரசிவமாகத் தம்மில் தாமாக மூழ்கியிருக்கிறார். அவருடைய புறத்தோற்றமாகிய வெண்ணிறம் சத்துவகுணத்தின் அடையாளமாகும். ஆனால் அவருடைய ஆழ்ந்த நிஷ்டை குணங்களைக் கடந்த பரிபூரண நிலையைக் குறிக்கிறது.

மகிஷாசுரமர்த்தினி

துர்க்கை ரஜோகுணத்தின் வடிவமாகத் திகழ்கிறாள். அரக்கன் தமோகுணத்தின் வடிவமாக விளங்குகிறான். இருவருக்கும் கடும்போர் நடைபெறுகிறது. முடிவில் அரக்கனின் தலை இரத்த வெள்ளத்தில் உருள்கிறது. தமோகுணத்தின்

[318-ஆம் பக்கத் தொடர்ச்சி]

பெருமானை ஐப்பசி மாதக் கிருஷ்ணபட்ச சதுர்த்தசியில் கும்பத்தில் ஸ்தாபனம் செய்து, தீப தூப நிவேதனங்கள் செய்து வழிபட வேண்டும் என்று திருமுருக கிருபானந்தவாரியார் தீபாவளி பற்றிய தமது கட்டுரையொன்றில் தெரிவித்திருக்கிறார். வடநாட்டவர்கள் தீபாவளித் தீபங்களோடு கொண்டாடுவதற்கும் சிவபெருமான் ஜோதிவடிவானவர் என்பதற்கும் எத்தனை பொருத்தமாக இருக்கிறது!

இதைத் தவிர, தீபாவளியைப்பற்றி இன்னும் எத்தனையோ கதைகள் உண்டு. ராம ராவண யுத்தத்திற்குப் பின்பு ராமன் சீதாபிராட்டியாருடன் அயோத்திக்குத் திரும்பிய தினமே தீபாவளி என்பர் சிலர். இதற்குப் பொருத்தமாக விஜயதசமியன்று ராவணன் சிலையைத் தீயிட்டுக்கொளுத்துவதும், அதை அடுத்து வரும் கிருஷ்ணபட்ச சதுர்த்தசியில் ராமன் அயோத்திக்குத் திரும்பிவிட்டதாகக் கருதித் தீபாவளியைக் கொண்டாடுவதும் நிலவி வரும் கருத்து. ★

தாழ்ந்த இயல்புகளெல்லாம் அடியோடு அழிந்து போகின்றன. ஆணவமும் அறியாமையும் அழிந்த இடத்தில் அருளும் ஞானமும் கலையும் அருட்செல்வமும் பேராற்றலும் தோன்றுகின்றன. இந்த உண்மையை, துர்க்கையின் இரண்டு பக்கங்களிலும் இருக்கும் சரஸ்வதி லட்சுமி விநாயகர் சுப்பிரமணியர் ஆகிய தேவதேவியரின் திருவுருவங்கள் விளக்குகின்றன. அடுத்து, சத்துவம் என்னும் உயர்வான சமத்துவநிலை உண்டாகிறது. பிறகு, குணங்களைக் கடந்து விளங்கும் அதி உயர்ந்த நிலையாகிய பரம்பொருள் அடையப்பெறுகிறது. இந்தக் கருத்தை முறையே சிவபெருமானின் புறத்தோற்றமாகிய வெண்ணிறமும் அவருடைய உள்ளார்ந்த ஆழ்ந்த நிஷ்டையும் குறிப்பிடுகின்றன.

2. காளி

ஆதிசக்தியின் வடிவங்கள் பலவற்றுள் மிகவும் உக்கிரமாகத் தோன்றுவது மகாகாளியின் உருவமாகும். காலம் என்ற தத்துவத்தின் சிறந்த விளக்கமாக அவள் விளங்குகிறாள். பல்லாயிரம் கோடி யுகங்கள் அடங்கிய காலத்தையே தன்னுள் ஒடுக்கி வைத்திருக்கும் சக்தியே அவள். அவளுக்குப் புறம்பாகக் காலம் என்று ஒன்று இல்லை. இந்த உலகில் இரவு பகல் என்று காலத்தை வகுக்கும் சந்திரனும் சூரியனும் காளியன்னையின் இரண்டு கண்களாக அமைந்திருப்பது இந்தக் கருத்துக்குச் சிறந்த விளக்கமாக அமைந்துள்ளது.



திகம்பரி

எல்லாத் திசைகளிலும் நீக்கமற நிறைந்திருப்பதனால் காளிக்குத் திகம்பரி என்றும் பெயர் உண்டு. மரணத்தையே மூச்சாகக் கொண்டு, பிரபஞ்சம் அனைத்தையும் மயானமாக்கி, ஆடை எதுவும் இல்லாமல் காளி நிர்வாணமாக வெறிக்கூத்து ஆடுகிறாள். எங்கும் நிறைந்துள்ள காளிதேவியை எந்த ஆடையைக் கொண்டு உடுத்த முடியும்? எனவே அவளுடைய அந்த நிலை பரம்பொருளின் சர்வ வியாபகத் தன்மையை விளக்குகிறது.

முண்டமாலினி

முண்டமாலினி என்பது காளிதேவியைக் குறிக்கும் மற்றொரு திருநாமமாகும். தலைகளால் கோக்கப்பட்ட மாலையை அணிந்தவள் என்பது அதற்குப் பொருள். குழந்தைப் பருவத்திலிருந்து வயோதிக நிலை வரையிலும் உள்ள தலைகளைக் கொண்டு அந்த மாலை கட்டப்பட்டிருக்கிறது. மரணம் ஐந்திலும் வரலாம்; ஐம்பதிலும் வரலாம். எனவே மனிதன் நிலையற்ற தன் வாழ்க்கையை உயர்ந்த இலட்சியத்திற்காகத் தேவியின் பலிபீடத்தில் சமர்ப்பிக்கத் தயாராக இருக்க வேண்டும். உலக வாழ்க்கையின் நிலையற்ற தன்மையைக் காளிகாதேவியின் கோரக் காட்சி தெளிவுபடுத்துகிறது. 'மனிதனே, அழிந்து போகும் மாயை உலகில் சிக்கிக்கொள்ளாதே. உன் வாழ்க்கையை உயர்ந்த உண்மையாகிய பரம்பொருளை அடைவதற்காகத் தியாகம் செய்துவிடு. என்றென்றும் அழியாததாகிய பேரின்ப வாழ்க்கை உனக்காகக் காத்திருக்கிறது' என்று அன்னை காளியின் தலைகளாலாகிய மாலை அநித்திய உலகிற்கு நித்திய உண்மையைப் போதித்துக்கொண்டிருக்கிறது. எல்லா உயிர்களும் ஆதிசக்தியிடமிருந்து தோன்றி மீண்டும் அவளிடமே ஐக்கியமாகின்றன; மரணத்திலிருந்து எவரும் தப்பிவிட முடியாது; உயிர்கள் அனைத்தும் தேவிக்குச் சொந்தமானவை; இந்த உலகம் அவளது விளையாட்டு மைதானம்; கொடுத்த உயிரை எந்தக் கணத்திலும் அவள் மீண்டும் எடுத்துக்கொண்டுவிடுவாள் என்பதையும் அவள் அணிந்திருக்கும் பல வயதுடைய தலைகள் குறிப்பிடுகின்றன.

கர்மரூபிணி

செயல்கள் அனைத்திற்கும் சக்தியாக இருப்பவள் காளிதேவி. இதை அவள் அணிந்திருக்கும் துண்டிக்கப்பட்ட கைகளால் ஆகிய ஒட்டியாணம் விளக்குகிறது. பிரபஞ்சத்தில் எங்கெங்கெல்லாம் பெரும் சக்தியின் வெளிப்பாடு இருக்கிறதோ அங்கங்கெல்லாம் தேவியின் ஆட்சியே நடைபெறுகிறது. வல்லமை அனைத்துக்கும் அவளே ஊற்றாகத் திகழ்கிறாள். தேவியின் வீரக் கரங்கள் எங்கும் எதிலும் நீண்டு பரந்திருக்கின்றன. அவளுடைய பத்துக் கரங்களும் அளப்பரிய ஆற்றல்களுக்கு அடையாளமாகும்.

பயங்கரி

ஒரு கையில் வாளையும், மற்றொரு கையில் துண்டிக்கப்பட்ட ஒரு தலையையும் தேவி தாங்கி

யிருக்கிருள். வெட்டிய தலையும் இரத்தக் கறை படிந்த வாளும் துன்பத்தின் அறிகுறியாகும். பேராசை, ஆணவம், சுயநலம், அநீதி, அதிகார வெறி ஆகியவை எங்கெல்லாம் ஆட்சி புரிகின்றனவோ அங்கெல்லாம் காளிதேவியின் கோரவாளும் ஆட்சி செலுத்தும். தர்மத்துக்கு மாருக எவர் நடந்துகொண்டாலும் அவருடைய முடிவு அழிவாகத்தான் இருக்கும் என்பதைத் துண்டிக்கப்பட்ட தலை விளக்குகிறது.

ஊழிக்கூத்து

சுடுகாட்டில் பூதகணங்களுக்கு மத்தியில் காளி மரணக் கூத்து ஆடுகிருள். ஆனந்த நடனத்தால் அண்டகோடிகளையெல்லாம் இயக்கும் சிவனுர் சவம்போல கீழே இருக்கிருர். அவர்மேலே நின்று காளி வெறிக்கூத்து ஆடுகிருள். அவளுடைய இந்த நடனத்தால் உலகங்கள் தோன்றவும் மறையவும் செய்கின்றன.

காளிதேவியின் அந்தக் கோர நடனத்துக்குச் சிவபெருமானே மேடையாக அதாவது அவரே ஆதாரமாக இருக்கிருர். அவர் நிர்க்குண நிராகாரப் பிரம்மத்திற்கு அறிகுறியாவார். இந்த உண்மையைக் காளிதேவி சிவபெருமானின் மேல் நடனமாடும் தோற்றம் விளக்குகிறது.

காளி மரண சொரூபிணி. அழிப்பது அவளுடைய தொழில். ஒவ்வொரு கணமும் அவளுடைய சம்காரத் தொழில் நடந்துகொண்டுதான் இருக்கிறது. அவளை வணங்க விரும்புபவர்கள் வீராதி வீரராகவும் உலக வாழ்க்கையைத் துரும்பாக நினைக்கக் கூடியவராகவும் இருக்க வேண்டும்.

காளி கருமை நிறத்தவளா?

கடலைத் தூரத்தில் நின்று பார்த்தால் கருநீல நிறமாகத் தோன்றுகிறது. ஆனல் நெருங்கிச் சென்று அதன் நீரைக் கையில் எடுத்துப் பார்த்தால் நிறமற்ற நீராகத் தோன்றும். அதுபோலவே காளியிடமிருந்து தூர இருப்பவர்களுக்கு, அதாவது பக்தியால் அவளை உணராதவர்களுக்கு, அவள் கருமை நிறத்தவளாகவும் பயங்கரியாகவும்தான் தோன்றுகிருள். அவளுடைய குழந்தையாகிவிட்டவர்களுக்குப் பால் நினைந்தூட்டும் உலகத்தாயினும் மேலான தயாபரியாகவே அவள் திகழ்கிருள்.

3. மகாலட்சுமி

'அருள் இல்லார்க்கு அவ்வுலகில்லை, பொருள் இல்லார்க்கு இவ்வுலகில்லை' என்பது வள்ளுவர் வாக்கு. மறுமைக்கு உரிய அருட்செல்வத்திற்கும் இம்மைக்கு உரிய பொருட் செல்வத்திற்கும் பிரதானச் செல்வமாக விளங்குகிருள் ஸ்ரீமகாலட்சுமிதேவி. அவளே வித்யா மாயையாகிய அருட்செல்வத்தையும், அவித்யா மாயையாகிய பொருட்செல்வத்தையும் வழங்குபவள் ஆவாள்.

அதிர்ஷ்டம், அழகு, வளம், செல்வம் முதலிய எல்லா மங்களங்களுக்கும் ஸ்ரீதேவி தெய்வமாகத் திகழ்கிருள். இதை நினைவுபடுத்தும் வகையில் கார்த்திகைக் கிருஷ்ண பட்சக் கடைசி இரவில் தீபங்களை எங்கும் வைத்து ஸ்ரீதேவியை வழிபடும் வழக்கம் இருந்து வருகிறது.

மங்களகரமான வாழ்க்கையைத் தரும் தேவியை உபநிஷதங்கள் 'ஸ்ரீ' என்று போற்றுகின்றன. தைத்திரீய ஆரண்யகத்தில் லட்சுமி என்றும், ரிக்வேதத்தைச் சேர்ந்த ஸ்ரீஸூக்தத்தில் 'ஸ்ரீ', 'லட்சுமி' என்றும் திருமகள் குறிப்பிடப்படுகிருள். தானியலட்சுமி, தனலட்சுமி, வீரலட்சுமி, கஜலட்சுமி, சௌபாக்கியலட்சுமி முதலிய எட்டு நிலைகளில் திருமகள் ஆராதிக்கப்பெறுகிருள்.

தாமரையாள்

பண்டைக்காலம் முதற்கொண்டே தாமரைமலர் சமயநூல்களில் முக்கிய இடம் பெற்று வந்திருக்கிறது. தாமரை மலருடன் மிகவும் நெருங்கித் தொடர்புடையவளாகத் திருமகளைச் சமயநூல்கள் குறிப்பிடுகின்றன. "பத்மினி! தாமரையில் விருப்பம் கொண்டவளே! தாமரையைக் கையில் ஏந்தியவளே! தாமரையில் வசிப்பவளே! தாமரையிதழ் போன்ற அகன்ற கண்களை உடையவளே! உலகம் முழுவதற்கும் பிரியமானவளே! விஷ்ணுவின் மனதிற்கு உகந்தவளே! உனது திருவடித் தாமரையை என்னிடம் வைத்தருள்வாய்" என்று ஸ்ரீஸூக்தத்தில் தேவி போற்றப்படுகிருள். பக்தி, மங்கலம், அழகு, செழிப்பு, பூரணம், அன்பு, அருள் ஆகிய உயர்ந்த தன்மைகளின் அடையாளமாகத் தாமரை விளங்குகிறது.

தாமரைமலர் போன்றவள் அல்லது தாமரை மலரை உடையவள் பத்மினி. தாமரைமலரில் நிற்பவள் பத்மஸ்திதா. செந்தாமரை நிறம் கொண்டவள் பத்மவர்ணு. தாமரையில் பிறந்தவள் பத்மஸம்பவா. தாமரை போன்ற கண்களை உடையவள் பத்மாட்சி. மலர்ந்த தாமரையைப் போன்ற முகம் கொண்டவள் பத்மானனு. தாமரையை விரும்புபவள் பத்மப்பிரியா. தாமரையை ஏந்தியவள் பத்மஹஸ்தா.

தனலட்சுமி

கீர்த்தி என்று தொழப்படும் நிலையில் தங்கம், வெள்ளி, ரத்தினங்களாகிய விலையுயர்ந்த பல ஆபரணங்களைத் திருமகள் அணிந்திருக்கிறாள். அத்தகைய அலங்காரங்களைக் கொண்ட தேவியின் அந்த நிலை செல்வம், வளம், புகழ், நீண்ட ஆயுள் முதலிய ஐசுவரியங்களின் அடையாளமாகும். "எல்லாச் சீரிய குண நலன்களும் எனது தன்மையை அடையவே முயலுகின்றன. நானே காரியசித்தியாகவும், நிலையானதாகவும், செழிப் பாகவும் இருக்கிறேன்" என்று திருமகளே கூறு வதாக மகாபாரதம் குறிப்பிடுகிறது.

அலைமகளின் அபயகரத்திலிருந்து தங்க நாண யங்கள் சொரிந்த வண்ணம் இருக்கின்றன. எல்லாச் செல்வங்களுக்கும் அவளே ஊற்று என்பதை உணர்த்தும் அறிகுறியாக அது விளங்கு கிறது. சங்கநிதி, பதுமநிதி ஆகிய எட்டு வகை யான செல்வங்களுக்குத் திருமகள் தலைவியாக விளங்குகிறாள் என்று பத்மபுராணம் கூறுகிறது.

பூமிக்குத் தேவியாக விளங்கும் நிலையில் க்ஷமாதேவி என்றும், எல்லா உயிர்களுக்கும் தாயாக விளங்கும் நிலையில் பிரஜானும் பாலகி மாதா என்றும் திருமகள் போற்றப்படுகிறாள். அமிர்தகலசத்தை ஏந்திய நிலையிலும் திருமகளுக்கு வடிவம் உண்டு. அமரத்துவத்தையும் பூரணத்துவத்தையும் அளிப் பவள் திருமகள் என்பதன் விளக்கமாக அந்த வடிவம் திகழ்கிறது.

கஜலட்சுமி

இரண்டு பக்கங்களிலும் இரண்டு யானைகள் நின்றுகொண்டு, திருமகளுக்கு நீரால் அபிஷேகம் செய்கின்றன. அந்த இரண்டு யானைகளும் திருமகளின் ராஜரிகத்தன்மையின் விளக்கங் களாகும். இந்த வடிவத்தில் விளங்கும்போது திருமகள் கஜலட்சுமி அல்லது அபிஷேகலட்சுமி எனப்படுகிறாள். யானைகள் துதிக்கையிலுள்ள நீர்க் கலசங்களில் இருக்கும் நீரால் திருமகளை நீராட்டு கின்றன. உயிர்கள் அனைத்துக்கும் உயிர்ச் சத்தையும் உயிரோட்டத்தையும் அளிப்பவள் திருமகள் என்பதை, தேவியின் இந்த வடிவம் குறிப் பிடுகிறது. எல்லா உலகங்களுக்கும் மகிழ்ச்சியைத் தருபவள் திருமகள் என்பதை யானைகளின் அபிஷேகம் உணர்த்துகிறது. தாமரைக் குளத்தில் அலைமகள் வசிப்பது, அவளே உயிர்கள் அனைத் துக்கும் மூலம் என்பதற்கு உரிய விளக்கமாகும்.

காக்கும் கடவுளாகிய திருமாலின் சக்தியாக இருப்பவள் திருமகள் என்பதற்கு அடையாளமாகச் சங்கும் சக்கரமும் ஏந்திய நிலையிலும் திருமகளுக்கு ஒரு வடிவம் உண்டு.

பௌத்த சமண மத இலக்கியங்களிலும் திரு மகளைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. ஜைன மகாவீரர் அவதரிக்கப்போகிறார் என்பதைக் குறிக்கும் வகையில் மகாவீரரின் தாயாகிய திரிசலா பதினான்கு வகையான மங்கலக் கனவுகள் கண்டாள். அந்தக் கனவுகளில் திருமகளைப் பற்றிய கனவும் ஒன்றாகும்.

நிறைந்த ஆபரணங்களோடு கூடிய திரு மகளின் உருவச் சிலைகள் ஹரப்பாவிலும் மொகஞ் சதாரோவிலும் கிடைத்திருப்பதன் மூலம் திருமகள் வழிபாடு மிகவும் பழமையானது என்பதை உணர லாம்

4. கலைமகள்

ஆதிபராசக்தியின் சப்தரூபமான அம்சமாக மகா சரஸ்வதி விளங்குகிறாள். பரம்பொருளின் முதல் தோற்றம் சப்தப் பிரம்மம் ஆகும். அந்தச் சப்தப் பிரம்மத்தின் எழில் உருவமே மகா சரஸ்வதி ஆவாள். ஆகவேதான் வாக்தேவி, வாகீசுவரி, வாணி முதலிய பொருள் செறிந்த திருநாமங்களால் கலைமகள் போற்றப்பெறுகிறாள். சாரதா, பாரதி, வீணாபாணி என்பனவும் வாக்தேவிக்கு அமைந்த வேறு பெயர்களாகும்.

சப்தப் பிரம்மமாகத் தோன்றிய வாகீசுவரியே நாமரூபங்களோடு கூடிய எண்ணற்ற உலகங்களா கவும் உயிர்களாகவும் விரிந்து தோன்றுகிறாள். ஆகவேதான் புராண இதிகாசங்கள் கலைமகளைப் படைப்புக் கடவுளாகிய பிரம்மதேவனின் சக்தியாக வர்ணிக்கின்றன.

இந்துக்களின் வழிபாட்டில் கலைமகள் முக்கிய இடம் வகிக்கிறாள். கலைகள் அனைத்திற்கும் அதி தேவதையாக அவள் போற்றப்பெறுகிறாள். சாதா ரண உலகியல் அறிவிலிருந்து 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்ற முடிந்த முடிவாகிய பேரறிவு வரையிலும் உள்ள எல்லா அறிவாற்றல்களுக்கும் கலைமகள் கருவூலமாக விளங்குகிறாள். அவள் வெண்மை நிறம் வாய்ந்தவள். வெண்ணிற ஆடை அணிந்த வள். அவளுடன் தொடர்பு கொண்ட எல்லாமே தூய வெண்மை நிறத்துடன் காணப்படுகின்றன. கலைமகளின் வெண்மைக் கோலம் பரிசுத்தத்தை யும் சுத்தசத்துவ நிலையையும் விளக்கும் அடையாள மாகத் திகழ்கிறது.

கலைமகள் தனது ஒரு கையில் ஸ்படிகமாலையையும், மறு கையில் வேதநூலையும் ஏந்தியிருக்கிருள். அவளுடைய ஏனைய இரண்டு கைகளும் வீணையை வாசிக்கும் நிலையில் அமைந்துள்ளன.

உலகிலுள்ள எல்லாக் கலைஞானங்களையும் பரவித்தை அபரவித்தை என்று இரண்டாகக் குறிப்பிடுவது மரபு. பரவித்தை, அபரவித்தை; உலகு, உயிர்—ஆகியவை பற்றிய உண்மைகள் வேதங்களில் இடம் பெற்றுள்ளன. கலைமகளே எல்லாக் கலைஞானங்களுக்கும் அதிதேவதையாகவும், வேதங்கள் குறிப்பிடும் பிரம்மஞானத்தை அருள்பவளாகவும் விளங்குகிருள். இந்த உண்மையைக் கலைமகளின் கையிலுள்ள வேதநூல் உணர்த்துகிறது. மனிதர்களாகிய நாம் கற்றது கைமண் அளவு; கல்லாதது உலகளவு. நாம் கற்க வேண்டியவை பல இருக்கின்றன. கல்விக்குத் தலைவியான கலைமகளே இன்னும் வாசித்துக்கொண்டிருக்கிருள் என்ருல், மனிதர்கள் வாழ்நாள் முழுவதும் கற்பதையும் கற்பிப்பதையும் மேற்கொள்ள வேண்டும் என்ற தத்துவத்தைக் கலைமகள் ஏந்தியுள்ள வேதச் சுவடிகள் உணர்த்துவதாகவும் சொல்லலாம்.

ஆன்மிக உண்மைகளை ஜபம் தியானம் போன்ற ஆத்ம சாதனைகளின் மூலமே உணர முடியும்; வெறும் சாஸ்திர அறிவால் அவற்றை உணர இயலாது என்பதைக் கலைமகளின் கையிலுள்ள ஜபமாலை குறிப்பிடுகிறது. கமண்டலம் ஏந்திய நிலையிலும் கலைமகளுக்கு ஒரு கோலம் உண்டு. பக்திசிரத்தைக்கு அடையாளமாகத் திகழ்வது கமண்டலம். பக்தியும் சிரத்தையும் இல்லாத நிலையில் எந்தவிதக் கல்வியாலுைம் கலைஞானமாலுைம் முழுமை பெற முடியாது என்ற தத்துவத்தைக் கலைவாணி ஏந்தியுள்ள கமண்டலம் உணர்த்துகிறது.

கலைமகளுக்கே சிறப்பாக உரியது வீணை. ஒழுங்குப்பாட்டுடன் இனிய ஒலியை எழுப்பக்கூடிய கருவி அது. அண்டகோடிகள் அனைத்தும் குறிப்பிட்ட ஒழுங்குமுறை தவருமல் சீராக இயங்குகின்றன. இந்த இயக்கங்கள் அனைத்திற்கும் சூத்திரதாரி போன்று கலைமகள் விளங்குவதைக் குறிப்பதாக வீணை அமைந்திருக்கிறது. கலைமகளின் வீணை ஒலியின் அதிர்விலிருந்து அண்டகோடிகளெல்லாம் தோற்றத்திற்கு வருகின்றன. லலித கலைகளையும் சங்கீதத்தையும் குறிக்கும் அடையாளமாகவும் வீணை கருதப்படுகிறது.

உலகில் நன்மையும் தீமையும் கலந்தே இருக்கின்றன. பகுத்தறிவால் தாழ்ந்தவற்றை விலக்கி, உயர்ந்தவற்றை மனிதன் தனக்கு உரியனவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதைக் கலைவாணியின் வாகனமாகிய அன்னப்பறவை குறிப்பிடுகிறது. தெய்விக இயல்புகளை மனிதன் வளர்த்துக்கொண்டால், இருள் நிறைந்த இதயம் வெண்தாமரையாக மலர்ந்துவிடும்; அங்கு அருள் நிறைந்த கலைமகள் எழுந்தருளுவாள் என்பதை அவள் வீற்றிருக்கும் கமலாசனம் நினைவுபடுத்துகிறது.

[முற்றும்]

அன்னபூரணி



கன்னியா குமரியவள் காந்திமதி மீனுட்சி கருணைபர் வதவர்த்தினி
கமலைப் பராசக்தி சிவகாம சுந்தரி காழிஉமை பிரமவித்தை
தன்னிகரி லாஞான அபயவர தாம்பிகை தையல் அபிராமி மங்கை
தந்தஅகி லாண்டநா யகிஅறம் வளர்த்தவள் தன்னருள் செய் காமாட்சி இங்கு
என்னையாள் கௌரிஜ் வாலாமுகி உண்ணுமுலை இலங்கு நீ லாயதாட்சி
எழிற்பிரம ராம்பிகை இலங்குபார் வதியாகி எண்ணிலா நாம ரூப
அன்னையாய் காசிமுதலாகிய தலத்து வீறை யாடிடு விசாலாட்சியாம்
அண்டகோ டிகள்பணி அகண்டபூரணி என்னும் அன்னபூரணி அன்னையே!

—அன்னபூரணியம்மை திருவருட்பா

சுவாமி விவேகானந்தர்

வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன்



ஔவையார் ஒரு பாட்டில் கொடையாளருக்கு உவமையாக மூன்று மரங்களைக் கூறுகிறார். கொடுக்கிறேன் என்று சொல்லாமலேயே கொடுக்கிறவர்கள்; சொல்லியபின் கொடுக்கிறவர்கள்; சொல்லியும் கொடுக்காதவர்கள் என்ற மூன்று வகையினருக்கும் முறையே பலாமரத்தையும் மாமரத்தையும் பாதிரி மரத்தையும் உவமையாக ஆளுகிறார். பலாமரம் பூப்பதில்லை, பழம் பழுக்கும். மாமரமோ பூத்த பிறகு பழுக்கும்; பாதிரி மரமோ பூக்குமேயன்றிக் கனி தருவதில்லை.

அந்த மூன்று மரங்களைப் போலச் சமய உலகில் மூன்று வகையான மக்கள் இருக்கிறார்கள். கல்வியறிவும் வாக்குவன்மையும் பெறாமல் அனுபவம் பெற்றவர்கள் பலாமரத்தைப் போன்றவர்கள். அறிவும் அனுபவமும் ஒருங்கே இணைந்தவர்கள் மாமரத்தைப் போன்றவர்கள். அனுபவமே இல்லாமல் தர்க்கம் செய்ய மாத்திரம் படித்தவர்கள் பாதிரிமரத்தைப் போன்றவர்கள்.

இந்த மூன்று வகைகளில் பாதிரிகளைத்தான் அதிகமாகப் பார்க்கிறோம். அவர்கள் சமயவாதிகள். சமயத்தைப்பற்றி வாதிப்பவர்கள். குரலின் உரமும், அறிவின் கூர்மையும் அவர்களுக்கு உதவியாக இருக்கின்றன. ஆனால் அவர்களால் சமயஞானம் உண்டாவது அரிது.

சமயம் என்பது இறையருள் அனுபவத்தைப் பெறும் நெறி. அதைப்பற்றிப் பேசுவது பெரிதன்று. அதில் நாம் வாழ வேண்டும். சமயவாதிகளாக இருப்பதைவிடச் சமயவாணர்களாக இருக்க முயல வேண்டும். அனுபூதி பெறுவதே சமயத்தின் இலட்சியம்.

இராமகிருஷ்ண பரமஹம்ஸர் அனுபவமே வடிவானவர். அவர் பலாமரம் போன்றவர்; பூவாமலே பழுக்கும் மரத்தைப் போலக் கல்வியறிவு இல்லாமலே அனுபூதி பெற்றவர். சுவாமி விவேகானந்தரோ மாமரம் போன்றவர். அவரிடம் மலரும் உண்டு; பழமும் உண்டு. விவேகமும் ஆனந்தமும் இணைந்த உருவம் அவர். தம்முடைய அறிவாற்றலால் அந்த விவேகத்தை அடைந்தார். தம் குருநாதருடைய அருளால் அனுபவத்தைப் பெற்றார். பொன்மலருக்கு மணமும் அமைந்தது போல அவருடைய அறிவுச் சிறப்பைப் பயன்படும்படிச் செய்ய, அவருக்கு அனுபூதி கிடைத்தது.

இந்த நாட்டில் அறிவைப் பரோட்சம் என்றும், அபரோட்சம் என்றும் இரு வகைகளாகப் பிரிப்பர். அவற்றையே நூலறிவு என்றும், வாலறிவு என்றும் சொல்வார்கள். விவேகானந்தர் இயல்பாகவே கூரிய மதிநுட்பம் உடையவர். அதனால் உலகத் தத்துவ நூல்களையெல்லாம் படித்தவர். அவற்றைப் படித்துத் தத்துவப் பேராசிரியராக ஆகவேண்டும் என்பது அவருடைய நோக்கமன்று; உண்மையைக் காண வேண்டும் என்ற பசியே காரணம். நூல்களைப் படிக்க அவர் அறிவு அகன்று படர்ந்தது. ஆனால் இன்னும் உண்மையைக் கண்டுபிடித்த பாடில்லை. கடவுளைப்பற்றிப் பேசுவோர் யாவரும் வெறும் நம்பிக்கையினால் அந்தப் பேச்சுகளைப் பேசினார்களே ஒழியத் தம்முடைய அனுபவத்தில் உணர்ந்து பேசியதாகத் தெரியவில்லை.

விவேகானந்தருடைய உள்ளத்தில், 'கடவுள் உண்டா இல்லையா?' என்பதே பெரிய சந்தேகமாக எழுந்துவிட்டது. யுக்திவாதத்தினாலும் மேற்கோள்களினாலும் கடவுள் உண்மையை நிரூபிப்பவர்களிடம் அவருக்கு மதிப்பு உண்டாகவில்லை. அந்த வித்தை அவருக்கே தெரியுமே! ஆனால் கடவுளை அனுபவத்தில் அறிந்தவர், அபரோட்ச ஞானம் பெற்றவர், அனுபூதிமான் யாரென்று அவர் தேடினார்.

எல்லோரும் பாதிரிமரங்களாகவே இருந்தார்கள். நூல்கள் கூறுவனவற்றையே சொல்லும் கிளிப்பிள்ளைகளாக இருந்தார்கள். அவர்களிடம் பண்டம் ஒன்றுமில்லை என்பதை உணர்ந்தபோது அவருக்குக் கோபம் கோபமாக வந்தது.

கடைசியில் குருதேவரை அடைந்தார். பரமஹம்சர் என்னும் பலாமரத்தை அடைந்தார். படாடோபம் இல்லாமல், நூல்களிலிருந்து மேற்கோளை அடுக்காமல் அந்தப் பெருமான் நரேந்திரரை 'வா' என்று அழைத்தார். "உனக்காக அல்லவா நான் காத்திருக்கிறேன்?" என்றார். நரேந்திரருக்கு அந்த வார்த்தையின் உண்மைப் பொருள் முதலில் விளங்கவில்லை. தம்மை முழுமையாக்கப் போகும் பேரொளி அங்கு இருப்பதை அவர் உணரவில்லை. அறிவிலே சிறந்த தமக்கு ஆனந்தப்ராப்தியையும் உண்டாக்கும் அருளாளர் அவர் என்பதை அறியவில்லை. அந்த மகான் அவருக்காகக் காத்திருந்தார்; அந்த வண்டை இழுத்துத் தேனில் ஆழ்த்திவிடக் காத்திருந்தார்.

குருநாதருடைய அருள் அனுபூதியாக அவரிடம் மலர்ந்தது. அவருடைய ஸ்பரிச தீட்சை இந்த அறிவு மலையினூடே ஒரு நெகிழ்ச்சியை உண்டாக்கிவிட்டது. ஆயிரமாயிரம் நூல்களால் அறியவொண்ணாத உண்மையை, அனுபூதி மார்க்கத்தை நரேந்திரர் உணர்ந்தார். அறிவும் அனுபூதியும் இணைந்தன. மலரும் கனியும் குலுங்கின. விவேகத்தின் தலை நிலத்தில் நின்ற இப் பெருமான் இப்போது ஆனந்தத்தைச் சுவைத்தார். விவேகானந்தர் என்ற பெயரின் இலக்கணம் அவரிடம் நிரம்பிவிட்டது. மலரும் கனியும் குலுங்கும் மாமரமானார்.

இராமகிருஷ்ண பரமஹம்சரின் மௌன ஆற்றல் முழுவதும் விவேகானந்தர் வாயிலாக உலகுக்குப் பாய்ந்து நலம் செய்தது. அப்படிப் பாயச் செய்வதற்கு உரிய அறிவாற்றல் அவரிடம் இருந்தது. அதை முன்பே அவர் பெற்றிருந்தார். புதிய கால்வாயை வெட்டியபிறகு அதன் வழியே நீரை விடுவது போல, நரேந்திரர் அறிவுத் திறமை உடையவராகி விளங்கினார். பிறகு அவர் வாயிலாக அனுபூதி பாய்ந்தது. அவரால் உலகம் பயன் பெற்றது.

உண்மையை உணர வேண்டும், அனுபூதி பெற வேண்டும் என்ற பேரார்வம் நிரம்பியது. குருநாதர் அருள் அதை நிறைவாக்கியது. அப்பால் விவேகானந்தர் தன்னந்தனியே இருந்து அனுபூதியிலே லயித்துவிடவில்லை. அவரால் உலகுக்கு ஒரு பெரிய பயன் உண்டாக வேண்டியிருந்தது. அவருடைய குருநாதரே அதனை விரும்பினார். "அன்னாய், இவனை அனுபூதியில் ஆழ்த்திவிடாதே. இவனால் உலகம் நன்மை பெற வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார். அனுபூதியிலே தம்மை மறந்து வாழ் நாள் முழுவதும் கிடந்துவிடும் தகுதி விவேகானந்தரிடம் இருந்தது. ஆனால் அவர் அதனை ஏற்கவில்லை. உலகம் வாழ வேண்டும் என்று விரும்பினார்.

கர்ணன் தன் புண்ணியத்தையே தானம் பண்ணினான்; அதுபோல் விவேகானந்தர் தம் இன்ப அனுபவத்தையே தியாகம் செய்தார் மனிதர்கள் கோழைகளாய், வாழும் வகையறியாமல் உண்மையை மறந்து வாழ்வதைச் கண்டு உள்ளம் வாடினார். இந்த நாட்டிற்கே உரிய பழைய ஞானநெறியின் மேல் புழுதி படிந்து பயனற்றுக் கிடப்பதைக் கண்டார். தம்முடைய வீரவாசகத்தால் அதைப் போக்க முற்பட்டார். பயத்தை ஒழிக்கவும், தலை நிமிர்ந்து நடக்கவும், உடம்பைப் பேணவும் வேண்டும் என்பதை வற்புறுத்தினார். ஒவ்வோர் ஆண்மகனும் அர்ச்சுனனைப் போலாகவேண்டும் என்று விரும்பினார்.

வீரமும் ஈரமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்பதை அவர் உரைகள் புலப்படுத்துகின்றன. இகமும் பரமும் ஒரே கதையின் இரண்டு அத்தியாயங்கள் என்பதை அவர் ஆதாரத்துடன் காட்டினார். இங்கு வாழத் தெரியாதவன் அங்கும் வாழ முடியாது என்று எச்சரித்தார். உண்மைப் பொருளை அடைய வேண்டுமானால் உயிர்க் கூட்டங்களிடத்து அன்பு செய்ய வேண்டும் என்று போதித்தார்.

அவருடைய உபதேசங்களில் வீணையின் மெல்லிசை இல்லை; வீரமுரசே ஒலிக்கிறது. வில்லின் நாண் ஒலியைக் கேட்கிறோம். தூங்குகிறவர்களை எழுப்ப வந்தவர் அவர். பழைய உபநிடதங்களுக்குப் புதிய மெருகிட்டவர் அவர். பழைய முனிவர்களின் வழியைப் புதிய முறையில் எடுத்துக் காட்டியவர் அவர்.

அவரால் உலகமே இந்து மதத்தின் பெருமையை உணர்ந்தது. இந்தியாவின் சிறப்பை உணரலாயிற்று. அவருடைய முயற்சிகளால் எழுந்த இராமகிருஷ்ண மடம் இன்றும் உலகமெங்கும் பரவி நலம் செய்து வருகிறது. விவேகானந்தர் வேதாந்தமென்னும் இமயமலையில் ஏற்றிய பெருவிளக்கு. அதன் ஒளி இடம் கடந்து, காலம் கடந்து சுடர்கிறது. அந்த ஒளி வாழ்க! ★



ஔரங்கசீப் கட்டிய இந்து கோயில்

விவேகானந்ததாசன்

மொகலாயர்களின் ஆட்சிக்காலத்தில் "இந்துக்களின் கோவில்கள் எங்கே தென்பட்டாலும் தகர்த்து எறியுங்கள்" என்று கட்டளை பிறப்பித்து அதை நடைமுறைப் படுத்தியவர் ஔரங்கசீப். அப்படிப்பட்ட ஔரங்கசீப் ஓர் இந்துக் கோவிலைக் கட்டினார் என்றால், அதைவிட வேறு என்ன அதிசயம் இருக்க முடியும்?

ஔரங்கசீப் ஸ்ரீராமபக்த ஹனுமானுக்காக அயோத்தியில் 'ஹனுமன்கடி' என்ற புகழ்பெற்ற கோவிலைக் கட்டினார். இப்போதுங்கூட அயோத்தியில் தலையாய முக்கியத் துவம் வாய்ந்த கோவிலாக விளங்குவது ஹனுமான்கடிதான். இந்தக் கோவிலை ஔரங்கசீப் கட்டுவதற்குக் காரணமாக இருந்த நிகழ்ச்சி வருமாறு:—

ஔரங்கசீப்பின் காலத்தில் கோசுவாமி துளசிதாசர் காசியில் வாழ்ந்து வந்தார். துளசி ராமாயணம் இயற்றிய அவரது பெருமையைக் கேள்வியுற்ற ஔரங்கசீப், ஒருமுறை தாமே காசி க்ஷேத்திரத்திற்குச் சென்று தமது அதிகாரபலத்தைப் பிரயோகித்துத் துளசிதாசரைத் தம் இருப்பிடத்திற்கு வரவழைத்துவிட்டார்.

துளசிதாசரிடம், "நாடெங்கிலும் உள்ள மக்கள் அனைவரும் உங்களைப் பெரிய மகான் என்றும், கவிஞர் என்றும் போற்றுகிறார்கள். நீங்கள் உண்மையிலேயே மகானாக இருந்தால் என் முன்னால் உங்களுடைய சித்திகளைக் கொண்டு அற்புதங்கள் நிகழ்த்திக் காட்டுங்கள். அத்துடன் உங்கள் கவி பாடும் ஆற்றலைக் கொண்டு என்மீது துதி பாடுங்கள்" என்று கட்டளையிட்டார் ஔரங்கசீப். துளசிதாசர் மொகலாய சக்கரவர்த்தியின் கட்டளைக்கு உடன்படவில்லை. 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்', 'அரங்கனைப் பாடிய வாயால் குரங்கனைப் பாடேன்' என்ற மனநிலையில் துளசிதாசர் ஔரங்கசீப்பின் கட்டளையை நிராகரித்துவிட்டார்!

தமது மிரட்டல்கள் பயன்படாத நிலையில் வெகுண்ட ஔரங்கசீப் துளசிதாசரைச் சிறையில் வைக்கும்படி கட்டளை பிறப்பித்தார்.

துளசிதாசர் சிறையில் இருந்தபோது 'ஸ்ரீ அனுமான்சாலிஸா' என்ற ஸ்தோத்திரத்தை ஸ்ரீஆஞ்சனேயரின் மீது பாடினார். அந்த ஸ்தோத்திரத்திற்கு உடனேயே கைமீது பலன் ஏற்பட்டது. எங்கிருந்தோ பிரம்மாண்டமான குரங்குகள் சாரிசாரியாக அரண்மனையிலும் சிறைச்சாலையிலும் நுழைந்தன. அந்தக் குரங்குப் படை அநாயாசமாக அரண்மனையையும் சிறைச்சாலையையும் துவம்சம் பண்ண ஆரம்பித்தது.

இப்படி ஒரு நிகழ்ச்சியைச் சற்றும் எதிர்பாராத ஔரங்கசீப் நடுநடுங்கிப் போனார். கதிகலங்கிய நிலையில் அவர் துளசிதாசரிடம் ஓடோடிச் சென்று, "எனது பிழையை மன்னியுங்கள்" என்று உண்மையிலேயே மனப்பூர்வமாகப் பிரார்த்தித்துக்கொண்டார். பயந்து போய்த் தம்மிடம் வந்த ஔரங்கசீப்பின் மனக்கவலையை நீக்கக் கருணை கொண்ட துளசிதாசர், ஸ்ரீ ஆஞ்சநேயரை நினைத்துப் பிரார்த்தித்தார். குதிரைகளெல்லாம் நரியாகி மறைந்த திருவிளையாடல் கதையைப் போல, அரண்மனையிலும் சிறைச்சாலையிலும் ஆர்ப்பாட்டங்களை விமரிசையாக நடத்திக்கொண்டிருந்த குரங்குகளெல்லாம் வந்தது போலவே சென்ற இடம் தெரியாமல் மறைந்துவிட்டன. துளசிதாசரும் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்ச்சியை முன்னிட்டுத் தமது பிழைக்குப் பரிகாரமாக ஔரங்கசீப், ஸ்ரீராமபிரான் அவதரித்த அயோத்தியில் மூன்று நல்ல காரியங்களைச் செய்தார். ஒன்று, ஸ்ரீ அனுமன்கடி என்ற ஆலயத்தை எழுப்பி அந்த ஆலயத்தின் நிர்வாகம் எப்போதும் சிறந்த முறையில் நடைபெறுவதற்கு வேண்டிய சொத்துக்களை எழுதி வைத்தார். இரண்டாவதாக, அயோத்தியில் நூறு இந்து சன்னியாசிகள் தங்குவதற்குத் தேவையான இடமும் மானியமும் வழங்கினார். மூன்றாவதாக, அந்த நூறு சன்னியாசிகளுக்கும் சேவை செய்வதற்காக உடலுறுதி மிக்க நாற்பது தொண்டர்களை நியமித்தார். ஔரங்கசீப் நிறுவிய இந்தத் தொண்டர் படையின் பெயர் 'ஸ்ரீபந்தர் பல்டன்' என்பதாகும். இந்து சன்னியாசிகளுக்கு எவரும் எந்தத் தீங்கும் விளைவித்து விடாமல் இந்தக் காவற் படையினர் பாதுகாக்க வேண்டும் என்ற உண்மையான அக்கறையுடனேயே ஔரங்கசீப் இந்தப் படையை நிறுவியதாகக் கருதப்படுகிறது. அந்தப் படையினரும் ஔரங்கசீப் விரும்பியபடியே உண்மையான தொண்டர்களாக விளங்கி அரும்பணி ஆற்றினர்கள்.

இப்போதுங்கூட 'ஸ்ரீபந்தர் பல்டன்' என்ற அந்தத் தொண்டர்படை ஏற்பாடு அயோத்தியில் 'ஸ்ரீநகாக பல்டன்' என்ற பெயரில் சன்னியாசிகளாக இருந்து வருவதாகவும், அவர்கள் பணி பைராகி மகாத்மாக்களுக்குத் தீங்கு நேராமல் பாதுகாப்பு அளிப்பது தான் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால், இன்றைக்குங்கூட இப்படி ஒரு படை இருக்கிறது என்று சொல்லப்படுவதில் எவ்வளவு தூரம் உண்மை இருக்கிறது என்பது தெரியவில்லை.

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் சிறப்பு மலர்

பயணக் கட்டுரை :

அயோத்தி யாத்திரை



1

சரயுநதியில் பொதுவாக மக்கள் நீராடுவதற்குக் குறிப்பிட்ட ஓர் இடத்தையே பயன்படுத்துகிறார்கள். அங்கு வந்தபோது பண்டாக்களும் யாத்திரிகர்களும் குழுமியிருந்தனர். பண்டாக்கள் தங்கள் அடையாளமாக விதம்விதமான வண்ணங்களில் கொடிகளைப் பறக்க விட்டிருந்தார்கள்; அவற்றில் சிலவற்றில் சின்னங்களையுங்கூடப் பார்க்கலாம். பிரயாகையில் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த பண்டா தமது அடையாளமாகக் கொடியில் யானை உருவத்தைப் பயன்படுத்துகிறார். எனவே அயோத்தியில் பண்டாக்கள் கொடியில் யானையுருவம் தென்படுகிறதா என்று தேடினேன்; காணோம். ஆனால், பிரயாகையிலுள்ள பண்டாவுக்குத் தெரிந்தவர்கள் சிலர் அயோத்தியில் பண்டாக்களாக இருக்கிறார்கள். பிரயாகையிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் பண்டா அயோத்தியில் பண்டாவாக உள்ள ஒருவருக்கு என்னிடம் கடிதம் கொடுத்து, எனக்குத் தேவையான உதவிகளைச் செய்யும்படி கோரியிருந்தார். ஆனால் உதவி பெற வேண்டும் என்ற அவசியம் எனக்கு நேராததனாலும், இந்தி தெரியாத நிலையில் அவருடன் பேசுவது சிரமம் என்பதனாலும் நான் அந்தப் பண்டாவைச் சந்திக்க முயலவில்லை.

பிரயாகையில் திரிவேணி சங்கமத்தில் யாத்திரிகரைச் சூழ்ந்து சில பையன்கள் பூ, கர்ப்பூரம், ஊதுவத்தி, பால் ஆகியவற்றை வாங்கித் திரிவேணீ மாதாக்களுக்கு அர்ப்பிக்கும்படி வற்புறுத்தும் காட்சியைப் பார்க்கலாம். அயோத்தியில் வற்புறுத்துதல் இல்லை. யாத்திரிகர்களாகவே சிலர் அவற்றை வாங்கிச் சரயுமாதாவுக்கு அர்ப்பணித்துக்கொண்டிருந்தார்கள். பாலை வாங்கிச் சரயுமாதாவுக்கு அர்ப்பித்துவிட்டுக் கர்ப்பூரத்தையும் ஊதுவத்தியையும் கொளுத்திப் பூத்தட்டில் வைத்துப் பிற யாத்திரிகர் செய்வதைப் போலச் சரயுநதியில் மிதக்க விட்டேன்.

சரயுநதிக் கரையில் யாத்திரிகர்களும் பண்டாக்களும் குழுமும் இடத்திற்கு அருகில் தொழுநோயாளிகள் தங்கும் விடுதிகள் உள்ளன. யாத்திரிகர்கள் வரும் நேரம் என்பதால் காலை 8-30மணி அளவில் துளசிமார்க் திருப்பத்திலிருந்து நதிக்கரை நெடுகிலும் தொழுநோயாளரும் பிச்சைக்காரரும் கூடிவிடுகிறார்கள். அவர்கள் யாத்திரிகர்களைத் தொந்தரவுபடுத்துகிறார்கள் என்று சொல்வதற்கில்லை தான். எனினும், நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வரும் ஆண் பெண் குழந்தைகளாகிய யாத்திரிகர் ஒன்று கூடும் குறிப்பிட்ட அந்த இடத்தில் தொழுநோய் விடுதியை அமைத்திருக்காமல் நதிக்கரையிலேயே வேண்டுமானாலும் சற்றுத் தள்ளி அமைத்திருக்கலாம், அல்லது வேறு இடம் வைத்திருக்கலாம்.

துளசி மார்க்கின் திருப்பத்திலிருந்து நதிக்குச் செல்லும் சாலை பிரிகிறது. அந்தச் சாலை துவங்கும் இடத்தில் கணவனும் மனைவியுமாக இரண்டு பிச்சைக்காரர்கள் சிறிய குடிசை அமைத்து நிரந்தர வாசம் செய்கிறார்கள். குடிசைக்கு வெளியே ஒரு மேடை அமைத்து, அதில் ராமர் படம் வைத்திருக்கிறார்கள். ராமர் படத்திற்கு மாலை அணிவித்து ஊதுவத்திகள் ஏற்றியிருந்தார்கள். அந்த ராமர் படத்தின் முன்பு, கண்ணிழந்த மனைவி ஆர்மோனியத்துடன் ராமரைப்பற்றிப் பாட, கணவன் மத்தளம் வாசிக்கிறார். அந்தப் பஜனை தூரத்திலும் கேட்கும் வகையில் அவர்கள் ஒலிபெருக்கி அமைத்திருக்கிறார்கள். யாத்திரிகர்கள் கூடும் காலைநேரத்தில் மட்டும்தான் இந்தப் பஜனை நடைபெறுகிறது. பஜனை கேட்பதற்கு ரம்மியமாக இருப்பதால் யாத்திரிகர்களும் தாராளமாக அங்கே காசு போடுகிறார்கள். அப்படிக் காசு போடுவதற்கு உரிய தகுதி பெற்றதாகவே அவர்கள் பஜனை அமைந்திருக்கிறது.

சத்திரத்திற்குத் திரும்பும் வழியில் துளசி பூங்காவுக்கு எதிரில் சற்றுத் தூரத்தில் 'காயஸ்த சத்திரம்' என்ற பெயர்ப் பலகையைக் காண நேர்ந்தது. நகரத்தார் சத்திரம் அமைத்திருப்பதைப் போல, காயஸ்தக் குடும்பத்தினர் அந்தச் சத்திரத்தை அமைத்திருக்கிறார்கள் போலும். பெயர்ப் பலகையைக் கண்டதும் கல்கத்தாவும், கல்கத்தாவில் காயஸ்தக் குடும்பத்தில் அவதரித்தவர் அல்லவா சுவாமி விவேகானந்தர் என்ற எண்ணமும் இயல்பாகவே எனக்குத் தோன்றின.

2

நகரத்தார் சத்திரத்திற்குத் திரும்பியதும், ஒரு துணி மூட்டையுடன் கார்த்திகேயன் எனக்காகக் காத்துக்கொண்டிருப்பதைக் கண்டேன். "ஸ்ரீ ராமநவமியன்று இங்கே சத்திரத்திலுள்ள ஸ்ரீராமர் முதலிய விக்கிரங்களுக்கு அணிவிப்பதற்காக, காசியிலுள்ள நகரத்தார் சத்திரத்திலிருந்து உயர்தர ஆடைகளை அனுப்பியிருந்தார்கள். விழா முடிந்துவிட்டதனால் அந்தத் துணிகளை ஒரு சிறிய மூட்டையாகக் கட்டி இதோ வைத்திருக்கிறேன். காசியில் உள்ள சத்திரத்தில் இந்த மூட்டையைத் தாங்கள் கொண்டு போய்க் கொடுக்க முடியுமா?" என்று கேட்டார் கார்த்திகேயன்.

"கரும்பு தின்னக் கூலியா வேண்டும்? ஸ்ரீராமபிரானின் ஆடைகளைக் காசிக்கு எடுத்துச் செல்வதில் எனக்கு என்ன தடை இருக்க முடியும்?' என்று சொல்லி, அவர் கொடுத்த துணிமூட்டையைப் பெற்றுக்கொண்டேன்.

அயோத்தியில் 'விபீஷண குண்டம்' என்ற குளத்திற்கு நான் சென்றதை ஆகஸ்ட் இதழில் குறிப்பிட்டிருந்தேன். இந்த வரிசையில் நான் செல்லாத சில குண்டங்களும் உண்டு. அவை முறையே 1. வித்யா குண்டம், 3. சூரிய குண்டம், 3. கணேச குண்டம், 4. பரத குண்டம், 5. பிருகஸ்பதி குண்டம் என்று வழங்கப்பெறுகின்றன.

அயோத்தியில் யாத்திரிகர்கள் தரிசிக்க வேண்டிய எல்லா முக்கிய இடங்களுக்குமே கார்த்திகேயன் என்னை அழைத்துச் சென்றார். அவற்றை விரிவாக ஆகஸ்ட் இதழில் குறிப்பிட்டிருந்தேன். கார்த்திகேயன் என்னை அழைத்துச் செல்லாதனவும், முக்கியத்துவம் வாய்ந்தவை என்று சொல்ல இயலாதவையுமான வேறு சில இடங்களும் அயோத்தியில் இருக்கவே செய்கின்றன. வரைபடத்திலிருந்து நான் தெரிந்துகொண்ட அந்த இடங்களின் பெயர்கள் வருமாறு:—1. சமண மதத்தவர்களுக்கு உரிய ஜைன் மந்திர் என்ற கோவில், 2. சக்கர தீர்த்தம், 3. காயத்ரி பவன், 4. சீக்கிய மதத்தவர்களின் கோவிலாகிய குருத்வாரா, 5. ராஜ ஸதன், 6. ஹனுமத் ஸதன், 7. மிதிலை பவன், 8. ஹனுமத் நிவாஸ், 9. கங்கா மஹால், 10. நாகேசுவரநாதர் கோவில், 11. நாகநாதர் பவனம் என்பவையே அந்த இடங்களாகும்.

அயோத்தியின் அருகிலேயே அமைந்துள்ள ஓர் ஊர் பைஜாபாத். நான் கேள்விப்பட்டதிலிருந்து அந்த ஊர் அயோத்தியைவிடச் சற்றுப் பெரியது என்று நினைக்கிறேன். போதுமான காலம் இல்லாமல் விரைவில் காசிக்குத் திரும்ப வேண்டியிருந்ததனாலும், ஆள்துணை இல்லாமல் இந்தி தெரியாத நிலையில் நானாகச் செல்ல இயலாததனாலும் பைஜாபாத்திற்கு நான் செல்லவில்லை. டாக்ஸி ஏற்பாடு செய்துகொண்டு வேண்டுமானால் அங்கே சென்றிருக்கலாம். ஆனால் அதற்குச் செலவழிக்கப் பணம் என்னிடம் இல்லை. பைஜாபாத்தில் யாத்திரிகர்கள் தரிசிக்க வேண்டிய இரண்டு முக்கிய இடங்கள் இருக்கின்றன. ஒன்று, ஸ்ரீராமர் வனவாசத்திலிருந்த போது அவரது பாதுகைகளைப் பரதன் வைத்திருந்த இடம். மற்றொன்று, அங்கு ஓடிக்கொண்டிருக்கும் சரயுநதியில் ஸ்ரீராமர் இறங்கி மறைந்ததாகச் சொல்லப்படும் குறிப்பிட்ட ஓர் இடம்.

பகல் உணவைச் சற்று விரைவிலேயே முடித்துக்கொண்டு ரெயில்வே ஸ்டேஷனுக்குக் கிளம்ப நான் தயாரானேன்.

3

நகரத்தார் சத்திரத்தின் எதிரில் கார்த்திகேயனுடன் ரிக்ஷாவுக்காகக் காத்திருந்தபோது, துளசி மார்க்கில் சிலர் ஒரு சடலத்தைச் சரயுநதியில் தகனம் செய்வதற்காக எடுத்துச் சென்றார்கள். 'சடலம்' என்று எழுதும்போது ஜப்பான் நாட்டு மக்களைப் பற்றிய ஒரு கருத்து என் நினைவுக்கு வருகிறது. ஜப்பான் நாட்டில், பள்ளி மாணவர்களை ஆசிரியர்கள் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்வது போல, சுடுகாட்டுக்கு அவ்வப்போது அழைத்துச் செல்கிறார்களாம். மாலையில் சென்று ஓர் இரவு முழுவதும் மாணவர்களும் ஆசிரியர்களும் சுடுகாட்டிலேயே தங்கியிருந்துவிட்டு மறுநாள் காலையில் ஊர் திரும்புவார்களாம். குழந்தைப் பருவத்திலேயே சுடுகாட்டைப் பற்றிய பயம் நீங்க வேண்டும் என்பதற்காகவும், அஞ்சாமை வளர வேண்டும் என்பதற்காகவும் ஜப்பானில் இப்படி ஒரு விசித்திரச் சுற்றுலாவைப் பள்ளிகளில் ஏற்பாடு செய்கிறார்களாம்.

உரையாடிக்கொண்டிருந்தபோது, "ஆண்டு முழுவதும் சரயுநதியில் தண்ணீர் உண்டு" என்று கார்த்திகேயன் கூறினார். "காசியில் கங்கைநதியில் ஆண்டு முழுவதும் தண்ணீர் உண்டு. காரணம், அது ஜீவநதி. ஆனால் சரயுநதியில் எப்படி ஆண்டு முழுவதும் தண்ணீர் இருக்கும்?" என்று நான் அவரிடம் ஆச்சரியத்துடன் வினவினேன். "சரயு

நதியும் ஜீவநதிதான்'' என்று கார்த்திகேயன் பதில் கூறினர். கங்கையின் ஒரு கிளைநதியே சரயுநதி என்ற விவரம் பிறகுதான் எனக்குத் தெரியவந்தது.

''அவதார புருஷர்களாகிய ஸ்ரீராமர், ஸ்ரீகிருஷ்ணர் ஆகியோர் அவதரித்த இரண்டு இடங்களுமே உத்தரப்பிரதேச மாநிலத்தில் அமைந்திருக்கின்றன. மதுராவில் ஸ்ரீகிருஷ்ணர் அவதரித்த இடம் 'ஸ்ரீகிருஷ்ண ஜன்மஸ்தான்' என்று அழைக்கப் படுகிறது. இங்கே அயோத்தியில் ஸ்ரீராமர் பிறந்த இடம் 'ஸ்ரீராம் ஜன்மபூமி' என்று அழைக்கப் படுகிறது. ஸ்ரீராமர் பிறந்த இடத்தில் அயோத்தியில் மசூதி கட்டப்பட்டிருப்பதைப் போல, ஸ்ரீகிருஷ்ணர் பிறந்த இடத்தில் ஔரங்கசீப் கட்டிய மசூதி ஒன்று இருக்கிறது'' என்று கார்த்திகேயனிடம் நான் சொல்லிக் கொண்டிருந்தபோதே ஒரு சைக்கிள் ரிக்ஷா அந்தப் பக்கமாக வருவது தெரிந்தது.

கார்த்திகேயனிடம் விடைபெற்றுக்கொண்டு அந்தச் சைக்கிள் ரிக்ஷாவில் ரெயில்வே ஸ்டேஷனுக்குப் புறப்பட்டேன். ரிக்ஷா பிர்லா கட்டிய கோவிலையும் தர்மசாலையையும் கடந்து ஸ்டேஷனை அடைந்தது. நான் அயோத்தியில் முதலிலும் கடைசியிலும் பார்த்த இடம் பிர்லா கட்டிய கோவில் தான்.

ஸ்டேஷனில் டிக்கெட் வாங்கிக் கொண்டு காத்திருந்தபோது, முதல்நாள் சந்தித்த நாகராஜன் என்ற பாபாஜி வந்தார். அவர் தாம் ஆங்காங்கே சென்றிருந்த க்ஷேத்திரங்களைப்பற்றி என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தபோது, ''அயோத்தி அரசரைத் தாங்கள் சந்தித்தீர்களா?'' என்று கேட்டார். ''இல்லை'' என்று சொன்னேன். ''அயோத்தியின் பண்டைய மன்னர் பரம்பரையைச் சேர்ந்த வாரிசாக ஓர் அரசர் இருக்கிறார். அவர் இரண்டு நாட்களுக்கு முன்பு இந்த ஊரில் தமது குடும்பத்துடன் காரில் சென்றதைப் பார்த்தேன்'' என்று அந்தப் பாபாஜி சொல்லிக்கொண்டிருந்த போது புகைவண்டி பிளாட்பாரத்தில் நுழைந்தது.

நாகராஜனிடம் விடைபெற்றுக்கொண்டேன். பகல் 11-40க்குப் புறப்பட்ட அந்த வண்டி மாலை 3-35க்குக் காசி க்ஷேத்திரத்தை அடைந்தது.

'ஒரு க்ஷேத்திரத்துக்கு ஆத்மசாதகர் ஒருவர் செல்வதற்கும், டூரிஸ்ட் ஒருவர் செல்வதற்கும் மிகுந்த அளவில் வேறுபாடு உண்டு. இப்போது ஒரு டூரிஸ்டைப் போலத்தான் அயோத்திக்கு அவசர அவசரமாகப் போதுமான காலம் இல்லாத நிலையில் சென்று திரும்பியிருக்கிறேன். என்னைப் போன்று ஒரு டூரிஸ்டைப் போல 'நானும் அயோத்திக்குச் சென்றேன்' என்று பெயரளவில் அங்கே சென்று திரும்புவதில் அர்த்தமில்லை. சில நாட்களாவது அங்கேயே தங்கிச் சாதனம் பழக வேண்டும். அடுத்த முறையாவது ஒரு சாதகனாக அயோத்திக்குச் செல்ல ஸ்ரீராமபிரான் அருள் பாலிக்க வேண்டும்' என்ற சிந்தனையுடன் காசியிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் ஸேவாசிரமத்திற்குத் திரும்பினேன்.

திரு வினைதீர்த்தான் செட்டியார் அவர்கள் ஸ்ரீராம விஜயத்தின் டெபாசிட் சந்தாதாரர். அவருக்கு வந்திருந்த ஸ்ரீராமர் அட்டைப்படம் வெளிவந்திருந்த அந்த மாதத்தின் விஜயம் பிரதியைச் சில நாட்களுக்கு முன்பு அவரிடமிருந்து வாங்கியிருந்தேன். நான் காசி திரும்பியபோது, எனக்கு அனுப்பப் பட்டிருந்த விஜயம் இதழ் அலகாபாத் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் முகவரிக்குச் சென்றுவிட்டுக் காசி ஸேவாசிரமம் முகவரிக்குத் திரும்பி வந்திருந்தது. அங்கே ஸேவாசிரமத்தில் வேலை செய்பவரும், திருச்சி மாவட்டத்திலுள்ள திருப்பராய்த்துறையைச் சேர்ந்தவருமாகிய நரேந்திரன் என்ற அன்பர், ''நான் படித்தாகிவிட்டது'' என்று சொல்லிக் கொண்டே, நான் ஸேவாசிரமத்தில் நுழையும்போது ஸ்ரீராமர் அட்டைப்படம் கொண்ட எனக்கு வந்திருந்த பிரதியை என்னிடம் கொடுத்தார்.

அன்று மாலை ஆறுமணி அளவில் காசியிலுள்ள நகரத்தார் சத்திரத்திற்குச் சென்றேன். அங்கிருந்து வாங்கியிருந்த விஜயம் இதழையும், கார்த்திகேயன் அயோத்தியில் கொடுத்த துணிமூட்டையையும் திரு வினைதீர்த்தான் அவர்களிடம் சேர்ப்பித்தேன்.

திரு வினைதீர்த்தான் அவர்கள் ஆழ்ந்த அன்புடனும் அக்கறையுடனும், ''அயோத்தி யாத்திரை எப்படி இருந்தது?'' என்று கேட்டார்.

அவரிடம், ''அயோத்தியில் ஸ்ரீராமரின் வாழ்க்கையில் சம்பந்தப்பட்ட பல இடங்களுக்கும் கார்த்திகேயன் என்னை அழைத்துச் சென்றார். ஆனால் ஸ்ரீராமர் காலத்தைச் சேர்ந்தது என்று சொல்லத் தக்க பழைய அறிகுறி எதையுமே அங்கே காணோமே!'' என்றேன்.

வினைதீர்த்தான் அவர்கள் புன்சிரிப்புடன், ''ஸ்ரீராமர் என்று ஒருவர் பிறந்ததே கிடையாது. ராமாயண நிகழ்ச்சிகள் நாம் நினைப்பது போல ஸ்தூலமாக இந்த உலகத்தில் நடைபெறவேயில்லை.

ராமாயணத்தில் சொல்லப்படும் அயோத்தி என்று இந்த இடத்தையே இனிமுதற்கொண்டு பாவிக்க வேண்டும்'' என்று ஓர் அசரீரி வானத்திலிருந்து, இப்போது அயோத்தி இருக்கும் இடத்தில் நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பு எப்போதோ ஒரு சமயம் கேட்டதாம். அது முதற்கொண்டு அந்த இடம் ஸ்ரீராமரின் அயோத்தியாகக் கருதப்பட்டு வருகிறது என்று ஒரு கருத்துச் சொல்லப்படுகிறது'' என்று கூறினார்.

''பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் கருத்துப்படி, ஸ்ரீராமர் நம்மைப் போல உடல் கொண்டு இந்த உலகில் வாழ்ந்தவர்தாம். பரமஹம்சதேவர் காசிக்கும் பிருந்தாவனத்திற்கும் யாத்திரை சென்றிருக்கிறார். அயோத்திக்கும் அவர் சென்றிருப்பாரானால், ஸ்ரீராமபிரான் பற்றிய மேலும் சில தகவல்கள் அவரது வாய்மொழியாகவே சாஸ்திரப் பிரமாணங்கள் என்று சொல்லத்தக்க வகையில், நவீன காலத்தைச் சேர்ந்த நமக்குக் கிடைத்திருக்கும். ஆனால் அவர் அயோத்திக்குச் செல்லவில்லையே தவிர, அந்த இடத்திற்கு யாத்திரையாக அன்னை சாரதாதேவியாரும் சுவாமி விவேகானந்தரும் விஜயம் செய்திருக்கிறார்கள்'' என்று நான் தெரிவித்தேன்.

வினைதீர்த்தான் அவர்கள் கூறியதாவது: ''ஸ்ரீராமர் காலத்தைச் சேர்ந்தது என்று சொல்லத்தக்க பழைய அறிகுறி எதுவும் அயோத்தியில் இப்போது இல்லாமலிருப்பதில் ஆச்சரியமே இல்லை. தமிழ் நாட்டில், கடலுக்கு அருகில் இருக்கிறது என்று பழைய நூல்கள் குறிப்பிடும் இடங்கள் கடலுக்கே சம்பந்தமில்லாதபடி தொலைவில் இருப்பதை இப்போது நாம் பார்க்கிறோம்.* கடலைப் பற்றிய குறிப்பே இல்லாமல் வரலாற்றில் படிக்கும் இடங்கள் கடற்கரையிலேயே அமைந்திருப்பதை இப்போது நாம் பார்க்கிறோம். காடு மேடாவதையும், மேடு காடாவதையும், காடு என்று வரலாற்றில் சொல்லப்பட்ட பகுதிகளில் நகரம் இருப்பதையும், நகரம் என்று சொல்லப்பட்ட இடத்தில் காடு இருப்பதையும் பார்க்கிறோம். ஒரு சில தலைமுறைகளுக்குள் மயிலாப்பூரும் மந்தைவெளியும் அடையாளமே தெரியாமல் எவ்வளவு மாறிப் போயிருக்கின்றன! ஆகவே ஏதோ ஒரு காலத்தில் வாழ்ந்த ஸ்ரீராமருடன் சம்பந்தப்பட்ட கட்டிடம் எதுவும் இப்போது அயோத்தியில் இல்லாததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை'' என்றார் அவர்.

அவர் சொன்ன கருத்துப் பொருத்தமானதாகவே இருந்தது. ''லெமோரியா கண்டம், பஃறுளி ஆறு என்று வரலாற்றில் உள்ள இடங்களை இப்போது நாம் காண முடிவதில்லை. மகாபலிபுரத்தில் சில கோவில்களைக் கடல் கொண்டுவிட்டதாகச் சொல்கிறார்கள். கண்ணனின் லீலை நடைபெற்ற பிருந்தாவனம் எது என்று பல காலமாக ஒருவருக்கும் தெரியாமலே இருந்தது. இப்போது பிருந்தாவனம் என்று வழங்கப்படும் பகுதியில் முன்பு காடு அடர்ந்து இருந்திருக்கிறது. அந்தக் காட்டு வழியாக ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் செல்ல நேர்ந்தபோது, அதுவே கண்ணன் லீலைகள் புரிந்த பிருந்தாவனம் என்று தமது ஆத்மிக உணர்வால் கண்டறிந்தார். அவர் மூலமாகத்தான் அது முதற்கொண்டு பிருந்தாவனமே உலக மக்களுக்குத் தெரிய வந்தது. ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்புதான் ஸ்ரீகிருஷ்ண சைதன்யர் தோன்றினார். காளியதமனம் நடந்த இடத்தில் குறைந்த அளவே நீர் உள்ள சிறிய ஒரு குளத்தைக் கடந்த மாதத்தின் கடைசி வாரத்தில் பிருந்தாவனம் சென்றபோது பார்த்தேன். அது கோடைக்காலம் என்பதால் தண்ணீர் அந்த இடத்தில் குறைவாக இருந்திருக்கக்கூடும். ஆனால் அந்த இடத்தைப் பார்த்த மறுவினாடியே, 'இங்கேயா காளியன் என்ற பாம்பு வசித்தது? இங்கேயா அவர் அந்தப் பாம்பின்மீது ஏறி விளையாடினார்?' என்று நினைத்தேன். அந்தக் குளம் இப்போது உள்ள இடத்தில் ஒரு சமயம் யமுனை நதி ஓடியதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இப்போதோ அந்த இடத்திலிருந்து சுமார் ஒன்றரை பர்லாங் தூரத்திற்கு அப்பால்தான் யமுனை ஓடுகிறது. கடந்த ஐம்பது ஆண்டுகளில் பிருந்தாவனத்தின் தோற்றமே மாறிவிட்டது என்று அங்கு இருப்பவர்கள் கூறுகிறார்கள்.

''ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்புதான் பிருந்தாவனமே கண்டுபிடிக்கப்பட்டது. அதன் கதையே இப்படியானால், கண்ணன் அவதரிப்பதற்கு முன்பே, வேறு யுகத்தில் அவதரித்தவரான ஸ்ரீராமர் காலத்திய பழைய அயோத்தியின் அடையாளம் எதையும் நாம் காண இயலாமற் போவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லைதான்.

*இந்த உரையாடலின்போது திரு வினைதீர்த்தான் அவர்கள் நாகப்பட்டினத்தையும் மற்றோர் ஊரையும் உதாரணமாகக் கூறினார். நாகப்பட்டினத்தைப் பற்றி அவர் சொன்ன கருத்தும் மற்றோர் ஊரின் பெயரும் எனது நினைவில் இல்லை. ஆகவே அவை பற்றிய அவரது கருத்துக்களை என்னால் இங்குக் குறிப்பிட இயலவில்லை.

"ஸ்ரீராமகிருஷ்ணர் 'சாதகன ஒருவன் வசதிக்கு ஏற்ப ஒரு வருடமாவது, ஆறு மாதமாவது, மூன்று நாளாவது, ஒரு நாளாவது உற்றார் உறவினரிட மிருந்து விலகித் தனிமையில் இருந்து சாதனம் பழக வேண்டும்' என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார். தனிமையில் இருந்து சாதனம் பழக வேண்டும் என்பதை அடிக்கடியும் அவர் தமது உபதேசங் தளில் வலியுறுத்துவதைப் பார்க்கிறோம். ஆனால் அப்படி ஓர் இடம் எங்கே இருக்கிறது? அப்படியே ஓர் இடம் இருந்தாலும் அந்த இடத்திற்குச் செல்லத் தற்காலச் சூழ்நிலையில் வாழும் மனிதனுக்கு வாய்ப்பு வசதிதான் ஏது என்று எனக்குத் தோன்றுவதுண்டு. இப்படி ஓர் வசதியைத் தரும் வயைில் சுவாமி விவேகானந்தரும் சுவாமி துரியானந்தரும் அமெரிக் காவில் முறையே ஆயிரம் தீவுப் பூங்காவிலும் சாந்தி ஆசிரமத்திலும் Retreat (அந்தர்யோகம்) நடத் தினர்கள். இதுவே பிறகு இந்தியாவின் பல பாகங் களிலுமுள்ள ஸ்ரீராமகிருஷ்ண மடங்களில் ஒரு மாதம், ஒரு வாரம், மூன்று நாள், ஒரு நாள் அந்தர் யோகம் என்று துவங்கியது. ஆனால் பரந்த அளவிலான தேவையை இப்போது நடந்து வரும் அந்தர்யோகங்களால் பல காரணங்களை முன்னிட்டு முழு அளவில் நிறைவு செய்ய இயலாது என்று தோன்றுகிறது. இடம், மொழி, நடத்துபவர், கலந்துகொள்பவர்களுக்கு இருக்க வேண்டிய மன நிலையும வசதிகளும் உலகின் பல பாகங்களிலும் வேறுபடுவது இயல்பு. ஆகவே, தமது மனநிலைக் கும் வசதிகளுக்கும் ஏற்பத் தாம் விரும்பும் க்ஷேத் திரங்களுக்குச் சென்று ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியபடி சாதனம் பழகுவதும் ஒரு சிலருக்கு ஏற்றதாக இருக் கக்கூடும். அத்தகைய க்ஷேத்திரங்களில் ஒன்றாக அயோத்தியையும் நிச்சயமாகக் குறிப்பிடலாம்" என்று பல விஷயங்களைப் பற்றி வினைதீர்த்தான் அவர்களிடம் பேசிக்கொண்டிருந்தேன்.

பிறகு அவரிடம் விடை பெற்றுக்கொண்டு மணி கர்ணிகா கட்டத்தில் நீராடி ஸ்ரீவிசுவநாதரையும் அன்னபூர்ணேசுவரியையும் தரிசிக்கும் எண்ணத் துடன் அங்கிருந்து புறப்பட்டேன்.

"வயிறு நிறையப் புல்லைத் தின்ற பசு ஓரிடத்தில் அமைதியாகப் படுத்துக்கொண்டு அசை போடு கிறது. அதுபோல, நீ புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை போய் வந்தால், அந்த க்ஷேத்திரங்களில் உன் உள்ளத்தில் எழுந்த தூய எண்ணங்களைப் பற்றிச் சிந்தித்துத் தனியிடத்தில் உட்கார்ந்து அவற் றிலேயே ஆழ்ந்து போக வேண்டும்" என்று பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் கூறுவது வழக்கம். அவ் விதம் செய்ய முயன்றதில் எழுந்த சில சிந்தனை களே இந்தப் பகுதியில் கட்டுரைகளாக இடம் பெற்றன எனலாம்.

[முற்றும்]

செய்திகள்

☆ ஸ்ரீமத் சுவாமி தபஸ்யானந்தஜி மகராஜ் அவர் களைப் போஷகராகவும், டாக்டர் எஸ். சண்முகம், F.R.I.C.S. அவர்களைத் தலைவராகவும் கொண்டு மதுரையில் 'ஸ்ரீராமகிருஷ்ண நினைவு ஆய்வு நிலைய மும் மருத்துவ மனையும்' இயங்கி வருகின்றன. அங்கு 2—9—79ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை சுவாமி கமலாத்மானந்தர் ஒரு நாள் அந்தர்யோகம் நடத்தினார்.

☆ சிவகாசியிலுள்ள ராஜரத்தினம் பெண்கள் கல்லூரியில் மாணவியருக்கும் ஆசிரியைகளுக் கும் 'இந்தியாவின் ஆன்மிகப் பண்பாடும் தாய்க் குலத்தின் பங்கும்' என்னும் பொருள் பற்றி 3—9—79 மாலை 3 மணி முதல் 4 மணி வரை சுவாமி கமலாத்மானந்தர் உரை நிகழ்த்தினார்.

★ சிவகாசி 'ஸ்ரீசுவாமிஜி சன்மார்க்கப் பேரவை யின் சார்பாக, சிவன் கோவிலில் செப்டம்பர் 3,4,5 தேதிகளில் இரவு 7-45 முதல் 9 மணி வரை சுவாமி கமலாத்மானந்தரின் ஆன்மிக உபந்நியாசங்கள் நடைபெற்றன.

☆ சிவகாசியில் செப்டம்பர் 6ஆம் நாள் காலை 9-15 மணிக்கு அன்னை ஸ்ரீசாரதாமணி மாதர் கழகத்தின் அச்சுப் பள்ளியைத் துவக்கி வைத்து சுவாமி கமலாத்மானந்தர் பேசினார்.

★ விருதுநகரில் சக்தி சங்கத்தின் சார்பாக 6—9—79ஆம் நாள் இரவு 6 மணி முதல் 7-30 வரை சுவாமி கமலாத்மானந்தர் 'உபநிஷதங்களின் சாரம்' என்னும் பொருள் குறித்து உரை நிகழ்த்தினார்.

★ மயிலை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் 10—9—79 ஆம் நாள் இரவு ஸ்ரீமத் சுவாமி ரங்கநாதானந்தஜி மகராஜ் அவர்கள் 'The call of the Divine' என்னும் தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

அருள்நெறிக் கதை

ஸ்ரீசங்கர கிருபை

'நரேந்திரன்'

மிகப் பழமையான காலத்தில் இந்திரத்துயும்னன் என்ற ஓர் அரசர் இருந்தார். அவர் மிகுந்த திறமை சாலியாகவும் சிறந்த கொடையாளியாகவும் தர்ம சிந்தை உள்ளவராகவும் ருந்தார்.

பணத்தை யாசகமாகப்பெற விரும்பித் தம்மிடம் வந்த எவருக்கும் ஆயிரம் பொற்காசுகளுக்குக் குறைவாக இந்திரத்துயும்னன் கொடுத்ததே கிடை யாது. அவருடைய ராஜ்யத்தில் மக்கள் அனைவரும் ஏகாதசியன்று உபவாசம இருப்பது வழக்கம்.

கங்கையின் மணலை எண்ணிவிடலாம். மழைத் தாரைகளையும் எண்ணிவிடலாம். ஒருகால் விண்ணில் ஒளிரும் நட்சத்திரங்களையும்கூட எண்ணி முடித்துவிடலாம்; ஆனல் இந்திரத் துயும்னன் செய்துள்ள புண்ணியச் செயல்களை மட்டும் எண்ணிவிட முடியாது.

இத்தகைய புண்ணிய மகிமையால் இந்திரத் துயும்ன மன்னர் சரீரத்துடன் பிரம்மலோகத்தை அடைந்தார். நூறு கல்பகாலம் கழிந்த பிறகு பிரம்மா மன்னரைப் பார்த்து, "மகாராஜா, சுவர்க்க போகங்களைப் பெறப் புண்ணியம் மட்டும் போதாது. மூன்று உலகங்களையும் அடைத்துக்கொள்ளக்கூடிய அளவுக்குக் களங்கமற்ற புகழ் பெற வேண்டும். இங்குப் பிரம்மலோகத்தில் நீண்ட காலம் நீங்கள் வசித்த காரணத்தினுல் உங்கள் புகழ் குறைந்து விட்டது. எனவே நீங்கள் மீண்டும் பூவுலகில் சென்று பிறந்து புகழ் தேடுங்கள்" என்று கூறினுர்.

பிரம்மா இதைச் சொல்லி முடிப்பதற்குள் இந்திரத் துயும்னன் தாம் பூலோகத்தில் இருப்பதைக் கண்டார். அவர் முன்பு வசித்து வந்த தம்முடைய ராஜ்யமான காம்பில நகரத்திற்குச் சென்ருர். அங்கு வசிப்பவர்களிடம் தம்மைப்பற்றி விசாரித்தார். அவர்கள், "ஐயா! நீங்கள் சொல்லும் இந்திரத் துயும்னன் யாரோ; நாங்கள் அப்படி ஒருவரைப் பற்றிக் கேள்விப்பட்டதில்லை. அவசியம் நீங்கள் இந்திரத்துயும்னனைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்பினுல், யாராவது முதியவர்களைச் சந்தித்து விசாரித்துப் பாருங்கள். நைமிசாரண்யத்தில் ஏழு கல்ப காலமாக வாழ்ந்து வரும் மார்க்கண்டேய முனிவர் இருந்து வருவதாகக் கூறுகிருர்கள். தாங்கள் வேண்டுமானுல் அவரிடம் சென்று இந்தப் பழமையான விஷயத்தைப்பற்றிக் கேட்டுப் பார்க் கலாம்" என்று கூறினுர்கள்.

அரசர் மார்க்கண்டேய முனிவரிடம் சென்ருர். முனிவரை வணங்கி அவர், "சுவாமி! தாங்கள் இந்திரத்துயும்னனை அறிவீர்களா?" என்று கேட் டார். அதற்குப் பதிலாக முனிவர், "இல்லை, நான் அப்படி ஒருவரை அறிந்ததில்லை. ஆனல் என் நண்பனுகிய நாடிஜங்கன் என்ற கொக்குக்கு ஒருவேளை தெரிந்திருக்கலாம். ஆகவே தாங்கள் அதனிடம் சென்று கேட்டுப் பாருங்கள்" என்று கூறினுர்.

நாடிஜங்கன் தன் நீண்ட கதையைக்கூறி, இந்திரத்துயும்னனைப் பற்றித் தன்னுல் எதுவும் சொல்ல இயலாமைக்கு வருந்தியது. ஆனல் அது, தன்னைவிட வயோதிகரான உலூகரிடம் (ஆந்தை) செல்லும்படி பணித்தது.

அனைவரும் தங்கள் இயலாமைக்கு வருத்தம் தெரிவித்தனர். முடிவில், நீண்ட வயதுடைய கழு கரசனிடமும், மானசரோவரில் வசிக்கும் மிருதுவான ஆமையிடமும் அரசனை அனுப்பி வைத்தன.

இந்திரத்துயும்னனுடன் ஆமையைக் காண்பதற்கு மற்றும் சிலர் உடன் சென்றனர்.

இந்திரத்துயும்னனைக் கண்டவுடனேயே ஆமை அவரை அடையாளம் தெரிந்துகொண்டுவிட்டது.

‘‘ஓ, இவன் இந்திரத்துயும்னன் அல்லவா? இவனைப் பார்த்தாலே எனக்கு மிகவும் பயம் உண்டாகிறது! ஏனெனில், இவன் செய்த யாகத்தினால் பூமி மிகவும் உஷ்ணமடைந்தது; அது காரணமாக என் முதுகு வெந்து விட்டது!’’ என்று ஆமை கூறிற்று.

ஆமை கூறியதைக் கேட்டவுடனே அரசருக்குத் தம் புகழின் லட்சணம் விளங்கிவிட்டது. இதுபோன்ற களங்கத்துடன் சுவர்க்கத்திற்கு எவ்விதம் செல்ல முடியும்? என்றாலும் அவர் தமக்குச் சுவர்க்கம் செல்ல வேண்டும் என்ற ஆவல் இருப்பதைத் தெரிவித்தார். எனவே, ஆமை, ‘‘புகழைச் சேகரிக்க வேண்டுமானால் லோமசரிடம் செல்வது நல்லது’’ என்று கூறி, அரசரை லோமசரிடம் அழைத்துச் சென்றது. ஆமை லோமசரை முறைப்படி வணங்கி, இந்திரத்துயும்னன் அவரிடம் சில கேள்விகள் கேட்க விரும்புவதாகக் கூறிற்று.

மகரிஷியாகிய லோமசரின் அனுமதியைப் பெற்ற பிறகு இந்திரத்துயும்னன் அவரிடம் தமது சந்தேகங்களைக் கேட்டார்.

இந்திரத்துயும்னன், ‘‘மகரிஷே! தாங்கள் தங்குவதற்கு ஒரு குடிசைகூட அமைத்துக்கொள்ளாமல் குளிர் வெப்பம் மழை ஆகியவற்றிலிருந்து தப்புவதற்கு ஒரு கை புல்லை மாத்திரம் வைத்துக் கொண்டு இருக்கிறீர்களே, இது ஏன்? இதுதான் என்னுடைய முதற் கேள்வி’’ என்றார்.

முனிவர்: அரசே! நாம் நிச்சயமாக ஒரு நாள் மரணம் அடையத்தான் போகிறோம். இவ்விதம் இந்த உடல் நிச்சயம் அழியப்போவதை அறிந்த பின்பும் நான் ஏன் வீட்டைக் கட்ட வேண்டும்? இளமை, செல்வம், வாழ்க்கை இவை அனைத்தும் சென்று விடக் கூடியவை. இப்படிப்பட்ட நிலையில் தானம் எனப்படும் கொடைதான் சிறந்த வீடாகும்.

இந்திரத்துயும்னன்: முனிவரே! தங்களுக்கு இவ்வளவு ஆயுள் கிடைத்திருப்பதற்குக் காரணம், தாங்கள் செய்த கொடையின் பயனா அல்லது தவமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முனிவர் : அரசே! நான் முன்பு ஒரு காலத்தில் பரம ஏழைச் சூத்திரனாக இருந்தேன். ஒருநாள் நண்பகலில் ஒரு தடாகத்தில் நீருக்குள் மிகப் பெரிய சிவலிங்கத்தைக் கண்டேன். பசியினால் என் உயிர் போய்க்கொண்டிருந்தது. நான் அந்தத் தடாகத்தில் நீராடிவிட்டு அழகிய தாமரை மலர்களால் அந்தச் சிவலிங்கத்தைப் பூஜித்தேன். அதன் பிறகு நான் மேலே தொடர்ந்து செல்லத் தலைப்பட்டேன். பசிக் கொடுமை காரணமாக நடுவழியிலேயே என் உயிர் உடலை விட்டுப் பிரிந்து சென்று விட்டது. அடுத்த பிறவியில் ஓர் அந்தணருடைய வீட்டில் பிறந்தேன். சிவபூஜை செய்ததன் பலனாக முற்பிறவியில் நடைபெற்ற விஷயங்களைப் பற்றிய நினைவு இருந்துகொண்டிருந்தது. எனவே நான் மிகவும் கஷ்டப்பட்டுப் பலவந்தமாக வாய் திறவாமல் மௌன விரதத்தை மேற்கொண்டேன். பெற்றோர் மறைந்த பிறகு உறவினர் என்னை முழு ஊமை என்று எண்ணிக்கொண்டு என்னை விட்டு நீங்கிச் சென்றுவிட்டனர். இவ்விதம் அனைவராலும் கைவிடப்பட்ட நான் அல்லும் பகலும் பகவான் சங்கரரை ஆராதிக்கத் துவங்கினேன். நூறு வருடங்கள் கழிந்தன என் பூஜையினால் மகிழ்ந்த பகவான் சங்கரர் என் முன்னே தோன்றினார். எனக்கு இத்தனை நீண்ட ஆயுளையும் கொடுத்தார்.

முனிவர் சொன்னதைக் கேட்டதும் இந்திரத்துயும்னன் சுவர்க்கம் செல்லும் எண்ணத்தைக் கைவிட்டார். இந்திரத்துயும்னன், கொக்கு, ஆமை, கழுகு, ஆந்தை அனைவரும் முனிவர் லோமசரிடம் சிவதீட்சை பெற்றுத் தவம் புரிந்து மோட்சம் அடைந்தனர்.

நான் சிவனைப் போல மண்ணினால் ஓர் உருவம் செய்தேன். ஆனால் அந்த மண் சிவனல்ல. மண் உருவத்திற்கு நான் செய்யும் பூஜை சிவனிடம் போய்ச் சேருகிறது. ஆனால் அந்த மண் மண்ணாகவே இருக்கிறது. நான், கல்லில் ஒரு விஷ்ணு உருவம் செய்தேன். ஆனால் அந்தக் கல் விஷ்ணு அல்ல. எனினும் நான் செய்யும் பூஜை விஷ்ணுவை அடைகிறது. அந்தக் கல் மாத்திரம் கல்லாகவே இருந்து வருகிறது. கல் ஈயத்தினால் நான் அம்பாள் உருவம் ஒன்றைச் செய்தேன். எனினும், கல் ஈயம் அம்பாள் அல்ல. கல் ஈயம் கல் ஈயமாகவே இருந்தாலும், நான் செய்யும் பூஜையை அம்பாள் ஏற்றுக் கொள்கிறாள். அதுபோலவே, ஞானிகளான முனிவர்களும் பூஜிக்கப்படுகிறார்கள். அந்தப் பூஜை கடவுளையே அடைகிறது. முனிவர் வேறு யாரும் அல்ல, கடவுளின் அன்புக்கு உரிய குழந்தையே; கடவுளின் ஒரு கருவியே.

—பக்த துகாராம்





அன்னபூர்ணு ஸ்தோத்திரம்
ஆதிசங்கரர் அருளியது

தமிழாக்கம்—'அண்ணு' சுப்ரமண்யம்

நித்யானந்தகரீ வராபயகரீ ஸௌந்தர்யரத்னுகரீ
நிர்த்தூதாகில–கோர–பாவனகரீ ப்ரத்யக்ஷ–மாஹேச்வரீ |
ப்ராலேயாசலவம்ச–பாவனகரீ காசீபுராதீச்வரீ
பிக்ஷாம் தேஹி க்ருபாவலம்பனகரீ மாதான்னபூர்ணேச்வரீ ‖ 1 ‖

நித்யானந்தம் என்ற மோக்ஷத்தை அளிப்பவளே! இரு கரங்களால் வரத்தையும் அபயத்தையும் அளிப்பவளே! அழகுக் கடலானவளே! கொடிய பாவங்கள் அனைத்தையும் அறவே அழித்துப் புனித மளிப்பவளே! கண்முன்னே தோன்றும் மகேசுவரியே! மலையரசன் குலத்தைப் புனிதமாக்கியவளே! காசிநகரின் தலைவியே! கருணை என்ற ஊன்றுகோலை அளிப்பவளே! நிறைய அன்னத்தால் உலகைக் காப்பவளான அன்னையே! அன்னபூரணியே, நீ எனக்கு (ஞானப்) பிச்சை அளித்தருள்வாயாக.

நானுரத்ன–விசித்ர–பூஷணகரீ ஹேமாம்பராடம்பரீ
முக்தாஹார–விலம்பமான–விலஸத்–வக்ஷோஜ–கும்பாந்தரீ |
காச்மீராகரு–வாஸிதாங்க–ருசிரே காசீபுராதீச்வரீ
பிக்ஷாம் தேஹி க்ருபாவலம்பனகரீ மாதான்னபூர்ணேச்வரீ ‖ 2 ‖

பலவித ரத்தினங்கள் இழைக்கப்பெற்ற அணிகளை அணிந்தவளே! பொன்னுடையணிந்து பொலிவுற்றவளே! முத்தாரங்கள் நடுவே தொங்க, கும்பங்களையொத்த கொங்கைகளை உடையவளே! காச்மீரத்து அகில் தூபத்தால் நறுமணமூட்டப் பெற்றவளே! இன்பம் அளிப்பவளே! காசிநகரின் தலைவியே! கருணை பொழிபவளே! அன்னையே! அன்னபூரணியே! நீ எனக்கு (ஞானப்) பிச்சை அளித்தருள்வாயாக.

யோகானந்தகரீ ரிபுக்ஷயகரீ தர்மைகநிஷ்டாகரீ
சந்த்ரார்க்கானல–பாஸமான–லஹரீ த்ரைலோக்ய–ரக்ஷாகரீ |
ஸர்வைச்வர்யகரீ தப :பலகரீ காசீபுராதீச்வரீ
பிக்ஷாம் தேஹி க்ருபாவலம்பநகரீ மாதான்னபூர்ணேச்வரீ ‖ 3 ‖

யோகநெறியால் ஏற்படும் ஆனந்தமளிப்பவளே! (அகத்தும் புறத்தும்) பகைவர்களை ஒழிப்பவளே! அறம் ஒன்றிலேயே நிலைத்து இருப்பவளே! சந்திர சூரிய அக்கினியாகிய மூன்றிலும் தோன்றும் தேஜோ வடிவானவளே! மூன்று உலகங்களையும் காப்பவளே! தவத்தின் பயனைக் கொடுப்பவளே! காசி நகரின் தலைவியே! கருணை பொழிபவளே! அன்னையே! அன்னபூரணியே! நீ எனக்கு (ஞானப்) பிச்சை அளித்தருள்வாயாக.

கைலாஸாசல–கந்தராலயகரீ கௌரீ ஹ்யுமா சங்கரீ
கௌமாரீ நிகமார்த்தகோசரகரீ ஹ்யோங்கார–பீஜாக்ஷரீ |
மோக்ஷத்வார–கவாட–பாடனகரீ காசீபுராதீச்வரீ
பிக்ஷாம் தேஹி க்ருபாவலம்பனகரீ மாதான்னபூர்ணேச்வரீ ‖ 4 ‖

கயிலைமலையின் குகையை இருப்பிடமாகக் கொண்டவளே! கௌரீ! உமாதேவி! சங்கரீ! கௌமாரீ! வேதப்பொருளாக விளங்குபவளே! ஓங்கார ஓரெழுத்தின் உட்பொருளானவளே! முக்தி என்னும் நகரத்தின் வாயிற்கதவைத் திறப்பவளே! காசிநகரின் தலைவியே! கருணை பொழிபவளே! அன்னையே! அன்னபூரணியே! நீ எனக்கு ஞானப்) பிச்சை அளித்தருள்வாயாக.

த்ருச்யாத்ருச்ய–விபூதி–பாவனகரீ ப்ரஹ்மாண்டபாண்டோதரீ
லீலாநாடக–ஸூத்ர–பேதனகரீ விஜ்ஞான–தீபாங்குரீ |
ஸ்ரீவிச்வேசமனஃப்ரஸாதனகரீ காசீபுராதீச்வரீ
பிக்ஷாம் தேஹி க்ருபாவலம்பனகரீ மாதான்னபூர்ணேச்வரீ ||5||

உருவமும் அருவமுமான பிரபஞ்ச விபூதி(பெருமை)களுக்கு ஆதாரமானவளே! பிரம்மாண்டத்தை வயிற்றில் அடக்கியுள்ளவளே! (படைத்தல் காத்தல் துடைத்தல் ஆகிய) உலகில் நடைபெறும் பொம்மலாட்டத்தின் சூத்திரக் கயிற்றைத் துண்டிப்பவளே! தத்துவஞானமாகிய விளக்கின் ஒளியாக விளங்குபவளே! விச்வேச்வரப் பெருமான் மனதை இன்புறச் செய்பவளே! காசிநகரின் தலைவியே! கருணைபொழிபவளே! அன்னையே! அன்னபூரணியே! நீ எனக்கு (ஞானப்) பிச்சை அளித்தருள்வாயாக.

உர்வீ ஸர்வஜனேச்வரீ ஜயகரீ மாதா க்ருபாஸாகரீ
நாரீநீலஸமானகுந்தலதரீ நித்யான்னதானேச்வரீ |
ஸாக்ஷான்மோக்ஷகரீ ஸதா சுபகரீ காசீபுராதீச்வரீ
பிக்ஷாம் தேஹி க்ருபாவலம்பனகரீ மாதான்னபூர்ணேச்வரீ ||6||

உலக உருவானவளே! எல்லா மக்களுக்கும் ஈச்வரியே (தலைவியே)! வெற்றியளிப்பவளே! அன்னையே! கருணைக் கடலே! கருநீலக் கூந்தலைப் பின்னலாகக் கொண்டவளே! இடையறாது அன்னமளிப்பவளே! நேராக முக்தியை அளிப்பவளே! எப்போதும் மங்களத்தைச் செய்பவளே! காசிநகரின் தலைவியே! கருணை பொழிபவளே! அன்னையே! அன்னபூரணியே! நீ எனக்கு (ஞானப்) பிச்சை அளித்தருள்வாயாக.

ஆதிக்ஷாந்த–ஸமஸ்த–வர்ணனகரீ சம்போஸ் த்ரிபாவாகரீ
காச்மீரா த்ரிபுரேச்வரீ த்ரிநயனீ விச்வேச்வரீ சர்வரீ |
ஸ்வர்க்கத்வாரகவாடபாடனகரீ காசீபுராதீச்வரீ
பிக்ஷாம் தேஹி க்ருபாவலம்பனகரீ மாதான்னபூர்ணேச்வரீ ||7||

அகாரம் முதல் க்ஷகாரம் வரையிலுள்ள எழுத்துக்களாக இருப்பவளே! பரமேசுவரனின் மூன்று தோற்றங்களுக்கும் (பிரம்மா விஷ்ணு ருத்திரன்) இருப்பிடமானவளே! குங்குமப் பூச்சுடையவளே! முப்புரநாயகியே! முக்கண்ணுடையவளே! விச்வேச்வரியே! ராத்திரி தேவதையின் உருக் கொண்டவளே! சுவர்க்கத்தின் வாயிலைத் திறப்பவளே! காசிநகரின் தலைவியே! கருணை பொழிபவளே! அன்னையே! அன்னபூரணியே! நீ எனக்கு (ஞானப்) பிச்சை அளித்தருள்வாயாக.

தேவீ ஸர்வவிசித்ர–ரத்ன–ரசிதா தாக்ஷாயணீ ஸுந்தரீ
வாமா ஸ்வாதுபயோதரா ப்ரியகரீ ஸௌபாக்ய–மாஹேச்வரீ |
பக்தாபீஷ்டகரீ ஸதா சுபகரீ காசீபுராதீச்வரீ
பிக்ஷாம் தேஹி க்ருபாவலம்பனகரீ மாதான்னபூர்ணேச்வரீ ||8||

ஒளிவடிவினளே! பலவித ரத்தினாபரணங்களால் அலங்கரிக்கப்பெற்றவளே! தக்ஷனது புத்திரியாகத் தோன்றியவளே! அழகுமிக்கவளே! சிவனுடைய இடப் பக்கத்தில் உறைபவளே! இனிய பாலமுதை ஊட்டுபவளே! இனியதைச் செய்பவளே! ஸௌபாக்கியத்துக்கு உறைவிடமான மகேச்வரியே! அடியார் விருப்பத்தை அருள்பவளே! எப்போதும் மங்களம் செய்பவளே! காசிநகரின் தலைவியே! கருணை பொழிபவளே! அன்னையே! அன்னபூரணியே! நீ எனக்கு (ஞானப்) பிச்சை அளித்து அருள்புரிவாயாக.

சந்த்ரார்க்கானல–கோடிகோடி–ஸத்ருசீ சந்த்ராம்சு–பிம்பாதரீ
சந்த்ரார்க்காதி–ஸமான–குண்டலதரீ சந்த்ரார்க்க–வர்ணேச்வரீ |
மாலா–புஸ்தக–பாச–ஸாங்குசதரீ காசீபுராதீச்வரீ |
பிக்ஷாம் தேஹி க்ருபாவலம்பனகரீ மாதான்னபூர்ணேச்வரீ ||9||

கோடிக்கணக்கான சந்திரர் சூரியர் அக்கினி ஆகியோர்களுக்கு ஒப்பானவளே! மதியொளி போன்ற முகம் படைத்தவளே! சந்திரன் சூரியன் அக்கினிகளைப் போன்ற குண்டலங்களை அணிந்தவளே! கதிர்மதிகளைப் போன்ற ஒளி உடையவளே! ஜபமாலை, புத்தகம், பாசக்கயிறு, அங்குசம் ஆகிய

வற்றைக் கைகளில் ஏந்தியவளே! காசிநகரின் தலைவியே! கருணைபொழிபவளே! அன்னையே! அன்னபூரணியே! நீ எனக்கு (ஞானப்) பிச்சையளித்து அருள்புரிவாயாக.

க்ஷத்ரத்ராணகரீ மஹாபயகரீ மாதா க்ருபாஸாகரீ
ஸர்வானந்தகரீ ஸதாசிவகரீ விச்வேச்வரஸ்ரீதரீ
தக்ஷாக்ரந்தகரீ நிராமயகரீ காசீபுராதீச்வரீ
பிக்ஷாம் தேஹி க்ருபாவலம்பனகரீ மாதான்னபூர்ணேச்வரீ ‖ 10 ‖

க்ஷத்திரிய தர்மத்தைக் காப்பவளே! பெரும் பயத்தை நீக்குபவளே! தாயே! கருணைப் பெருங் கடலே! எல்லோருக்கும் இன்பம் நல்குபவளே! எப்போதும் மங்களம் அளிப்பவளே! விச்வேச்வரருடைய பாக்கியத்திற்குக் காரணமானவளே! தக்ஷனை அலறச் செய்தவளே! பிறவிப் பிணியைப் போக்குபவளே! காசிநகரின் தலைவியே! கருணை பொழிபவளே! அன்னையே! அன்னபூரணியே! நீ எனக்கு (ஞானப்) பிச்சை அளித்தருள்வாயாக.


அன்னபூர்ணே ஸதாபூர்ணே சங்கரப்ராணவல்லபே !
ஜ்ஞான-வைராக்ய-ஸித்த்யர்த்தம் பிக்ஷாம் தேஹி ச பார்வதி ‖ 11 ‖

அன்னபூரணியே! என்றும் நிறைவுடன் விளங்குபவளே! சங்கரருடைய பிராணநாயகியே! பார்வதி! ஞானமும் வைராக்கியமும் சித்தித்து நிலைபெறும்பொருட்டு நீ எனக்குப் பிச்சையளித்தருள் வாயாக.

மாதா ச பார்வதீதேவீ பிதா தேவோ மஹேச்வரः |
பாந்தவாः சிவபக்தாச்ச ஸ்வதேசோ புவனத்ரயம் ‖ 12 ‖

மலைமகளான பார்வதீதேவியே நம் அன்னை. தேவதேவனான மகேச்வரனே தந்தை. சிவபக்தர்களே நம் உற்றார். மூவுலகங்களும் நமது சொந்த தேசம்.

ஆதிசங்கரர் அருளிய அன்னபூர்ணு ஸ்தோத்திரம் முற்றும்



ஆண்டவனின் இல்லத்திற்கு அன்புதான் அஸ்திவாரம்.
— ஓர் அறிஞர்

இறைவன் பயங்கொள்ளிகளுக்குத்தான் தன் படைப்பின் பெருமையைப் பிரகாசப்படுத்தும் சக்தியைத் தருவதில்லை.
— எமர்சன்

பொது மக்களுக்குச் சேவை செய்யும் வாய்ப்பை இழக்கக்கூடாது. இதைப் புரிந்துகொண்டால் நம் சமுதாயம் மேம்பட்டுவிடும்.
— டாக்டர் ஸர் எஸ். ராதாகிருஷ்ணன்

தாகத்தால் வருந்துவோர்க்குத் தண்ணீர் கொடு, பசித்தோர்க்கு உணவு கொடு, நோயுற்றோர்க்குச் சேவை செய். அவர் அருகில் ஆண்டவன் இருப்பதைக் காண்பாய்.
— நபிகள்நாயகம்

மாரீசன் ராவணனுக்குக் கூறியது:- 'ராவணனே! எப்போதும் பிரியத்தையே பேசக்கூடிய மனிதர்கள் சுலபமாகக் கிடைப்பார்கள். ஆனால் கசப்பான உண்மையைச் சொல்பவனோ கேட்பவனோ கிடைப்பது அரிது.'
— மாரீசன் (ஆரண்ய காண்டம்)



ஆத்மாவின் நிறைநிலை

சுவாமி அமரானந்தர்

பரமாத்மா, ஜீவாத்மா என்பவை சமயத்துறையில் முக்கியத்துவம் பெற்ற இரண்டு சொற்களாகும். சொற்கள் இரண்டே தவிரப் பொருள் ஒன்றுதான். உள்ள ஒரே மெய்ப்பொருள், புலன்கள் வழியாகக் காணப்படும்போது துண்டிக்கப்பட்ட குறுகிய பல ஜீவாத்மாக்களாகத் தோன்றுகிறது. காணும் ஜீவனிடம் தனித்தன்மை இருப்பதனுல் அவனுக்குத் தனித்தன்மை வாய்ந்த பல ஜீவன்களாகத் தென்படுகிறது. புலன்களுக்கு அப்பால் அந்த மெய்ப்பொருள் உள்ளது உள்ளபடி அகண்ட ஒரே பொருளாக இருக்கிறது.

சுழுத்தியில் ஜீவனுடைய தனித்தன்மை அகன்றுவிடுவதனுல் அங்கு வேறுபடும் பல பொருள்களும் மறைந்து ஆத்மா தன்னில் தானுய், தன் நிறைநிலையில் இருக்கிறது. ஆனுல் மீண்டும் நினைவுக்கு வரும்போது அவனிடத்தில் தனித்தன்மை வந்துவிடுகிறது. விழிப்பு நிலையில் இந்தத் தனித்தன்மையைப் போக்கிக்கொள்வதற்கே எல்லா ஆன்மிகச் சாதனைகளும் அமைந்திருக்கின்றன.

ஜீவாத்மா ஒருவன் பரமாத்மாவைத் தனக்கு ஆதாரமான தலைவனுக வைத்துச் சாதனை செய்து அந்தப் பரமாத்மாவை அனுபூதியில் உணரும்போது தான் வேறு, பரமாத்மன் வேறு அல்ல என்பதை உணருகிருன். அனுபூதி பெற்ற நம்மாழ்வார் 'யானே நீ, என் உடைமையும் நீயே' என்று போற்றுகிருர். இவ்விதம் அனுபூதி பெறும்போது பிறப்பு இறப்பு என்னும் உபாதி நீங்கிவிடுகிறது. இந்தக் கருத்தைக் கைவல்ய நவநீதம் பின்வருமாறு கூறுகிறது:—

தனையும் தனக்கா தாரத் தலைவனை யுங்கண் டானேல்
பின்னைத் தலைவன் தானுய்ப் பிரமமாய்ப் பிறப்புத் தீர்வன்
உன்னைநீ யறிந்தா யாகில் உனக்கொரு கேடு மில்லை
என்னைநீ கேட்கை யாலே ஈதுப தேசித்தேனே.

விசாரத்தில் ஈடுபடும் ஜீவன், தன் ஜீவ வியக்தியையும், அதற்கு ஆதாரமான பரவஸ்துவையும் உணரும்போது, தானே அந்தப் பரவஸ்துவாகிய பிரம்மமாய் இருப்பதை அறிவதனுல், அவனுக்குப் பிறப்பு இறப்பு நீங்கிவிடுகிறது. அதாவது தன் நிஜ சொரூபமாகிய நிறைநிலையை உணரும்போது, அவனுக்கு இந்த ஜனன மரணத்தில் ஏற்படும் உபாதி நீங்கிவிடுகிறது.

விரும்பிக் கேட்காத ஒருவனுக்குச் செய்கிற உபதேசம், செவிடன் காதில் ஊதிய சங்கு போல் ஆகும். அல்லது ஒரு செவியில் கேட்டு மற்ரென்றில் விட்டுவிடுகிற புல்லியனுக்குச் சொன்ன நல்லுபதேசம் போலவும் ஆகிவிடும். இங்கே சீடன் சிரத்தையுடன் செவிசாய்க்கிருன். குரு தத்துவத்தை விளக்குகிருர்.

சுத்தத் தங்கம் இருக்கிறது. அத்துடன் செம்பு ஒருசிறுபாகம் கலந்து நகைகள் செய்யப்படுகின்றன. நகைகளில் கைவளையல், கழுத்துச் சங்கிலி, காதுக் கம்மல்கள், இடுப்பு ஒட்டியாணம் என்று பலவகை இருப்பதைக் காணலாம். இந்த நகைகளுக்கெல்லாம் மூலவஸ்து சொக்கத் தங்கம். இவற்றுக்கு உணர்வு இருக்குமானுல் இவை தங்களை வளையலாகவும் சங்கிலியாகவும் கம்மல்களாகவும் ஒட்டியாணங்களாகவும் தனித்தனி வியக்திகளாக நினைக்கும். பேச்சுத்திறன் இருப்பின் சொல்லவும் செய்யும். அதாவது மனிதன், நான் இராமன், நான் கிருஷ்ணன், கோபாலன், கோவிந்தன் என்று சொல்வது போல. இந்த ஆபரணங்களே தாங்கள் தங்கத்தின் மூலம் செய்யப்பட்டோம் என்று உணருமானுல் தங்களுடைய ஆபரணம் என்னும் தனித்தன்மையை இழந்துவிடுகின்றன.

சொக்கத் தங்கத்தில் செம்பு கலந்தது போல, நிர்மல அகண்ட ஆத்மசொருப பரவஸ்துவாகிய

தன்னை உணரவிடாமல், ஜீவாத்மாவை அறியாமை மறைத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே அகண்ட சொரூபமான தன்னை, உடல்சொரூபமான மனிதனாக நினைக்கிறான். எத்தனை கோடி மனிதர்கள் இருக்கிறார்களோ அத்தனை பேரும் தங்களைத் தனித் தனி வியக்தியாக, ஆபரணங்களைப் போன்று உணருகிறார்கள். ஒரே உடலில்கூடத் தன்னைச் சிறுவனாகவும் வாலிபனாகவும், வயது முதிர்ந்தவனாகவும் வயோதிகனாகவும், மகனாகவும் தம்பியாகவும் அண்ணனாகவும், கணவனாகவும், தந்தையாகவும் பாட்டனாகவும் தனித்தனி வியக்தியாகக் கருதுகிறான்.

ஆபரணங்களுக்கெல்லாம் தங்கம் பொதுவாக இருப்பது போலவும், ஒரே உடலில் இத்தனை மாறுபாட்டுக்கும் இடையில் அந்த உடலே பொதுவாக இருப்பது போலவும், தான் அல்லது நான் என்பது இந்த ஜகத்திலுள்ள அனந்தகோடி ஜீவர்களுக்கும் பொதுவாக இருக்கிறது. ஏன், தேவர்களுக்கும் மூவர்களுக்கும்கூட அந்த நான் பொதுவாக இருக்கிறது.

தனயனுக்குத் தந்தை தலைவன் ஆவது போல, ஒருவகையில் ஆபரணங்களுக்குச் சுத்தத் தங்கம் தலைவனாகிறது. இவ்விதம் தன் ஆத்மாவின் உண்மைச் சொரூபம் ஜீவாத்மாவுக்குத் தலைவன் ஆகிறான். ஆத்மசொரூபத்தை அறியும் முயற்சியில், அதைத் தலைவனாகவும் கடவுளாகவும் வைத்து முயலுகிறான். அந்த முயற்சியின் முடிவில், அதாவது தன்னையும் தனக்கு ஆதாரமான தலைவனையும் காணும் முயற்சியின் இறுதியில், தன் உண்மைச் சொரூபமே, தான் தலைவன் என முனைந்து தேடிய பொருளாகும் என்று உணருகிறான். அதாவது தானே அந்தத் தலைவனாகிய பிரம்மசொரூபம் என்ற அனுபூதி பெறுகிறான்.


தந்தைக்குப் பின் தனயனே தந்தையாகித் தலைவன் ஆவது உலகமரபு ஆகும். ஆபரணங்களை உலையில் இட்டு உருக்கித் திராவகம் கலந்தால், செம்பு எல்லாம் அந்தத் திராவகத்தில் மறைந்து, சொக்கத் தங்கம் ஆகிவிடுகிறது. அதற்கு ஆபரணம் என்ற பிறப்பு இல்லை. இது போலவே ஜீவாத்மா விசாரம் என்னும் ஞானத்தில் அறியாமையை நீக்கி, தான் பிரம்மசொரூபம் என்று உணரும்போது, தன் தனி வியக்தியாகிய ஜீவ வியக்தி என்னும் பிறப்பு மறைந்துவிடுகிறது. நகைகளில் செம்பு கலந்தாலும் சொக்கத் தங்கம் எவ்வளவு இருக்கிறதோ அது அப்படியே, நகைகளாக இருந்தபோதும் அவற்றை அழிக்கும் போதும், இருக்கிறது. உருக்கி எடுக்கும்போது அந்த அளவு கிடைத்துவிடுகிறது. கூடுதல் குறைதல் இல்லை. நகை என்ற உபாதியும் நீங்கிச் சொக்கத் தங்கமாகவே இருக்கிறது.

அது போலவே ஜீவாத்மா தான் அறியாமையில் இருக்கும்போதும் தன் நிஜசொரூபம் நிலைகுலையாமல் இருந்தவாறு இருக்கிறது. அறியாமையை நீக்கி, தன் நிஜசொரூபத்தை அறியும்போது, அவனுக்குத் தன் தனி வியக்தியில் இருந்த உபாதியான ஜனன மரணமும் அதன் விளைவாக விளைகிற கேடுகள் எல்லாமும் நீங்கிவிடுகின்றன. அதுவே, 'உன்னை நீ உணர்ந்தாயாகில் உனக்கொரு கேடுமில்லை' என்று இங்கே கூறப்படுகிறது.

சித் என்னும் பதம், சைதன்யம், பேரறிவு என்று பொருள்படுகிறது. தம் என்னும் பதம் ஜீவவியக்தியைக் குறிக்கிறது. சிந்திக்காமல் தன்மயமாய் இருந்த சித்தும் ஜீவவியக்தியான தம்மும் ஒன்று கூடும்போது சித்தம் ஆகிச் சிந்திக்கும் தன்மை பெற்றுவிடுகிறது. சித்தம் என்பதிலிருந்து, தம் என்னும் சிந்திக்கும் தன்மை வாய்ந்த ஜீவவியக்தி நீங்கும்போது, எஞ்சியிருப்பது நிச்சிந்தை அதாவது சிந்தனையற்ற சித் ஆகிய பிரம்மசொரூபம் ஆகி விடுகிறது. அதுவே ஜீவனின் உண்மைச் சொரூபம் என்னும் ஆத்மாவின் நிறை நிலையாகிறது.

"பந்தப்பட்ட ஆத்மா மனிதனாகும்; மாயையாகிய சங்கிலியால் கட்டுப்படாத ஆத்மா ஈசுவரனாகும்."

—பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்



பத்மாசனம் செய்தால்: நுரையீரலில் உயிர்க்காற்று, திரளாகப் புகும். இடுப்புக் குழியிலுள்ள உறுப்புக்களில் தாராளமாக இரத்த ஓட்டம் ஏற்படும். மனம் ஒருநிலைப்படும். இதனை மூல, உட்டியாண, ஜாலந்தர பந்தங்களுடன் செய்தால் மனோவாக நாடி 'ஊர்த்துவகதி' நடக்கும். மனம் நிலைத்துத் தீய குணங்கள் நீங்கும். மனத்தூய்மையும் நற்குணங்களும் வளரும். அன்பும் அமைதியும் பெருகும்.

கர்மயோகி ரா. ராமகிருஷ்ணன் மறைந்தார்

ஆர். ஆர். என்று ஸ்ரீராமகிருஷ்ண—விவேகானந்த பக்தர்களால் வாய்மணக்க அன்புடன் அழைக்கப் பெற்று வந்த ஆர். ராமகிருஷ்ணன் M.A.,L.T. அவர்கள் 31-8-79ஆம் நாள் வெள்ளிக் கிழமை பகல் 12-40 மணிக்குத் தமது 72ஆம் வயதில் பூதவுடல் நீத்து ஸ்ரீகுருதேவருடன் ஐக்கியமானார்.

1929ஆம் ஆண்டு ஆர். ஆர். பேலூர் மடம் சென்றார். அங்கேயே அவர், பகவான் ஸ்ரீராம கிருஷ்ணரின் நேர்சீடராகிய ஸ்ரீமகாபுருஷ்ஜி மகராஜிடம் முறைப்படி மந்திரதீட்சை பெறும் பேற்றையும் பெற்றார். அதன்பிறகு வாழ்நாள் முழுவதும் கடந்த 50 வருடங்களாக அவர் ஸ்ரீராம கிருஷ்ண—விவேகானந்த இயக்கத்திற்குத் தம்மை முழு அளவில் அர்ப்பணித்துக்கொண்டு அரிய தொண்டாற்றினார்.

1946 முதல் 1963ஆம் ஆண்டு மே மாதம் முடிய 17 ஆண்டுகள் திருப்பராய்த்துறையிலுள்ள விவேகானந்த வித்யாலயம் என்ற உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியராக ஆர். ஆர். பணியாற்றினார்.

ஆங்கிலம், தமிழ், சம்ஸ்கிருதம், வங்காளி ஆகிய மொழிகளை அறிந்திருந்த அவர் ஸ்ரீராமகிருஷ்ண மிஷனின் மாத வெளியீடுகளாகிய ப்ரபுத்த பாரதா, வேதாந்தகேசரி, ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் ஆகிய வற்றில் அனேகக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

1967ஆம் ஆண்டு மே மாதத்தில் சென்னை ஸ்ரீராம கிருஷ்ண மடத்தின் ஆங்கிலப் பத்திரிகையாகிய வேதாந்த கேசரியின் துணை ஆசிரியர் பொறுப்பை ஏற்ற ஆர். ஆர்., 1979 ஆகஸ்டு முடிய, தமது இறுதி நாள் வரை 12 ஆண்டுகளாக அப்பணியை மிகுந்த பக்திசிரத்தையுடன் ஆற்றி வந்தார். ஸ்ரீகுருதேவர், அன்னையார், சுவாமிஜி ஆகியோரின் வாழ்வையும் வாக்கையும் அடிப்படையாகக் கொண்டே அவர் வேதாந்தகேசரியில் எந்தப் பொருளைக் குறித்தும் தலையங்கங்கள் எழுதுவது வழக்கம் Anecdotes and observations, Swamiji speaks to young men, Lessons from the Life and teachings of Sri Ramakrishna போன்ற தொடர்களையும் அவர் வேதாந்தகேசரியில் எழுதி வந்தார்.

1971 முதல் 1976 ஆம் ஆண்டு முடிய ஸ்ரீராம கிருஷ்ணவிஜயம் பத்திரிகைக்கும் ஆர். ஆர். துணை ஆசிரியராக இருந்தார். சிவானந்த வாணி, மனதும் அதைக் கட்டுப்படுத்தும் வழியும், பரமார்த்தப் பிரசங்கம் ஆகியவை அவரால் மொழிபெயர்க்கப் பெற்று விஜயத்தில் தொடராக வெளிவந்துள்ளன. இவை தவிரவும் நிவேதிதை வரலாறு, இளைஞர்களே இவற்றை நீங்கள் அறிய வேண்டும்—என்ற தொடர்களையும் அவர் விஜயத்தின் துணை ஆசிரியராக இருந்தபோது எழுதியுள்ளார்.

'Swami Vivekananda: Awakener of modern India' என்ற நூலை ஆங்கிலத்திலும், 'சுவாமி இராமகிருஷ்ணானந்தர்' என்ற நூலைத் தமிழிலும் அவர் எழுதியுள்ளார். ஸ்ரீசாரதாதேவியார் - அவரது வரலாறும் திருவாக்கும், பக்தி மார்க்கம் ஆகியவை அவரால் மொழிபெயர்க்கப்பெற்று நூல்வடிவில் வந்துள்ளன. சுவாமி விவேகானந்தரின் ஞான தீபம் 9, 10 தொகுதிகளில் இடம் பெற்றுள்ள கடிதங்கள் திரு ஆர். ஆர். அவர்களால் மொழி பெயர்க்கப்பெற்றவையே ஆகும். இத்தகைய மொழிபெயர்ப்புப் பணிகளையும் ஸ்ரீராமகிருஷ்ண மடத்துப் பத்திரிகைகளுக்கு எழுதும் பணியையும் அவர் ஸ்ரீராமகிருஷ்ணரின் பிரசாதம் என்றே ஏற்று அகமகிழ்ந்து வந்தார்.

சிறிது காலம் மயிலை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் நூல்நிலையத்திலும் நூலகராக ஆர். ஆர். பணி யாற்றினார். வேதாந்த சித்தாந்த ஸார சங்கிரகம், ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் ஆகிய தலைப்புகளில் அவர் வாரத்தில் ஒரு நாள் பொதுமக்களுக்கு வகுப்புகள் நடத்தி வந்தார். புதன்கிழமைதோறும் மாலையில் சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மிஷனின் மாணவரில்லத்தில் மாணவர்களுக்கு இந்துமத போதனை வகுப்புகள் நடத்தி வந்தார். தாம் செய்து வந்த மடத்து அன்புப் பணிகளை ஊதியம் எதுவும் பெறாமல் ஸ்ரீராமகிருஷ்ண கைங்கர்ய மாகவே அவர் ஆற்றி வந்தார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக அவர் உடல் பலவீனமுற்றிருந்தார். எனினும் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் இலக்கியப் பணிகளையும் தமது ஆத்ம சாதனைகளையும் அவர் இறுதி நாள் வரையிலும் தவறாமல் இயற்றி வந்தார்.

நூற்றுக்கு நூறு சதவிகிதம் பகவான் ஸ்ரீராம கிருஷ்ணரின் மயமாகவே வாழ்ந்த முதலாவது தரத்தைச் சேர்ந்த உத்தம பக்தர் ஆர். ஆர்.—என்று சுருக்கமாகச் சொல்வதுதான் அவரைப் பற்றிய முழு உண்மை ஆகும். பக்தி, பணிவு, பண்பு, அன்பு ஆகியவற்றின் ஸ்தூல வடிவமாகவே விளங்கிய ஆர். ஆர். தாம் எவரை நினைத்து எவருக் காகக் காலம் முழுவதும் வாழ்ந்தாரோ, கைங்கர்யம் புரிந்தாரோ அந்த ஸ்ரீராமகிருஷ்ணரிடமே சென்று இரண்டறக் கலந்துவிட்டார்.

ஆர் ஆர். ஆன்மா சாந்தி அடையப் பிரார்த்திக் கும் ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் தனது அஞ்சலியை அந்த மகா கர்மயோகிக்கு மனப்பூர்வமாகச் செலுத்துகிறது.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை - 600 004

1979 அக்டோபர் மாத நிகழ்ச்சிகள்

ஸ்ரீ துர்க்கா பூஜை :

1-10-79 திங்கள் : விஜயதசமி—மாலை வழிபாட்டிற்குப் பிறகு சாந்தி ஜலம் தெளித்தல்
5-10-79 வெள்ளி : ஸ்ரீ லட்சுமி பூஜை—(மாலை வழிபாட்டிற்குப் பிறகு)
20-10-79 சனி : ஸ்ரீ காளி பூஜை—(மாலை வழிபாட்டிற்குப் பிறகு)

சத்சங்கம் : ஞாயிறுதோறும் மாலை 4 மணி முதல் 6-30 மணி வரை

4 மணி முதல் 1. ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் (7-10-79 & 21-10-79)
4-30 மணி வரை 2. ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் (14-10-79 & 28-10-79)

மாலை 4-30 மணி முதல் 5-30 மணி வரை சொற்பொழிவு (தமிழ்)

7-10-79 1. ஸ்ரீமத் பாகவதம்—திரு 'அண்ணு' சுப்பிரமணியம்
14-10-79 2. ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்—திரு வி. ஆர். கல்யாணசுந்தர சாஸ்திரிகள்
21-10-79 3. இராமாயணம்—டாக்டர் என். வீழிநாதன்
28-10-79 4. ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்—திரு வி. எஸ். வி. குருசுவாமி சாஸ்திரிகள்

மாலை 5-35 மணி முதல் 6-30 மணி வரை சுவாமி கபீரானந்தர் அவர்கள் ஸ்ரீமத் பகவத்கீதை என்னும் தலைப்பில் அக்டோபர் 7, 14, 21, 28 ஆகிய தேதிகளில் ஆங்கிலத்தில் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

வாரநாட்களில் நடைபெறும் சொற்பொழிவுகள் (மாலை 5-45 மணிக்கு)

1. திங்கள் : ஸ்ரீ ராமகிருஷ்ண கதாமிர்தம்—சுவாமி அமிர்தானந்தர்
2. செவ்வாய் : நாரத பக்தி சூத்திரம் — சுவாமி கபீரானந்தர்
3. புதன் : ஈசாவாஸ்யோபநிஷதம் — சுவாமி அமலாத்மானந்தர்
4. வியாழன் : மகாபாரதம் — திரு 'அண்ணு' சுப்ரமணியம்
5. வெள்ளி : ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேசங்கள்—சுவாமி கமலாத்மானந்தர்

சிறப்புச் சொற்பொழிவுகள்: சனிக்கிழமைகளில் மாலை 5-45 மணிக்கு

6-10-79 1. அத்யாத்தும ராமாயணம்—பி. ராமகிருஷ்ணன்
27-10-79 2. இராமாயணம்—டாக்டர் என். வீழிநாதன்

விசேஷ தினங்கள் :

28-10-79 ஞாயிறு : அந்தர்யோகம் (சாதனை தினம்)
7-10-79 மாலை 7 மணிக்கு ஸ்ரீ ராமகிருஷ்ண நாம சங்கீர்த்தனம்

2-10-79 & 16-10-79 & 31-10-79 ஆகிய ஏகாதசி தினங்களில் மாலை வழிபாட்டிற்குப் பிறகு ஸ்ரீராமநாம சங்கீர்த்தனம் நடைபெறும்.

14-10-79 மாலை 7 மணிக்கு சியாம நாம சங்கீர்த்தனம்
21-10-79 மாலை 7 மணிக்கு ஸ்ரீசாரதா நாம சங்கீர்த்தனம்
28-10-79 மாலை 7 மணிக்கு சிவநாம சங்கீர்த்தனம்

வேறு சில நிகழ்ச்சிகள்:

2-10-79 செவ்வாய் மாலை 5-30 மணிக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேசங்கள் என்ற தலைப்பில் சுவாமி கீர்த்திதானந்தர் அவர்கள் உரை நிகழ்த்துவார்கள். இடம் : இல. 7, கெல்லீஸ் ரோடு, கீழ்ப்பாக்கம்.

மாலை 6-15 மணிக்கு சுவாமி ராகவேசானந்தர் அவர்கள் 5, 12, 19, 26 ஆகிய தேதிகளில் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணமும், பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் என்னும் தலைப்பில் சொற்பொழிவும் நிகழ்த்துவார்கள். இடம் : இல. 18, 9-வது லேன், சாஸ்திரி நகர்.

அனைவரையும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தொலைபேசி : 71231

தலைவர்,
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை-600 004

காந்தியடிகளின் பொன்மொழிகள்



பொன்மொழிகள்

- ★ உண்மையைத் தவிர வேறு அழகு கிடையாது.
- ★ தேசத்தின் வாலிபர்களிடத்தில்தான் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன்.
- ★ கெட்ட உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பக்கூடிய நாடகங்களையும், சினிமாக்களையும், முழு அளவில் ஒதுக்கித் தள்ளிவிட வேண்டும்.
- ★ சுயமாகத் தியாகம் செய்யும் பண்பும் தூய்மையும் சேர்ந்து வடிவெடுத்த சொரூபமாகப் பெண் இல்லாவிட்டால், பிறகு பெண் என்பதற்கே அர்த்தமில்லை.
- ★ மனதை அலட்டிக் கொள்வதைப் போல, உடலைக் கரைப்பது வேறு எதுவும் இல்லை. கடவுளிடம் ஒருவனுக்குக் கொஞ்சமாவது நம்பிக்கை இருந்தால், அவன் எதை நினைத்தும் மனதை அலட்டிக் கொள்வதற்கு வெட்கப்படுவான்.